T03669
R001I03

ஸ்ரீ:

3669

திருஞானமுத்திரைக்கோவை எண். 15.

கம்பராமாயணம்

(ஆழ்வார்திருநகரிப் பிரதிகளின்படி)

திரு வயோத்தியா காண்டம்

THE TANJORE MAHARAJAH SERFOJI'S SARASWATHI MAHAL LIBRARY + TANJORE +

பரிசோதித்தவர்:

ஸ்ரீ K. பக்ஷிராஜையங்கார், B. A., B. L.

அட்வகேட்

திருநெல்வேலி.

காபிரைட்]

[விலை ரூ. 2—4—0 3.50

T003669
Sarasvati Mahal Library. Thanjavur

திருவயோத்தியா காண்டம்

உள்ளடக்கம்

		பக்கம்	கவி
க.	மந்திரப்படலம்	1—13—	100
உ.	மந்திரை சூழ்ச்சிப் படலம்	14—24—	87
௩.	கைகேசி சூழ்வினைப்படலம்	25—38—	110
ச.	நகர்நீங்குபடலம்	39—68—	237
ரு.	தைலமாட்டு படலம்	68—79—	87
சா.	கங்கைப்படலம்	79—83—	27
எ.	குகப்படலம்	83—89—	46
அ.	வனம்புகுபடலம்	89—95—	47
கூ.	சித்திரகூடப்படலம்	95-102—	58
ய.	பள்ளிபடைப் படலம்	103-120—	142
யக.	ஆற்றுப்படலம்	120-128—	59
யஉ.	கங்கைகாண் படலம்	128-137—	72
ய௩.	திருவடிசூட்டு படலம்	137-154—	141

ஆகப் படலம் க௩-க்கு கவி 1213

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:



கம்பராமாயணம்

திரு வயோத்தியா காண்டம்

க. மந்திரப் படலம்

க. வானின் றிழிந்து வரம்பிகழ்ந்த மாபூ தத்தின் வைப்பெங்கும்
ஊனு முயிரு முணர்வும்போ லுள்ளும் புறத்து முளனென்ப
கூனுஞ் சிறிய கோத்தாயுங் கொடுமை யிழைப்பக் குடைதுறந்து
கானுங் கடலுங் கடந்திமையோ ரிடுக்கண் டீர்த்த கழல்வேந்தை.

உ. *மன்னனே யவனியை மகனுக் கீந்துநீ
†பன்னருந் தவம்புரி பருவ மீதெனக்
கன்னமூ லத்திலே கழற வந்தென
மின்னெனக் கருமைபோய் வெளுத்த தோர்மயிர். 1400

ங. †தீங்குழ விராவணன் செய்த பாவந்தான்
ஆங்கொரு நரையதா யணுகிற் றாமென
பாங்கில்வந் திடுநரை படிவக் கண்ணடி
ஆங்கெதிர் கண்டன னவனி காவலன். 1401

ச. மண்ணுறு முரசின மழையி னார்ப்புறப்
பண்ணுறு படர்சினப் பரும யானையான்
கண்ணுறு கவரியின் கற்றை சுற்றுற
எண்ணுறு சூழ்ச்சியி னிருக்கை யெய்தினான். 1402

ரு. புக்கபின் னிருபரும் பொருவில் சுற்றமும்
பக்கமும் பெயர்கெனப் பரிவி னீக்கினான்
ஒக்கநின் றுலகளித் துயோக மெய்திய
சக்கரத் தவனெனத் தமிய னாயினான். 1403

* இவ்வடையாளம் செய்யுணடையின் வேறுபாட்டை யுணர்த்தும்.

† " " முன் அச்சுப்புத்தகங்களில் இல்லாது ஏட்டுச்சுவடியில் உள்ளவை

சு. சந்திரற் குவமைசெய் தரள வெண்குடை
அந்தரத் தளவுநின் றளிக்கு மாணையான்
இந்திரற் கிமையவர் குருவை [1]யேய்ந்ததன்
மந்திரக் கிழவரை வருகென் றேவினான். 1404

எ. பூவரும் பொலங்கழற் பொருவின் மன்னவன்
காவலி லாணைசெய் கடவு ளாமெனத்
தேவரு முனிவருந் தேடுந் தேவர்கள்
மூவரி லொல்வரா முனிவந் தெய்தினான். 1405

அ. குலமுதற் றொன்மையுங் கலையின் குப்பையும்
பலமுதற் கேள்வியும் பயனு மெய்தினார்
நலமுதி னலியினு நடுவு நோக்குவார்
சலமுத லறுத்தருந் தருமந் தாங்கினார். 1406

கூ. *உற்றது கொண்டு மேல்வந் துறுபொரு ளுணருங் கோளார்
மற்றது வினையின் வந்த தாயினு மாற்ற லாற்றும்
பெற்றியர் பிறப்பின் மேன்மைப் பெரியவ ரரிய நூலுங்
கற்றவர் மான நோக்கிற் கவரிமா வனைய நீரார். 1407

ய. காலமு மிடனும் பெற்ற கருவியுந் தெரியக் கற்ற
நூலுற நோக்கித் தெய்வ நுனித்தறங் குறித்து நல்லோர்
சிலரும் புகழ்க்கு வேண்டுஞ் செல்வமுந் தெரிந்து கொண்டு
பால்வரு முறுதி யாவுந் தலைவற்குப் பயக்கு நீரார். 1408

யக. தம்முயிர்க் குறுதி யெண்ணார் தலைமகன் வெகுண்ட போதும்
வெம்மையைத் தாங்கி நீதி விடாதுநின் றுரைக்கு நீரார்
செம்மையிற் றிறம்பல் செய்யாத் தேற்றத்தார் தெரியுங் கால
மும்மையு முணர வல்லோ ரொருமையே மொழிய வல்லார். 1409

யஉ. *நல்லவுந் தீயவு நாடி நாயகற்
கெல்லையின் மருத்துவ ரியல்பி னெண்ணுவார்
ஒல்லைவந் துறுவன வுற்ற பெற்றியின்
றொல்லைநல் வினையென வுதவுஞ் சூழ்ச்சியார். 1410

யங. அறுபதி னாயிர ரென்னு மாண்டகைக்
குறுதியி னொன்றிவர்க் குணர்வென் றுன்னலாம்
பெறலருஞ் சூழ்ச்சியர் திருவின் பெட்பினர்
மறிதிரைக் கடலென வந்து சுற்றினார். 1411

(பிரதி) 1 யேய்ந்தன.

௰௪. முறைமையி னெய்தினர் முந்தி யந்நமில்
அறிவனை வணங்கித்தம் மரசைக் கைதொழு
திறையிடம் வரன்முறை யேறி யேற்றசொற்
றுறையறி பெருமையா னருளுஞ் சூடினர். 1412

௰௫. அன்னவ னருளமைந் திருந்த வாண்டையின்
மன்னனு மவர்முக மரபி னோக்கினன்
உன்னிய தருமம்போ லுறுதி யொன்றுள
தென்னுணர் வனையநீ ரினிது கேட்கென, 1413

௰௬. வெய்யவன் குலமுதல் வேந்தர் மேலவர்
செய்கையி னொருமுறை திறம்ப வின்றியே
வையமென் புயத்திடை நுங்கள் மாட்சியால்
ஐயிரண் டாயிரத் தாறு தாங்கினேன். 1414

௰௭. கன்னியர்க் கமைவருங் கற்பின் மாநிலந்
தன்மையிற் றகைதரத் தருமங் கைதர
மன்னுயிர்க் குறுவதே செய்து வைகினேன்
என்னுயிர்க் குறுவதுஞ் செய்ய எண்ணினேன். 1415

௰௮. விரும்பிய மூப்பெனும் வீடு கண்டயான்
இரும்பிய லனந்தனு மினத்த யானையும்
பெரும்பெயர்க் கிரிகளும் பெயரத் தாங்கிய
அரும்பொறை யினிச்சிறி தாற்ற வாற்றலேன். 1416

௰௯. நங்குலக் குரவர்கள் நவையி னிங்கினர்
தங்குலப் புதல்வரே தரணி தாங்கப்போய்
வெங்குலப் புலன்கெட வீடு நண்ணினர்
எங்குலப் புறுவரென் றெண்ணி நோக்குகேன். 1417

உ௰. வெள்ளநீ ருலகிடை விண்ணி னாகில்
தள்ளரும் பகையெலாந் தவிர்த்து நின்றயான்
[1]கள்ளரிற் கரந்துறை காம மாதியாய்
உள்ளுறு பகைவருக் கொதுங்கி வாழ்வதோ 1418

உக, பஞ்சிமென் றளிரடிப் பாவை கோல்கொள
வெஞ்சினத் தவுணர்தேர் பத்தும் வென்றுளேற்
கெஞ்சலின் மனமெனு மிழுதை யேறிய
அஞ்சுதேர் வெல்லுமீ தருமை யாவதோ. 1419

(பிரதி) 1 கள்வரிற்

உஉ. ஒட்டிய பகைஞர்வந் துருத்த போரிடைப்
பட்டவ ரல்லரேற் பரம ஞானம்போய்த்
தொட்டவ ரல்லரேற் செல்வ [1]மீண்டென
விட்டவ ரல்லரே வியாவர் வீடுளோர். 1420

உங. இறப்பெனு மெய்ம்மையே யிம்மை யாவர்க்கும்
மறப்பெனு மதனின்மேற் கேடு மற்றுண்டோ
துறப்பெனுந் தெப்பமே துணைசெய் யாவிடிற்
பிறப்பெனும் பெருங்கடல் பிழைக்க லாவதோ. 1421

உச. அருஞ்சிறப் பமைவருந் துறவு மவ்வழி
தெரிஞ்சுற வாவருந் தெளிவு மாய்வரும்
பெருஞ்சிறை யுளவெனிற் பிறவி யென்னுமிவ்
விருஞ்சிறை கடத்தலி னினிதி யாவதோ. 1422

உரு. இனியது போதுமிவ் வரசை யென்றுமோ
துனிவரும் புலனெனத் தொடர்ந்து சூழ்கிலா
நனிவரும் பெரும்பகை நவையு நீக்கிய
தனியர சாட்சியிற் றாழு முள்ளமே. 1423

உசு. உம்மையா னுடைமையா னுலகம் யாவையுஞ்
செம்மையி னோம்பிநல் லறமுஞ் செய்தனன்
இம்மையி னுதவியென் னிசைந டாயநீர்
அம்மையு முதவுதற் கருள வேண்டுமால். 1424

உஎ. இழைத்ததொல் வினையையுங் கடக்கு மெண்ணுறத்
தழைத்தபே ரருளுடைத் தவத்தி னாகுமேற்
குழைத்ததோ ரமுதினைக் கோர நீக்கிவே
றழைத்ததி விடத்தினை யருந்த லாகுமோ, 1425

உஅ. கச்சையங் கடகரிக் கழுத்திற் கண்ணகன்
பிச்சமுங் கவிகையும் பெய்யு மின்னிழல்
நிச்சய மன்றெனி னெடிது நாளுண்ட
எச்சிலை நுகர்வதி னின்ப மாவதோ. 1426

உகூ. மைந்தரை யின்மையின் வரம்பில் காலமும்
நொந்தன னிராமனென் னோவை நீக்குவான்
வந்தன னவனினி வருந்த யான்பிழைத்
துய்ந்தனன் போவதோ ருறுதி யெண்ணினேன். 1427

(பிரதி) 1 மூண்டென.

௫௰. இறந்திலன் செருக்களத் திராமன் றாதைதான்
அறந்தலை நிரம்பிமூப் படைந்த பின்னருந்
துறந்தில னென்பதோர் சொல்லுண் டானபின்
பிறந்தன னென்றலாற் பிறிதுண் டாகுமோ. 1428

௫௧. பெருமக னென்வயிற் பிறக்கச் சீதையாந்
திருமகள் மணவினை தெரியக் கண்டயான்
அருமகள் நிறைகுணத் தவனி மாதெனும்
ஒருமகள் மணமுங்கண் டுவப்ப [1]உன்னினேன். 1429

௫௨. நிவப்புறு நிலனெனு நிரம்பு நங்கையுஞ்
சிவப்புறு மலர்மிசைப் பெரிய செல்வியும்
உவப்புறு கணவனை உயிரி னெய்திய
தவப்பயன் தாழ்ப்பது தரும மன்றரோ. 1430

௫௩. ஆதலா லிராமனுக் கரசை நல்கியிப்
பேதமைத் தாய்வரு பிறப்பை நீக்குவான்
மாதவந் தொடங்கிய வனத்தை நண்ணுவேன்
யாதுநுங் கருத்தென இனிது கூறினான். 1431

௫௪. *திரண்ட தோளண்ண லப்படிச் செப்பவுஞ் சிந்தை
புரண்டு மீதிடப் பொங்கிய வுவகை யாங் கெய்த
வெருண்டு மன்னவன் பிரிவென விம்முறு நிலையால்
இரண்டு கன்றினுக் கிரங்குமோ ராவென விருந்தார்.

௫௫. அன்ன ராயினு மரசற்கு மதுவல்ல துறுதி
பின்ன ரில்லெனக் கருதியும் பெருநில வரைப்பின்
மன்னும் மன்னுயிர்க் கிராமனிற் சிறந்தவ ரில்லை
என்ன வுன்னியும் விதியது வலியினு மியைந்தார். 1433

௫௬. இருந்த மந்திரக் கிழவர்த மெண்ணமு மகன்பாற்
பரிந்த சிந்தையும் மன்னவன் கருதிய பயனும்
பொருந்து மன்னுயிர்க் குறுதியும் பொதுவுற நோக்கித்
தெரிந்த நான்மறைத் திசைமுகன் திருமகன் செப்பும்.

௫௭. நிருப நின்குல மரபினோர் நேமிபண் டுருட்டிப்
பெருமை யெய்தினர் யாவரே இராமனைப் பெற்றார்
கரும மும்மிது கற்றுணர்ந் தோர்க்கிது கடவ
தரும மும்மிது தக்கதே நினைந்தனை தகவோய். 1435

(பிரதி) 1 ஓங்கினேன்.

௩அ. புண்ணி யம்புரி வேள்விகள் யாவையும் புரிந்த
அண்ண லேயினி யிருந்தவ மியற்றவு மடுக்கும்
வண்ணமேகலை நிலமகள் மற்றுனைப் பிரிந்து
கண்ணி முந்தில ளெனச்செயு நீதந்த கழலோன். 1436

௩௯. புறத்து நாமொரு பொருளினைப் புகல்கின்ற தெவனோ
அறத்தின் மூர்த்திவந் தவதரித் தானென்ப தல்லாற்
பிறத்தல் யாவையுங் காத்தவை பின்னின்று துடைக்குந்
திறத்தின் மூவருந் திருத்தின திருத்துமத் திறலோன்.

௪௰. பொன்னு யிர்த்தபூ மடந்தையும் புவியெனுந் திருவும்
இன்னு யிர்த்துணை யிவனென நினைக்கின்ற இராமன்
தன்னு யிர்க்கென்கை புல்லிது தற்பயந் தெடுத்த
உன்னு யிர்க்கென நல்லன்மன் னுயிர்க்கெலா முரவோய்.

௪௧. வார மென்னினிப் பகர்வது வைகலு மனையான்
பேரி னால்வரு [1]மிடையுறு பெயர்கின்ற பயத்தால்
வீர நின்குல மைந்தனை வேதியர் முதலோர்
யாரும் தாம்செய்த நல்லறப் பயனென விருப்பார். 1439

௪௨. மண்ணி னு நல்லள் மலர்மகள் கலைமகள் கலையூர்
பெண்ணி னு நல்லள் பெரும்புகழ்ச் சனகிபே ருலகின்
கண்ணி னு [2]நல்லன் கற்றவர் கற்றிலா தவரும்
உண்ணு நீரினு முயிரினு மவனையே யுகப்பார். 1440

௪௩. மனிதர் வானவர் மற்றவ ரறங்கள்காத் தளிப்போர்
இனிய மன்னுயிர்க் கிராமனிற் சிறந்தவ ரில்லை
அனைய தாதலி னரசனுக் குறுபொரு ளறியிற்
புனித மாதவ மல்லதொன் றில்லெனப் புகன்றான்.1441

௪௪. மற்ற வன்சொன்ன வாசகங் கேட்டலு மகனைப்
பெற்ற வன்றினும் பிஞ்ஞகன் பிடித்தவப் பெருவில்
இற்ற வன்றினு மெறிமழு வாளவ னிழுக்க
முற்ற வன்றினும் பெரியதோ ருவகைய னானான். 1442

௪௫. அனைய தாகிய உவகையன் கண்கணீ ரரும்ப
முனிவன் மாமலர்ப் பாதங்கள் முறைமையி னிறைஞ்சி
இனிய சொல்லினை யெம்பெரு மானரு ளன்றோ
தனிய னானிலந் தாங்கிய தவற்கது தகாதோ. 1443

(பிரதி) 1 மிடை யூறு. 2 நல்லர்.

௪௬ எந்தை நீயுவந் திதஞ்சொல வெங்குலத் தரசர்
அந்த மில்லதோர் பெரும்புக ழவனியி னிறுத்தி
முந்து வேள்வியு முடித்துத்தம் மிருவினை முடித்தார்
வந்த தவ்வரு ளெனக்குமென் றுரைசெய்து மகிழ்ந்தான்.

௪௭ பழுதின் மாதவன் பின்னொன்று பணித்தில னிருந்தான்
முழுது மெண்ணுறு மந்திரக் கிழவர்தம் முகத்தால்
எழுதி நீட்டிய விங்கித மிறைமகற் கேற்கத்
தொழுத கையினன் சுமந்திரன் முன்னின்றுசொல்லும்.

௪௮ உறத்த கும்மர சிராமற்கென் றுவக்கின்ற மனத்தைத்
துறத்தி நீயெனுஞ் சொற்சுடு முன்குலத் தொல்லோர்
மறத்தல் செய்கலாத் தருமத்தை மறப்பது வழக்கன்
றறத்தி னாங்கினிக் கொடிதென லாவதொன் றியாதோ.

௪௯ புரைசெய் மால்கரி நிருபர்க்கும் புரத்துறை வோர்க்கும்
உரைசெய் மந்திரக் கிழவர்க்கு முனிவர்க்கு முள்ளம்
முரச மார்ப்பநின் முதன்மணிப் புதல்வனை முறையால்
அரச னாக்கிப்பின் னப்புறத் தடுத்தது புரிவாய். 1447

௫௰ என்ற வாசகஞ் சுமந்திர னியம்பலு மிறைவன்
நன்று சொல்லினை நம்பியை நளிர்முடி சூட்டி
நின்று நின்றது செய்தது விரைவினி னீயே
சென்று கொண்டணை திருமகள் கொழுநனை யென்றான்.

௫௧. அலங்கன் மன்னனை யடிதொழு தவன்மன மனையான்
விலங்கன் மாளிகை வீதியின் விரைவொடு செல்வான்
தலங்கள் யாவையும் பெற்றனன் றனெனத் தளிர்ப்பான்
[1]பொலன்கொள் தேரோடு மிராகவன் றிருமனை புக்கான்

௫௨. பெண்ணி னின்னமு தன்னவ டன்னொடும் பிரியா
வண்ண வெஞ்சிலைக் குரிசிலு மருங்கினி திருப்ப
அண்ண லாண்டிருந் தானமு கருநற வென்னக்
கண்ணு முள்ளமும் வண்டெனக் களிப்புறக் கண்டான். 1450

௫௩. கண்டு கைதொழு தையவிக் கடலிடைக் கிழவோன்
உண்டொர் காரியம் வருகென வுரைத்தன னெனலும்
புண்ட ரீகக்கட் புரவலன் பொருக்கென எழுந்தான்
கொண்டல்போற்சென்று கொடிநெடுந்தேர் மிசைக்கொண்டான்.

(பிரதி) 1 புலன்கொ.

௫௪ முன்றயின் மொய்ம்முகி லெனமுர சார்திட மடவார்
இறைகமூன் றுசங் கார்த்திட விமையவ ரெங்கள்
குறைமுடிந்ததென் றார்த்திடக் குஞ்சியைச் சூழ்ந்த
நறைய லங்கல்வண் டார்த்திட தேர்மிசை நடந்தான்.

௫௫ பணைநி ரந்தன பாட்டொலி நிரந்தன அனங்கன்
கணைநி ரந்தன நாணொலி கறங்கின நிறைப்பேர்
அணைநி ரந்தன வறிவெனும் பெரும்புன லணையார்
பிணைநி ரந்தெனப் பரந்தனர் நாணமும் பிரிந்தார்.

௫௬ நீளெழுத் தொடர் வாயிலிற் குழையொடு நெகிழ்ந்த
ஆளகத்தினொ டரமியத் தலத்தினு மலர்ந்த
வாளரத்தவேல் வண்டொடு கெண்டைகண் மறுகச்
சாளரத்தினும் பூத்தன தாமரை மலர்கள். 1454

௫௭ மண்ட லந்தரு மதிகெழு மழைமுகி லனைய
அண்டர் நாயகன் வரைபுரை யகலத்து ளலங்கற்
றெண்டை வாய்ச்சியர் நிறையொடு நாணொடுந் தொடர்ந்த
கெண்டை யும்முள கிளைபயில் வண்டொடு கிடந்த.

௫௮ சரிந்த பூவுள மழையொடுங் கலையுறத் தாழப்
பரிந்த பூவுள பனிக்கடை முத்தினம் படைப்ப
எரிந்த பூவுள இளமுலை யிழையொடு நுழைய
விரிந்த பூவுள வந்தர வானின்று வீழ்வ. 1456

௫௯ வள்ளு றைகழித் தொளிர்வன வானுறை மதியந்
தள்ளு றச்சுமந் தெழுதரு தமனியக் கொம்பிற்
புள்ளி நுண்பனி பொடிப்பன பொன்னினிற் பொதிந்த
வெள்ளி டைப்பொரீ விரிவன வுளசில விளநீர். 1457

௬௰ ஆய தவ்வழி நிகழ்தர ஆடவ ரெல்லாந்
தாயை முன்னிய கன்றென நின்றுயிர் தளிர்ப்பத்
தூய தம்பியுந் தானுமச் சுமந்திரன் றேர்மேற்
போய கங்குளிர் புரவல னிருந்துழிப் புக்கான். 1458

௬௧ மாதவன் றனை வரன்முறை வணங்கிவா ளுளவன்
பாத பங்கயம் பணிந்தனன் பணிதலு மனையான்
காதல் பொங்கிடக் கண்பனி யுகுத்திடக் கனிவாய்ச்
சீதை கொண்கனைத் திருவுறை மார்பகஞ் சேர்த்தான்

சுஉ. நலங்கொண் மைந்தனைத் தழுவின னென்பதென் னளிர்நீர்
நிலங்க டாங்குறு நிலையினை நிலையிட நினைந்தான்
விலங்க லன்னதிண் டோளையு மெய்த்திரு விருக்கும்
அலங்கன் மார்பையுந் தனதுதோண் மார்புகொண் டளந்தான்.

சுந. ஆண்டு தன்மருங் கிருத்தியங் கன்புற நோக்கிப்
பூண்ட போர்மழு வுடையவ னெடும்புகழ் குறுக
நீண்ட தோளினுய் நிற்பயந் தெடுத்தயா னின்னை
வேண்டி யெய்திட வீவதொன் றுளதென விளம்பும்.

சுச. அய்ய சாலவு மலசின ன்ரும்பெரு மூப்பும்
மெய்ய தாயது மேவிடப் பெரும்பரம் விசித்து
தொய்யன் மாநில முழுவதுஞ் சுமையுறுஞ் சிறையான்
உய்ய லாவதோர் நெறிபுக வுதவிட வேண்டும். 1462

சுரு. உரிமை மைந்தரைப் பெறுகின்ற துறுபிணி நீங்கி
யிருமையும் பெறற் கென்பது முன்பினோ ரியற்கை
தரும மன்னநிற் றந்தயான் றளர்வது தகவோ
கரும மென்வயிற் செய்யினென் கட்டுரை கோடி.1463

சுசு. மைந்த நங்குல மரபினில் வந்தருள் வேந்தர்
தந்த மக்களே கடைமுறை நெடுநிலந் தாங்க
ஐந்தொ டாகிய முப்பகை மருங்கற வகற்றி
உய்ந்து போயினு ரூழிநின் றெண்ணினு முலவார். 1464

சுஎ. முன்னை யூழ்வினைப் பயத்தினும் முற்றிய வேள்விப்
பின்னை யெய்திய நலத்தினு மரிதினிற் பெற்றேன்
இன்னம் யானிந்த வரசிய விடும்பையி னின்றால்
நின்னை யீன்றுள பயத்தினு ணிரம்பிய தியாதோ. 1465

சுஅ. ஒருத்த லைப்பரத் தொருத்தலைப் பங்குவி னூர்தி
எருத்தம் வீங்கிநின் றலமரச் சுமந்திட ருழக்கும்
வருத்த நீக்கிய வரம்பறு திருவினை மருவும்
அருத்தி யுண்டெனக் கையவ தருளிட வேண்டும். 1466

சுகூ. ஆளு நன்னெறிக் கமைவரு மமைதியின் ருக
நாளு நங்குல நாயக னறைவிரி கமலத்
தாளி னல்கிய கங்கையைத் தந்துதந் தையரை
மீள்வி லாவுல கேற்றினு னொருமகன் மேனுள். 1467

எய. மன்னர் வானவ ரல்லர்மேல் வானவர்க் கரசாம்
பொன்னின் வார்கழற் புரந்தரன் போலிய ரல்லர்
பின்னு மாதவந் தொடங்கினோன் பிழைத்தவ ரல்லர்
சொன்ம ருமகப் பெற்றவ ரருந்துயர் துறந்தார்.

எக. அனைய தாதலி னருந்துயர்ப் பெரும்பர மரசன்
வினையி னென்வயின் வைத்தன னெனக்கொள வேண்டாம்
புனையு மாமுடி புனைந்திந்த நல்லறம் புரக்க
நினைய வேண்டுநா னின்வயிற் பெறுவதீ தென்றான்.

எஉ. தாதை யப்பரி சுரைசெயத் தாமரைக் கண்ணன்
காத லுற்றில னிகழ்ந்திலன் கடனிதென் றுணர்ந்து
யாது கொற்றவ னேவிய ததுசெய லன்றோ
நீதி யெற்கென நினைந்துமப் பணிதலை நின்றான். 1470

எங. குரிசில் சிந்தையை மனக்கொண்டு கொற்றவெண் குடையான்
தருதி யிவ்வர மெனச்சொல்லி யுயிருறத் தழுவிச்
சுருதி யன்னதன் மந்திரச் சுற்றமுஞ் சுற்றப்
பொருவின் மேருவும் பொருவருங் கோயில்போய்ப் புக்கான்.

எச. நிவந்த வந்தணர் நெடுந்தகை மன்னவர் நகரத்
துவந்த மைந்தர்கள் மடந்தைய ருழையுழைத் தொடரச்
சுமந்தி ரன்றடந் தேர்மிசைச் சுந்தரத் திரடோள்
அமைந்த மைந்தனுந் தன்னெடுங் கோயில்சென் றடைந்தான்.

எரு. வென்றி வேந்தரை வருகென வுவணம்வீற் றிருந்த
பொன்றி ணிந்ததோட் டரும்பெற லிலச்சினை போக்கி
நன்று சித்திர நளிர்முடி கவித்தற்கு நல்லீர்
சென்று வேண்டுவ வரன்முறை யமைக்கெனச் செப்ப.

எசு. உரிய மாதவ னுள்ளிதென் றுவந்தனன் விரைந்தோர்
பொருவி றேர்மிசை யந்தணர் குழாத்தொடும் போக
நிருபர் கேண்மின்க ளிராமற்கு நெறிமுறை மையினாற்
றிருவும் பூமியுஞ் சிந்தையிற் சிறந்தன வென்றான். 1474

எஎ. இறைவன் சொல்லெனு மின்னற வருந்தினர் யாரு
முறையி னின்றிலர் முந்துறு களியிடை மூழ்கி
நிறையு நெஞ்சிடை யுவகைபோய் மயிர்வழி நிமிர
உறையும் விண்ணக முடலொடு மெய்தின ரொத்தார்.

௭௮ ஒத்த சிந்தைய ருவகையி ைெருவரி ைெருவர்
தத்தமக் குற்ற வரசெனத் தழைக்கின்ற மனத்தார்
முத்த வெண்குடை மன்னனை முறைமுறை தொழுவார்
அத்த நன்றென வன்பினே டறிவிப்ப தானார். 1476

௭௯ *மூவெழு முறைமையெங் குலங்கண் [1]முற்றுற
பூவெழு மழுவினுற் பொருது போக்கிய
சேவகன் சேவகஞ் செகுத்த சேவகற்
காவலிவ் வுலகமீ தறனென் முரரோ. 1477

௮௰ வேறிலா மன்னரும் விரும்பி யின்னது
கூறினு ரதுமனக் கொண்ட கொற்றவன்
ஊறிய வுவகையை யொளிக்குஞ் சிந்தையான்
மாறுமோ ரளவைசால் வாய்மை கூறினன். 1478

௮௧ மகன்வயி னன்பினுன் மயங்கி யானிது
புகலநீர் புகன்றவப் பொம்மல் வாசகம்
உகவையின் மொழிந்ததோ வுள்ள நோக்கியோ
தகவென நினைந்ததெத் தன்மையா லென்றான். 1479

௮௨ இவ்வகை யுரைசெய விருந்த வேந்தர்கள்
செவ்வியோய் நின்றிரு மகற்குத் தேயத்தோர்
அவ்வவர்க் கவ்வவ ராற்ற வாற்றுமென்
றெவ்வமி லன்பினை யினிது கேளெனு. 1480

௮௩ தானமுந் தருமமுந் தவமுந் தன்மைசேர்
ஞானமு நல்லவர்ப் பேணு நன்மையும்
மானவ வெவையுநின் மகற்கு வைகலும்
ஈனமில் செல்வம்வந் தெதிர்ந்த தென்னவே. 1481

௮௪ ஊருணி நிறையவு முதவு [2]மாடொரு
[3]பார்நுகர் பயன்மரம் பழுத்தற் ருகவுங்
கார்மழை பொழியவுங் கழனி வாய்நதி
வார்புனல் பெருகவு மறுக்கின் ருர்[illegible] யார். 1482

௮௫ பனையவா நெடுங்கரப் பரும யானையாய்
நினையவாந் தன்மையை நிமிர்ந்த மன்னுயிர்க்
கெனையவா றன்பின் னிராம னீண்டவற்
கனையவா றன்பின வவையு மென்பவே. 1483

(பிரதி) 1 மூப்புற. 2. மாவொரு, மாயொரு. 3 பார்நுகர் பைமரம் பழுதற்ருகவும், பார்நுகரமைமரம் பழுதற்ருகவும்.

௮௬ மொழிந்து கேட்டலு மொய்த்த நெஞ்சினைப்
பொழிந்தபே ருவகையன் பொங்கு காதலன்
கழிந்ததோர் துயரினன் களிக்குஞ் சிந்தையன்
வழிந்தகண் ணீரினன் மன்னன் கூறுவான். 1484

௮௭ செம்மையிற் றருமத்திற் செயலிற் றீங்கென்பார்
வெம்மையி னொழுக்கத்தின் மேன்மை மேவினீர்
என்மக னென்பதெ னினிதி னுங்கவன்
நும்மகன் கையடை நோக்கு மீங்கென்றான். 1485

௮௮ அரசவை விடுத்தபி னானை மன்னனும்
புரைதபு நாளொடும் பொழுது போக்குவான்
உரைதெரி கணிதரை யொருங்கு கொண்டொரு
வரைபொரு மண்டப மருங்கு போயினான். 1486

௮௯ * ஆண்ட வந்நிலை யாக வறிந்தவர்
பூண்ட காதலர் பூட்டவிழ் கொங்கையர்
நீண்ட கூந்தலர் நீள்கலை தாங்கலர்
ஈண்ட வோடின ரீற்றிடை யிற்றிலர். 1487

௯௰ ஆடு கின்றனர் பண்ணடை யின்றியே
பாடு கின்றனர் பார்த்தவர்க் கேகரஞ்
சூடு கின்றனர் சொல்லுவ தோர்கிலார்
மாடு சென்றனர் மங்கையர் நால்வரே. 1488

௯௧ கண்ட மாதரைக் காதலி னோக்கினாள்
கொண்டல் வண்ணனை நல்கிய கோசலை
உண்டு பேருவ கைப்பொரு ளென்றலுந்
தொண்டை வாயினிர் சொல்லுமி னீண்டென்றாள்,

௯௨ மன்னெ டுங்கழல் வந்து வணங்கிடப்
பன்னெ டும்பகல் பாரளிப் பாயென
நின்னெ டும்புதல் வன்றனை நேமியான்
தொன்னெ டும்முடி சூட்டுகின் றானென்றார் 1490

௯௩ சிறக்குஞ் செல்வ மகற்கெனச் சிந்தையிற்
பிறக்கும் பேருவ கைக்கடல் பெட்பற
வறக்கு மாவட வைக்கன லாகுமாற்
றிறக்கு மன்னவ னென்னுந் துணுக்கமே. 1491

கூச அன்ன ளாயு மரும்பெற லாரமும்
நன்ம ணிக்குவை யும்பல நல்கித்தன்
துன்னு காதற் சுமித்திரை யோடும்போய்
மின்னு நேமியன் மேவிட மேவினாள். 1492

கூரு மேவி மென்மெல ராணில மாதெனுந்
தேவி மரோடுந் தேவர்கள் யாவர்க்கும்
ஆவி யும்மறி வும்முத லாயவன்
மாவு லாமலர்ப் பாதம் வணங்கினாள். 1493

கூசா என்வ யிற்றரு மைந்தற் கினியருள்
உன்வ யத்ததென் றுளல கியாவையும்
மன்வ யிற்றி லடக்கிய மாயனைத்
தன்வ யிற்றி லடக்குந் தவத்தினாள். 1494

கூஎ என்றி றைஞ்சியவ் விந்திரை கேள்வனுக்
கொன்று நான்மறை யோதிய பூசனை
நன்றி ழைத்தவ னல்ல தவர்க்கெலாங்
கன்று டைப்பசு வின்கட னல்கினாள் 1495

கூஅ. பொன்னு மாமணி யும்புனை சாந்தமுங்
கன்னி மாரொடுங் காசினி யீட்டமும்
இன்ன யாவையு மீந்தன ளந்தணர்க்
கன்ன முந்தனி ராடையு நல்கினாள். 1496

கூகூ. நல்கி நாயக னும்மமர்ப் பாதத்தைப்
புல்கிப் போற்றி வணங்கிப் புரையிலா
மல்லன் மாமணிக் கோயில் வலங்கொளாத்
தொல்லை நோன்புகள் யாவுந் தொடங்கினாள். 1497

ள *கடிகமழ் தாரினான் கணித மாக்களை
முடிவுற நோக்கியோர் முகமன் கூறிப்பின்
வடிமழு வாளவற் கடந்த மைந்தற்கு
முடிபுனை முதன்மைநாள் மொழிமி னென்றனன். 1498

க. மந்திரப் படலம் முற்றும்.

உ. மந்தரை சூழ்ச்சிப் படலம்

க பொருந்துநா ளனையுன் புதல்வற் கென்றலுந்
திருந்தினு ரினியசொற் கேட்ட செய்கழற்
பெருந்திண்மால் யானையான் பிழைப்பில் செய்தவம்
மருந்தனுன் வருகென வசிட்ட னெய்தினுன். 1499

உ நல்லியன் மங்கல நாளு நாளையவ்
வில்லிய ரேுளவற் கின்று வேண்டுவ
ஒல்லையி லியற்றியவ் வுறுதி வார்த்தையுஞ்
சொல்லுதி நீயெனத் தொழுது சொல்லினுன். 1500

ங முனிவனு முவகையுந் தானு முந்துவான்
மனுகுல நாயகன் வாயின் முன்னினுன்
அனையவர் வரவுகேட் டலங்கல் வீரனும்
இனிதெதிர் கொண்டுதன் னிருக்கை யெய்தினுன்.

ச *ஒல்க வில்தவத் துத்தம னேது நான்
மல்கு கேள்வியின் வள்ளலை நோக்கினுன்
புல்கு காதற் புரவலன் போர்வலாய்
நல்கு நானில நாளை நினைக்கென்றுன். 1502

ரு என்று பின்னு மிராமனை நோக்கினுன்
ஒன்று கூறுவ துண்டுறு திப்பொருள்
நன்று கேட்டுக் கடைப்பிடி நன்கெனுத்
துன்று தாரவற் சொல்லுதன் மேயினுன். 1503

சு கரிய மாலினுங் கண்ணுத லானினும்
உரிய தாமரை மேலுறை வானினும்
விரியும் பூதமொ ரைந்தினு மெய்யினும்
பெரிய ரந்தணர் பேணுதி யுள்ளத்தால். 1504

எ அந்த ணாளர் முனியவு மாங்கவர்
சிந்தை யாலருள் செய்யவுந் தேவருள்
1நொந்து ளாரையு நொய்துயர்ந் தாரையு
மைந்த வெண்ண வரம்புமுண் டாங்கொலோ. 1505

அ அனைய ராதலி னையவவ் வெய்யதீ
வினையி னீங்கிய வேதியர் தாளிணை
புனையுஞ் சென்னியை யாய்ப்புகழ்ந் தேத்துதி
இனிய கூறிநின் றேயது செய்தியால். 1506

(பிரதி) 1 உந்தினுரையு.

௬ ஆவ தற்கு மழிவ்தற் கும்மவர்
ஏவ னிற்கும் விதியுமென் ருலினி
யாவ தெப்பொரு ளிம்மையு மம்மையுந்
தேவ ரைப்பர வுந்துணை சேர்த்ததே. 1507

௰ உருளு நேமியு மொண்கவ ரெஃகமும்
மருளில் வாணியும் வல்லவர் மூவர்க்குந்
தெருளு நல்லற மும்மனச் செம்மையும்
அருளு நீத்தபி னுவதுண் டாகுமே. 1508

௰௧ சூது முந்துறச் சொல்லிய மாத்துயர்
நீதி மைந்த நினக்கிலே யாயினும்
ஏத மென்பன யாவையு மெய்துதற்
கோது மூல மவையென வோதியே. 1509

௰௨ யாரொ டும்பகை கொள்ளில தானபின்
போரொ டுங்கும் புகழொடுங் காதுதன்
தாரொ டுங்கல்செய் யாதது தக்கபின்
வேரொ டுங்கெட வேண்டலுண் டாகுமே. 1510

௰௩ கோளு மைம்பொறி யுங்குறை [1]யப்பொருள்
நாளுங் கண்டு நடுக்குறு நோன்மையின்
ஆளு மவ்வர செய்தரி தன்னது
வாளின் மேல்வரு மாதவ மைந்தனே 1511

௰௪ உமைக்கு நாதற்கு மோங்குபுள் ளூர்திக்கும்
இமைப்பி னுட்டமோ ரெட்டுடை யானுக்குஞ்
சமைத்த தொல்வினை தாங்கின ராயினும்
அமைச்சர் சொல்வழி யாற்றுத லாற்றலே. 1512

௰௫ என்பு தோலுடை யார்க்குமெல் லார்க்குந்தன்
வன்பு லப்பகை மாசற மாய்ப்பரேல்
முன்பு பின்பன்றி மூவுல கத்தினும்
அன்பி னல்லதொ ராக்கமுண் டாகுமோ. 1513

௰௬ வைய மன்னுயி ராகவும் மன்னுயிர்
உய்யத் தாங்கு முடலன்ன மன்னருக்
கைய மின்றி யறங்கட வாதருள்
மெய்யி னின்றபின் வேள்வியும் வேண்டுமோ. 1514

(பிரதி) 1 யப்பெரு.

௰௭ இனிய சொல்லின னீகைய னெண்ணினன்
வினையன் றூயன் விழுமியன் வென்றியன்
நினையு நீதி நெறிகட வானெனில்
அனைய மன்னற் கழிவுமுண் டாகுமோ. 1515

௰௮ சீல மல்லன நீக்கிச்செம் பொற்றுலைத்
தால மன்ன தனிநிலை தாங்கிய
ஞால மன்னற்கு நல்லவர் நோக்கிய
கால மல்லது கண்ணுமுண் டாகுமோ. 1516

௰௯ ஓர்வி னல்வினை யூற்றத்தி னானுரை
சோர்வி றொல்விதி பெற்றுள தென்றரோ
தீர்வி லன்பு செலுத்தலிற் செவ்வியோர்
ஆர்வ மன்னவற் காயுத மாவதே. 1517

௨௦ தூம கேது புவிக்கெனத் தோன்றிய
வாம மேகலை மங்கைய ரால்வருங்
காம மில்லை யெனிற்கடுங் கேடெனு
நாம மில்லை நரகமு மில்லையே. 1518

௨௧ ஏனை நீதி யினையவும் வையகப்
போன கற்கு விளம்பிப் புலன்கொளீஇ
ஆன வன்னொடு மாயிர மௌலியான்
தான நண்ணினன் றத்துவ நண்ணினான். 1519

௨௨ நண்ணி நாகணை வள்ளலை நான்மறைப்
புண்ணி யப்புன லாட்டிப் புலமையோர்
எண்ணு நல்வினை முற்றுவித் தேற்றினான்
வெண்ணி றத்த தருப்பை விரித்தரோ. 1520

௨௩ *ஏற்றிய வாண்டகை யினிதி ருந்தபின்
நாற்றட மார்பனு நொய்தி னெய்திப்போய்
ஆற்றல்சால் மன்னவற் குணர்த்தி னானவன்
சாற்றுக நகரணி சமைக்க வென்றனன். 1521

௨௪ ஏவிய வள்ளுவ னிராம னாளையே
பூமகள் கொழுநனாய்ப் புனையு மோலியிக்
கோநக ரணிகெனக் கொட்டும் பேரியத்
தேவருங் களிகொளத் திரிந்து சாற்றினான். 1522

உரு கவியமை கீர்த்தியக் காளை நாளையே
புவியமை மணிமுடி புனையு மென்றசொல்
செவியமை நுகர்ச்சிய தெனினுந் தேவர்தம்
அவியமு தன்னதந் நகரு ளார்க்கெலாம். 1523

உசு ஆர்த்தனர் களித்தன ராடிப் பாடினர்
வேர்த்தனர் தடித்தனர் சிலிர்த்து மெய்ம்மயிர்
போர்த்தொழில் மன்னனைப் புகழ்ந்து வாழ்த்தினர்
தூர்த்தன ரிருநிதி சொல்லி னார்க்கெலாம். 1524

உஎ திணிசுட ரிரவியைத் திருத்து [1]மாறுமப்
பணியிடைப் பள்ளியான் பரந்த மார்பிடை
மணியிடை வேகடம் வகுக்கு [2]மாறும்போல்
அணிநக ரணிந்தன ருத்தி மாக்களே. 1525

உஅ வெள்ளிய கரியன செய்ய வேறுள
கொள்ளைவான் கொடிநகர்க் குழாங்கொண் டாடுவ
கள்ளவிழ் கோதையான் செல்வங் காணிய
புள்ளெலாந் திருநகர் புகுந்த போன்றவே. 1526

உகூ மங்கையர் குறங்கென வகுத்த வாழைகள்
அங்கவர் கழுத்தெனக் கமுக மான்றன
தங்கொளி முறுவலிற் முமம னான்றன
கொங்கையி னிரைத்தன கனக கும்பமே. 1527

ந0 முதிரொளி யுயிர்த்தன முடுகிக் காலையிற்
கதிரவன் வேறொரு கவின்கொண் டானென
மதிதொட [3]நிவந்தன மகர தோரணம்
புதியன வலர்ந்தன புதவ ராசியே. 1528

நக துனியறு செம்மணித் தூண நீறுதோய்
வனிதையோர் கூற்றினன் வடிவு காட்டின
புனைதுகி லுறைதொறும் பொலிந்து தோன்றுவ
பனிபொதி கதிரெனப் பவளத் தூண்களே. 1529

நஉ முத்திடை முழுநிலா முளைத்த மொய்ம்மணிப்
பத்தியா விளவெயில் பரப்ப நீலத்தின்
தொத்தின மிருள்வரத் தூண்டச் சோதிட
வித்தகர் விதித்தநா ளொத்த வீதியே. 1530

(பிரதி) 1 மாறும்பைப்; யாறுபைப். 2 மாறுபோல். 3 நிவந்ததோர்

௩௩ ஆடன்மான் றேர்க்குழா மவனி காணிய
வீடுசே ருலகின்வீழ் விமானம் போன்றன
ஓடைவெங் கடகளி றுகைய மால்வரை
தேடருங் கதிரொடுந் திரிவ போன்றவே. 1531

௩௪ வளங்கெழு திருநகர் வைகும் வைகலும்
பளிங்குடை நெடுஞ்சுவர் முத்தின் பத்தியிற்
கிளர்ந்தெழு சுடர்மணி யிருளைக் கீறலாற்
தளர்ந்தில பிரிந்தில சக்கர வாளமே. 1532

௩௫ பூமழை புனன்மழை புதுமென் சுண்ணத்தின்
தூமழை தரளத்தின் றூமில் வெண்மழை
தாமிழை நெரித்தவிற் றகர்ந்த பொன்மழை
மாமழை நிகர்த்தன மாட வீதியே. 1533

௩௬ காரொடுந் தொடர்மதக் களிறு சென்றன
வாரொடு தொடர்கழன் மைந்த ராமெனத்
தாரொடு நடந்தன பிடிகண் மேகலைத்
தேரொடு நடக்குமத் தெரிவை மாரினே. 1534

௩௭ ஏய்ந்தெழு செல்வமு மழகு மின்பமுந்
தேய்ந்தில [1]வனையது தெரிக்க லாமையில்
ஆய்ந்தனர் பெருகவு மமர ரும்பரிற்
போந்தவர் போந்தில மென்னும் புந்தியால். 1535

௩௮ அந்நக ரணிவுறு மமலை வானவர்
பொன்னக ரிதுவெனப் பொலியு மெல்லையில்
இன்னல்செ யிராவண னிழைத்த தீமைபோல்
துன்னருங் கொடுமனக் கூனி தோன்றினாள். 1536

௩௯ தோன்றிய கூனியுந் துடிக்கு நெஞ்சினள்
ஊன்றிய வெகுளியள் கொதிக்கு முள்ளத்தள்
கான்றெரி நயனத்தள் கலிக்குஞ் சொல்லினள்
மூன்றுல கினுக்குமோ[2]ரிறுதி மூட்டுவாள். 1537

௪௰ தொண்டைவாய்க் கைகயன் றோகை கோயின்மேன்
மண்டினாள் வெகுளியின் மடித்த வாயினள்
பண்டைநா ளிராகவன் பாணி வில்லுமிழ்
உண்டையுண் டதனைத்தன் னுள்ளத் துள்ளுவாள். 1538

(பிரதி) 1 தனையது. 2 ருறுதி.

௪௧ நாற்கடற் படுமணி நளினம் பூத்ததோர்
பாற்கடற் படுதிரைப் பவள வல்லியே
போற்கடைக் கண்ணருள் பொழியப் பொங்கணை
மேற்கிடந் தாளை விரைவி னெய்தினாள். 1539

௪௨ எய்தியக் கைகயன் மடந்தை யேடவிழ்
நொய்தலர் தாமரை நோற்ற நோன்பினாற்
செய்தபே ருவமைசால் செம்பொற் சீறடி
கைகளிற் றீண்டினள் காலக் கோளனாள். 1540

௪௩ தீண்டலு முணர்ந்தவத் தெய்வக் கற்பினாள்
நீண்டகண் ணனந்தலு நீங்க நிற்கலாள்
மூண்டெழு பெரும்பழி முடிக்கும் வல்வினை
தூண்டிடக் கட்டுரை சொல்லன் மேயினாள். 1541

௪௪ அணங்குவாள் விடவரா வணுகு மெல்லையுங்
குணங்கெடா தொளிவிரி குளிர்வெண் டிங்கள்போற்
பிணங்குவான் பேரிடர் பிணிக்க நண்ணவும்
உணங்குவா யல்லைநீ யுறங்கு வாயென்றாள். 1542

௪௫ வெவ்விட மனையவள் விளம்ப வேற்கணாள்
தெவ்வடு சிலைக்கையென் சிறுவர் செவ்வியர்
அவ்வவர் துறைதொறு மறந்தி றம்பலர்
எவ்விட ரெனக்குவந் தடுப்ப தீங்கெனா. 1543

௪௬ பராவரும் புதல்வரைப் பயக்க யாவரும்
உராவருந் துயரைவிட் டுறுதி காண்பரால்
விராவரும் புவிக்கெலாம் வேத மேயன
இராமனைப் பயந்தவெற் கிடருண் டோவென்றாள். 1544

௪௭ ஆழ்ந்தபே ரன்பினா ளனைய கூறலுஞ்
சூழ்ந்ததீ வினைநிகர் கூனி சொல்லுவாள்
வீழ்ந்தது நின்னலந் திருவும் வீழ்ந்தது
வாழ்ந்தனள் கோசலை மதியி னாலென்றாள். 1545

௪௮ அன்னசொ லனையவ ளுரைப்ப வாயிழை
மன்னவர் மன்னனெங் கணவன் மைந்தனேற்
பன்னரும் பெரும்புகழ்ப் பரதன் பார்தனில்
என்னதன் மேலவட் கெய்தும் வாழ்வென்றாள்.

௪௯ ஆடவர் நகையுற வாண்மை மாசுறத்
தாடகை யெனும்பெயர்த் தையலாள்படக்
கோடிய வரிசிலை யிராமன் கோமுடி
சூடுவ னாளைவாழ் விதுவெனச் சொல்லினாள். 1547

௫௰ மாற்றம துரைசெய மங்கை யுள்ளமும்
ஆற்றல்சால் கோசலை யறிவு மொத்தவால்
வேற்றுமை யுற்றிலள் வீரர் வீரனு
மேற்றவ ளிதையத்தி லிருக்க வேகொலாம். 1548

௫௧ ஆயபே ரன்பெனு மளக்க ரார்த்தெழத்
தேய்விலா முகமதி விளங்கித் தேசுறத்
தூயவ ளுவகைபோய் மிகச்சு டர்க்கெலாம்
நாயக மனையதோர் மாலை நல்கினாள். 1549

௫௨ தெழித்தன ளுரப்பினள் சிறுகண் டீயுக
விழித்தனள் வைதனள் வெய்து யிர்த்தனள்
அழித்தன ளழுதன ளம்பொன் மாலையாற்
குழித்தன ணிலத்தைக் கொடிய கூனியே, 1550

௫௩ வேதனைக் கூனிபின் வெகுண்டு நோக்கியே
பேதைநீ பித்தனிற் பிறந்த சேயொடு
[1]மாதுயர்ப் படுகநான் னெடிதுன் மாற்றவள்
தாதியர்க் காட்செயத் தரிக்கி லேனென்றாள். 1551

௫௪ சிவந்தவாய்ச் சீதையுங் கரிய செம்மலும்
நிவந்தவா சனத்தினி திருக்க நின்மகன்
அவந்தனாய் வறுநிலத் திருக்க லானபோ
துவந்தவா [2]றென்னிதற் [3]குறுதி யாதென்றாள். 1552

௫௫ மறந்திலள் கோசலை யுறுதி மைந்தனுஞ்
சிறந்தனன் றிருவினிற் றிருவு நீங்கினான்
இறந்தில னிருந்தில னென்செய் தாற்றுவான்
பிறந்திலன் பரதனீ பெறுத லாலென்றாள். 1553

௫௬ சரதமிப் புவியெலாந் தம்பி யோடுமிவ்
வரதனே காக்குமேல் வரம்பில் காலமும்
பரதனு மிளவலும் பதியி னீங்கிப்போய்
விரதமா தவஞ்செய விடுத னன்றென்றாள். 1554

(பிரதி) 1 சீதுயர்ப். 2 றெளிதினு. 3 முறுதி;

௫௭ பண்ணுறு கடகரிப் பரதன் பார்மகள்
கண்ணுறுங் கவினரா யினிது காத்தவம்
மண்ணுறு முரசுடை மன்னர் மாலையில்
எண்ணுறப் பிறந்தில னிறத்த னன்றென்றாள். 1555

௫௮ பாக்கியம் புரிந்திலன் பரதன் றன்னைப்பண்
டாக்கிய பொலங்கழ லரச னுணையாற்
றேக்குயர் கல்லதர் கடிது சேணிடைப்
போக்கிய பொருளெனக் கின்று போயிற்றால். 1556

௫௯ மந்தரை பின்னரும் வகைந்து கூறுவாள்
அந்தரந் தீர்த்துல களிக்கு நீரினாற்
றந்தையுங் கொடியனற் றாயுந் தீயளால்
எந்தையே பரதனே யென்செய் வாயென்றாள். 1557

௬௰ அரசரிற் பிறந்துபின் னரச ரில்வளர்ந்
தரசரிற் புகுந்துபே ரரசி யானநீ
கரைசெயற் கருந்துயர்க் கடலில் வீழ்கின்றாய்
உரைசெயக் கேட்கிலை யுணர்தி யோவென்றாள். 1558

௬௧ கல்வியு மிளமையுங் கணக்கி லாற்றலும்
வில்வினை யுரிமையு மழகும் வீரமும்
எல்லையில் குணங்களும் பரதற் கெய்திய
புல்லிடை யுக்கமு தேயும் போலென்றாள். 1559

௬௨ *வாய் கயப்புற மந்தரை வழங்கிய வெஞ்சொல்
காய் கனற்றலை நெய்சொரிந் தெனக்கதங் கனற்றக்
கேகய யற்கிறை திருமகள் கிளரிள வரிகள்
தோய்க யற்கண்கள் சிவப்புற நோக்கினள் சொல்லும்.

௬௩ வெய்யின் முறைக்குலத் திறைவனை முதலிய மேலோர்
உயிர் முறைப்பொரு டிறம்பினு முறைதிறம் பாதோர்
மயின் முறைக்குலத் துரிமையை மனுமுதன் மரபைச்
செயிர் முறைப்புலைச் சிந்தையா லென்சொனாய் தீயோய்.

௬௪ எனக்கு நல்லையு மல்லைநீ யென்மகன் பரதன்
தனக்கு நல்லையு மல்லையத் தருமமே நோக்கின்
உனக்கு நல்லையு மல்லைவந் தூழ்வினை தூண்ட
மனக்கு நல்லன சொல்லினை மதியிலா மனத்தோய்.

௬௫ பிறந்தி றந்துபோய்ப் பெறுவது மிழப்பதும் புகழே
நிறந்தி றம்பினு நியாயமே திறம்பினு நெறியின்
திறந்தி றம்பினுஞ் செய்தவந் திறம்பினுந் தீரா
மறந்தி றம்பினும் மயின்முறை திறம்புதல் வழக்கோ.

௬௬ போதி யென்னெதிர் நின்றநின் புன்பொறி நாவைச்
சேதி யாதிது பொறுத்தனன் புறஞ்சில ரறியில்
நீதியல்லன நெறிமுறை யல்லவு நினைந்தாய்
ஆதி யாதலி னறிவிலி யடங்குதி யென்றாள். 1564

௬௭ அஞ்சி மந்தரை யகன்றில ளம்மொழி கேட்டு
நஞ்சு தீர்க்கினுந் தீர்கிலா ததுநவிந் தென்னத்
தஞ்ச மேயுனக் குறுபொரு ளுணர்த்துகை தவிரேன்
வஞ்சி போலியென் றடியிணை வீழ்ந்துரை வழங்கும்.

௬௮ மூத்த வற்குரித் தரசெனின் முறைமையி னுலகங்
காத்த மன்னனி விளையனன் றேகடல் வண்ணன்
ஏத்து நீண்முடி புனைவதற் கிசைந்தன னென்றால்
பார்த்தருஞ் செல்வம் பரதனை விலக்குமா றெவனோ.

௬௯ அறநி ரம்பிய வருளுடை யருந்தவர்க் கேனும்
பெறல ருந்திருப் பெற்றபின் சிந்தனை பிறிதாம்
அறநி னைந்துமை வலிகில ராயினு மனத்தால்
இறலு றும்படி யியற்றுவ ரிடையறு வின்னல். 1567

௭௰ புரியுந் தன்மகற் கரசெனிற் பூதல மெல்லாம்
எரியுஞ் சிந்தனைக் கோசலைக் குடைமையா மென்றால்
பரியு நின்குலப் புதல்வற்கு நினக்குமிப் படிமேல்
உரிய தென்னவ ளுதவிய வொருபொரு ளல்லால். 1568

௭௧ தூண்டு மின்னலும் வறுமையுந் தொடர்தரத் துயரால்
ஈண்டு வந்துனை யிரந்தவர்க் கிருநிதி யவளை
வேண்டி யீதியோ வெள்குதி யோவிம்ம னேயான்
மாண்டு போதியோ மறுத்தியோ வெங்ஙனம் வாழ்தி.

௭௨ சிந்தை யென்செயத் திகைத்தனை யினிச்சில நாளிற்
றந்த மின்மையு மெளிமையு நிற்கொண்டு தவிர்க்க
உந்தை யுன்னையுன் கிளைஞர்மற் றுன்குலத் துள்ளோர்
வந்து காண்பதுன் மாற்றவள் செல்வமோ மதியாய்.

எ௩ காத லுன்பெருங் கணவனை யஞ்சியக் கனிவாய்ச்
சீதை தந்தையுன் றந்தையைத் தெறுகில னிராமன்
மாது லன்னவ னுந்தைவாழ் வுண்டது மதியாய்
பேதை யுன்றுணை யாருளர் பழிபடப் பிறந்தார். 1571

எ௪ மற்றுன் தந்தைக்கும் வான்பகை பெரிதுள மறத்தாற்
செற்ற போதிவர் சென்றுத வாரெனிற் செருவிற்
கொற்ற மென்பதொன் றெவ்வழி யுண்டது கூறாய்
சுற்ற முங்கெடக் கடுந்துயர்க் கடல்விழத் துணிந்தாய்.

எ௫ கெடுத்தொ ழிந்தனை யுனக்கரும் புதல்வனைக் கிளர்நீர்
உடுத்த பாரக முடையவ னொருமகற் கெனவே
கொடுத்த போதவன் தன்குலக் கோமைந்தர் தமக்கும்
அடுத்த தம்பிக்கு மாம்பிறர்க் காகுமோ வென்றான்.

எ௬ தீய மந்தரை யிவ்வுரை செப்பலுந் தேவி
தூய சிந்தையுந் திரிந்தது சூழ்ச்சியி னிமையோர்
மாயை யும்மவர் பெற்றுள வரமுண்மை யாலும்
ஆய வந்தண ரியற்றிய வருந்தவத் தாலும் 1574

எ௭ அரக்கர் பாவமு மல்லவ ரியற்றிய வறமுந்
துரக்க நல்லறந் துறந்தன டூய்மொழி மடமா
திரக்க மின்மையன் றேவின்றிவ் வுலகங்க ளிராமன்
பரக்குந் தொல்புக ழமுதினைப் பருகுகின் றதுவே. 1575

எ௮ அனைய தன்மைய ளாகிய கைகயன் றனையள்
வினைநி ரம்பிய கூனியை விரும்பின ளேக்கி
யெனையு வந்தனை [1]யினியையென் மகனுக்கு மனையான்
புனையு நீண்முடி பெரும்படி புகலுதி யென்றாள். 1576

எ௯ மாழை யொண்கணி யுரைசெயக் கேட்டமந் தரையென்
தோழி வல்லளென் றுணைவல்ல ளென்றடி தொழுதாள்
தாழு மென்னினி யென்னுரை தலைநிற்பி னுலகம்
ஏழு மேழுமு னொருமகற் காக்குவ னென்றாள். 1577

அ௰ நாடி யொன்றுநன் கூரைசெய்வ னகுமணி யனையாய்
தோடி வர்ந்ததார்ச் சம்பரன் றொலைவுற்ற வேலை
ஆடல் வென்றியா னருளிய வரமவை யிரண்டுங்
கோடி யென்றனை ளுள்ளமுங் கோடிய கொடியாள்.

(பிரதி). 1 யென் மகனுக்கு மிங்கனையான்.

அக. இருவ ரத்தினு மொன்றினா லரசுகொண் டிராமன்
பெருவ னத்திடை [1]யேழிரு பருவமும் பெயர்ந்து
திரிதரச் செய்வ தொன்றினாற் [2]செழுநில மெல்லாம்
ஒருவ ழிப்படு முன்மகற் குபாயமீ தென்றாள். 1579

அஉ உரைத்த கூனியை யுவந்தன ளுள்ளுறத் தழுவி
நிரைத்த மாமணி யாரமு நிதியமு நீட்டி
இரைத்த வேலைசூ ழுலகமென் னொருமகற் கீந்தாய்
தரைக்கு நாயகன் றாயினி நீயெனத் [3]தணியாய். 1580

அங நன்று சொல்லினை நம்பியை நளிர்முடி [4]சூட்டல்
துன்று கானத்தி லிராமனைத் துரத்த லிவ்விரண்டும்
அன்ற தாமெனி லரசன்மு னென்னுயிர் துறந்து
பொன்றி நீங்குதல் புரிவன்யான் போதிநீ யென்றாள்.

அச கூனி போனபின் குலமலர்க் குப்பைநின் றிழிந்தாள்
சோனை வார்குழற் கற்றையிற் சுற்றிய மாலை
வான மாமழை நுழைதரு மதிபிதிர்ப் பாள்போல்
தேன வாவுறும் வண்டின மலமரச் சிதைத்தாள். 1582

அரு விளையுந் தன்புகழ் வல்லியை வேரறுத் தென்னக்
கிளைகொண் மேகலை சிந்தினள் மேகலை யோடும்
வளைது றந்தனண் மதியினை மறுத்துடைப் பாள்போல்
அளக வாணுத லரும்பெறற் றிலதமு மழித்தாள். 1583

அசு தாவின் மாமணிக் கலன்மற் றுந் தனித்தனிச் சிதறி
நாவி யோதியை நானிலந் தைவரப் பரப்பிக்
காவி யுண்டகண் ணஞ்சனங் கான்றிடக் கலுழாப்
பூவுதிர்த்ததோர்கொம்பெனப் பொடிமிசைப்புரண்டாள்.

அஎ நவ்வி வீழ்ந்தென நாடக மயிறுயின் றென்னக்
கவ்வை கூர்தரச் சனகியாங் கடிகமழ் கமலத்
தவ்வை நீங்குமென் றயோத்திவந் தடைந்தவம் மடந்தை
தவ்வை யாமெனக் கிடந்தனள் கைகயன் றனயள்.

உ. மந்தரை சூழ்ச்சிப் படலம் முற்றும்

(பிரதி) 1 பதினாலு. 2 செலநில. 3 தனியாய். 4 சூட்டித்.

௩. கைகேசி சூழ்வினைப் படலம்

௧ நாழிகை கங்குலி னள்ள டைந்த வேலை
யாழிசை யஞ்சிய செஞ்சொ லேழை கோயில்
வாழிய வென்றயன் மன்னர் துன்ன வந்தான்
ஆழி நெடுங்[1]கை மடங்க லாளி யன்னான். 1586

௨ வாயிலின் மன்னர் வணங்கி நிற்ப வந்தாங்
கேயின செய்யு மணங்கினர் சூழ வேகிப்
பாய றுறந்த படைத்த டங்கண் மென்றோள்
ஆயிழை தன்னை யடைந்த வாழி மன்னன். 1587

௩ அடைந்தன னோக்கி யரந்தை யென்கொல் வந்து
தொடர்ந்த தென த்துயர் கொண்டு சோரு நெஞ்சன்
மடந்தையை மானை யெடுக்கும் யானை யேபோற்
றடங்கைகள் கொண்டு தழீஇ யெடுக்க லுற்றான்.1588

௪ நின்று தொடர்ந்த நெடுங்கை நீக்கி யேழை
மின்றுவள் கின்றது போல மண்ணில் வீழ்ந்தாள்
ஒன்று மியம்பல ணீடு யிர்க்க லுற்றாண்
மன்றுளர் தாரவ னாவி யன்ன மன்னாள். 1589

௫ அன்னது கண்ட வலங்கன் மன்ன னஞ்சி
என்னை நிகழ்ந்த திவ்வெழு ஞால மாள்வார்
உன்னை யிகழ்ந்தவர் மாள்வ ருற்ற தெல்லாஞ்
சொன்னபி னென்செயல் காண்டி சொல்லி தென்றான்

௬ வண்டுளர் தாரவன் வாய்மை கேட்ட மங்கை
கொண்ட னெடுங்கணி னாலி கொங்கை போர்ப்ப
உண்டுகொ லாமரு ளென்க னுண்மை நோக்கிற்
பண்டைய[2]வின்று பரிந்த ளித்தி யென்றாள். 1591

௭ கள்ளவிழ் கோதை கருத்துண ராத மன்னன்
வெள்ள நெடுஞ்சுடர் மின்னின் மின்ன [3]நக்கான்
உள்ள முவந்துள செய்வ னொன்று லோபேன்
வள்ள லிராமனுன் மைந்த னாணை யென்றான். 1592

௮ ஆன்றவ னவ்வுரை கூற வைய மில்லாள்
தோன்றிய பேரவ லந்து டைத்த லுண்டேற்
சான்றிமை யோர்குல மாக மன்ன முன்னீ
ஏன்ற வரங்க ளிரண்டு மீதி யென்றாள். 1593

(பிரதி) 1 கண், 2 ஈன்று பரிந்து தான தென்றான். 3. நக்காங்கு.

௯ வரங்கொள வித்துணை மம்ம ரல்ல லெய்தி
யிரங்கிட வேண்டுவ தில்லை யீவ னென்பாற்
பரங்கெட விப்பக லேப கர்ந்தி டென்றான்
உரங்கொண் மனத்தவள் வஞ்ச மோர்வ தில்லான். 1594

௰ ஏய வரங்க ளிரண்டி னொன்றி னாலென்
சேயுல காள்வது சீதை கேள்வ னொன்றிற்
போய்வன மாள்வ தெனப்பு கன்று நின்றாள்
தீயவை யாவை யினுஞ்சி றந்த தீயாள். 1595

௰௧ நாக மெனுங்கொடி யாட னாவின் வந்த
சோக விடந்தொட ரத்து ணுக்க மெய்த
ஆக மடங்கலும் வெந்த ழிந்த ராவின்
வேக மடங்கிய வேழ மென்ன வீழ்ந்தான். 1596

௰௨ பூதல முற்றத னிற்பு ரண்ட மன்னன்
மாதுய ரத்தினை யாவர் சொல்ல வல்லார்
வேதனை முற்றிட வெந்து வெந்து கொல்லன்
ஊதுலை யிற்கன லென்ன வெய்து யிர்த்தான். 1597

௰௩ [1]உலர்ந்தது நாவுயி ரோட லுற்ற துள்ளம்
புலர்ந்தது கண்கள் [2]பொடித்த பொங்கு சோரி
சலந்தலை மிக்கது தக்க தென்கொ லென்றென்
றலந்தலை யுற்ற வரும்பு லன்க ளைந்தும். 1598

௰௪ மேவி நிலத்தி லிருக்கு நிற்கும் வீழும்
ஓவிய மொப்ப வுயிர்ப்ப டங்கி யோயும்
பாவியை யுற்றெதிர் பற்றி யெற்ற [3]வெண்ணும்
ஆவி பதைப்ப வலக்க ணெய்து கின்றான். 1599

௰௫ பெண்ணெனு வுட்கும் பெரும்ப ழிக்கு நாணும்
உண்ணிறை வெப்பொ டுயிர்த்து யிர்த்து லாவுங்
கண்ணில னொப்ப வயர்க்கும் வன்கை வேல்வெம்
புண்ணுழை கிற்க வுழைக்கும் யானை போல்வான். 1600

௰௬ கம்ப நெடுங்களி யானை யன்ன மன்னன்
வெம்பி விழுந்தழும் விம்மல் கண்டு வெய்துற்
றும்பர் நடுங்கின ரூழி பேர்வ தொத்த
தம்பன கண்ணவ ளுள்ள மன்ன தேயால். 1601

(மாதி) 1 உலந்தது. 2 பொடித்தது. 3 வென்னும்.

௧௭ அஞ்சல லையன தல்லல் கண்டு முள்ளம்
நஞ்சில ணுணில ளென்ன நாண மாமால்
வஞ்சனை பண்டு மடந்தை வேட மன்றே
தஞ்சென மாதரை யுள்ள லார்க டக்கோர். 1602

௧௮ இந்நிலை நின்றவ டன்னை பெய்த நோக்கி
நெய்நிலை வேலவ னீதி கைத்த துண்டோ
பொய்நிலை யோர்கள் புணர்த்த வஞ்ச முண்டோ
உன்னிலை சொல்லென தானை யுண்மை யென்றான்.

௧௯ திசைத்தது மில்லை யெனக்கு வந்து தீயோர்
இசைத்தது மில்லைமு னீந்த வரங்க ளென்பாற்
குசைப்பரி யோய்தரி லின்று கொள்வ னன்றேல்
வசைப்பொருள் நின்வயி னிற்க மாள்வ னென்றாள்.

௨௦ இந்த நெடுஞ்சொலவ் வேலை கூற முன்னே
வெந்த கொடும்புணில் வேலு ழைந்த தொப்பச்
சிந்தை திரிந்து திகைத்த யர்ந்து வீழ்ந்தான்
மைந்த னலாதுயிர் வேறி லாத மன்னன். 1605

௨௧ ஆகொடி யாயெனு மாவி காலு மந்தோ
ஓகொடி தேயற மென்னு முண்மை யொன்றுஞ்
சாக வெனுவெழு மெய்த்த ளாடி வீழும்
மாகமு நாகமு மண்ணும் வென்ற வாளான். 1606

௨௨ நாரிய ரில்லை யிஞ் ஞால மேழு மென்னக்
கூரிய வாள்கொடு கொன்று நீக்கி யானும்
பூரிய ரெண்ணிடை வீழ்வ னென்று பொங்கும்
வீரியர் வீரம் விழுங்கி நின்ற வேலான். 1607

௨௩ கையொடு கைகள் புடைக்கும் வாய்க டிக்கும்
மெய்யுரை குற்ற மெனப் புழுங்கி விம்மும்
நெய்யெரி யுற்றென நெஞ்ச ழிந்து சோரும்
வையக முற்று நடந்த வாய்மை மன்னன். 1608

௨௪ ஒறுப்பினு மந்தர முண்மை யொன்று மோவா
மறுப்பினு மந்தரமென்ற வாய்மை மன்னன்
பொறுப்பினு மந்நிலை போகிலானை யாவி
இறுப்பினு மாவ திரப்ப [1]தென் றிரப்பான். 1609

(பிரதி) 1 னென்.

௨௫ *கோன்மேற்கொண்டுங்குற்ற மகற்றக்குறிகொண்டார்
போன்மேலுற்றதுண்டெனினன்றும்பொறையென்னுக்
கான்மேல் வீழ்ந்தான் கந்துகொல் யானைக் களிமன்னர்
மேன்மேல் வந்து முந்தி வணங்கி மிடைதாளான். 1610

௨௬ கொள்ளா வின்சே யிவ்வர சன்னுன் கொண்டாலும்
நள்ளா திந்த நானில ஞாலந் தனிமெலன்றும்
உள்ளா ரெல்லா மோத வுவக்கும் புகழ்கொள்ளா
தெள்ளா நிற்கும் வன்பழி கொண்டென்பயனென்ருன்

௨௭ வானோர் கொள்ளார் மண்ணவ ருய்யா ரினிமற்றென்
ஏனோர் செய்கை யாரொடு நீயிவ் வரசாள்வாய்
யானே சொல்லக் கொள்ள விசைந்தான் முறையாலே
தானே நல்கு முன்மக னுக்குத் தரையென்ருன். 1612

௨௮ ண்ணே வேண்டு மென்னினு மீயக் க[illegible]வேனென்
உண்ணே ராவி வேண்டினு மின்றே யுன தன்றே
பெண்ணே வண்மைக் கைகயன் மானே பெறுவாயேல்
மண்ணேகொண்ணீ மற்றையதொன்றும்மறவென்ருன்

௨௯ வாய்தந் தின்றே மற்றினி யானே வதுமாற்றேன்
நோய்தந் தென்னை நோவன செய்தே நுவலாதே
தாய்தந் தென்னத் தன்னை யிரந்தாற் றழல்வெங்கட்
பேய்தந் தியு நீயிது தந்தாற் பிழையாமோ. 1614

௩௰ இன்னே யின்ன பன்னி யிரந்தா னிகல்வேந்தன்
தன்னே ரில்லாத் தீயவ ளுள்ளந் தடுமாருண்
முன்னே தந்தா யிவ்வர நல்கா முனிவாயேல்
என்னே மன்னு யாருளர் வாய்மைக் கினியென்ருள்.

௩௧ அச்சொற் கேளா வாவி புழுங்கா வயர்கின்ருன்
பொய்ச்சொற்பேணுவாய்மொழி மன்னன்பொறைகூர
நச்சுத் தீயே பெண்ணுரு வன்றே வெனநாணும்
முச்சற்ருர் போற் பின்னு மிரந்தே மொழிகின்ருன்.

௩௨ நின்மக னுள்வா னியினி தாள்வாய் நிலமெல்லாம்
உன்வய மாமே யாளுதி தந்தே னுரைகுன்றேன்
என்மக னென்க ணென்னுயி ரெல்லா வுயிர்கட்கும்
நன்மக னிந்த நாடிற வாமை நயவென்ருன். 1617

௩௩. மெய்யே யென்றன் வேர ற நூறும் வினைநோக்கி
நையா நின்றே னவ்வு முலர்ந்தே னளினம்போற்
கையா னின்றன் கண்ணெதிர் நின்றுங் கழிவானேல்
உய்யே னங்கா யுன்னப யம்மென் னுயிரென்றான். 1618

௩௪ இரந்தான் சொல்லு மின்னுரை கேளாண் முனிவஞ்சாள்
மரந்தா னன்ன நெஞ்சின ணாணாள் வசைபாராள்
சரந்தாழ் வில்லாய் தந்த வரத்தைத் தவிரென்றால்
உரந்தா னல்லா னல்லற மாமோ வுரையென்றாள். 1619

௩௫ கொடியா ளின்ன கூறினள் கூறக் குலவேந்தன்
முடிசூ டாமற் காத்தலு மொய்கா னிடைமெய்யே
நெடியோ னீங்க நீங்குமென் னாவி யினியென்னா
இடியே றுண்ட மால்வரைபோன் மண்ணிடைவீழ்ந்தான்.

௩௬ வீழ்ந்தான் வீழா வெந்துய ரத்தின் கடல்வெள்ளத்
தாழ்ந்தா னாழா வக்கட லுக்கோர் கரைகாணான்
சூழ்ந்தா டுன்பஞ் சொற்கொடி யாள்சொற் கொடுசித்தம்
போழ்ந்தா ளுள்ளப் புன்மையை நோக்கிப் புரள்கின்றான்

௩௭ ஒன்றாய் நின்ற வாருயி ரோடு முயர்கேள்வர்
பொன்றா முன்னம் பொன்றின ரென்னும் புகழல்லால்
இன்றோர் காறு மெல்வளை யார்தம் மிறையோரைக்
கொன்றா ரில்லைக் கொல்லுதி யோநீ கொடியாளே. 1622

௩௮ ஏவம் பாரா யின்முறை நோக்கா யறமெண்ணாய்
ஆவென் பாயோ வல்லை மனத்தா லருள்கொன்றாய்
நாவம் பாலென் னாருயி ருண்டா யினிஞாலம்
பாவம் பாரா தென்னுயிர் கொள்ளப் படுகின்றாய். 1623

௩௯ ஏண்பா லோவா நாண்மட மச்ச மிவையேதம்
பூண்பா லாகக் காண்பய னந்தப் புகழ்பேணி
நாண்பா லோரா நங்கையர் தம்பா னணுகாரோ
ஆண்பா லாரோ பேரரு ளாரோ டடைவம்மா. 1624

௪௰ மண்ணாள் கின்றா ராகி வலத்தான் மதியால்வைத்
தெண்ணா நின்றா ரியாரையு மெல்லா விகலாலும்
விண்ணோர் காறும் வென்ற வெனக்கென் மனைவாழும்
பெண்ணால் வந்த வந்தர மென்னப் பெறுகேனே.

சக என்றென் றுன்னும் பன்னி யிரங்கு மிடரூேயும்
ஒன்றொன் றல்ல வின்ன லுழக்கு முயிரோடும்
இன்றின் றென்னும் வண்ண மயர்க்கு மிடைகின்றான்
குன்றொன் றொன்றோ டொன்றிய வென்னக் குவிதோளான்.

சஉ ஆழிப் பொற்றேர் மன்னவ னிவ்வா றயர்வெய்திப்
பூழிப் பொற்றார் முற்று மடங்கப் புரள்போதில்
ஊழிற் பெற்றா யென்றுரை யன்றே வுயிர்மாய்வன்
பாழிப் பொற்றோள் மன்னவ வென்றாள் பசையற்றாள்.

சரு அரிந்தான் முன்னோர் மன்னவ னன்றே யருமேனி
விரிந்தார் வில்லாய் வாய்மை வளர்ப்பான் வரநல்கிப்
பரிந்தா லென்னை யென்றனள் பாயுங் கன்லேபோல்
எரிந்தே றாதே யின்னுயி ருண்ணு மெரியன்னாள். 1628

சச வீந்தா ளேயிவ் வெய்யவ ளென்னு மிடல்வேந்தன்
ஈந்தே னீந்தே னிவ்விர மென்சேய் வனமாள
மாய்ந்தே நான்போய் வானர சாள்வன் வசைவெள்ளம்
நீந்தாய் நீந்தாய் நின்மக னோடு நெடிதென்றான். 1629

சரு கூறா முன்னங் கூறு படுக்குங் கொலைவாளின்
ஏறா வண்ணம் வன்றுய ராகத் திடைமூழ்கத்
தேறா னாகிச் செய்கை மறந்தான் செயன்முற்றி
ஊறா நின்ற சிந்தையி [1] னாளுந் துயில்வுற்றாள். 1630

சசு *சேணு லாவிய நாளெ லாமுயி ரொன்று போல்வன செய்துபின்
ஏணு லாவிய தோளி னானிட ரெய்த வொன்று மிரங்கலா
வாணி லாநகை மாத ராள்செயல் கண்டு மைந்தர்முன் னிற்கவும்
நாணி னாளென வேகி னாளிர் கங்கு லாகிய நங்கையே. 1631

சஎ எண்ட ருங்கடை சென்ற யாம மியப்பு கின்றன வேழையால்
வண்டு தங்கிய தொங்கன் மார்பன் மயங்கி விம்மிய வாறெலாங்
கண்டு நெஞ்சு கலங்கி யஞ்சிறை யான காமர் துணைக்கரங்
கொண்டு தம்வயி றெற்றி யெற்றிவி ளிப்ப போன்றன கோழியே.

சஅ தோய்க யத்து மரத்து மென்சிறை துள்ளிமீதெழு புள்ளெலாந்
தேய்கை யொத்த மருங்கின் மாதர் சிலம்பி னின்று சிலம்புவ
கேகய த்தர சன்ப யந்த விடத்தை யின்னதோர் கேடுசூழ்
மாக யத்தியை யுட்கொ தித்து மனத்து வைவன போன்றவே.

(பிரதி) 1 னாளுந் துயில்வுற்றான்.

௪௯ சேம மென்பன பற்றி யன்பு திருந்த வின்றுயில் செய்தபின்
வாம மேகலை மங்கை யோடும் வனத்துள் யாரு மறக்கலா
நாம நம்பி நடக்கு மென்று நடுங்கு கின்ற மனத்தவாய்
யாமு மிம்ம ணிறத்து மென்பன போலெ ழுந்தன யானையே.

௫௰ சிரித்த பங்கய மொத்த செங்க ணிராம னைத்திரு மாலையக்
கரிக்க ரம்பொரு கைத்த லத்துயர் காப்பு நாணணி தற்குமுன்
வரித்த தண்கதிர் முத்த தாகியிம் மண்ண னைத்து நிழற்றமேல்
விரித்த [1]பந்தல் பிரித்த தாமென மீனொ ளித்தது வானமே. 1635

௫௧. காம விற்கை யிராம னைத்தொழு நாள டைந்த நமக்கெலாங்
காம விற்குடை கங்குன் மாலை கழிந்த தென்பது கற்பியாத்
தாமொ லித்தது பேரி யவ்வொலி சார மாரி தழங்கலான்
மாம யிற்குல மென்ன வுள்ள மலர்ந்தெ ழுந்தனர் மாதரே. 1636

௫௨ இனம லர்க்குலம் வாய் விடாதிள வாச மாருதம் வீசமுன்
புனைது கிற்கலை சோர நெஞ்சு புழுங்கி னார்சில பூவைமார்
மனவ னுக்கம்வி டத்த னித்தனி வள்ள லைப்புணர் கள்ளவன்
கனவி னுக்கிடை யூற டுக்கம யங்கி னார்சில கன்னிமார். 1637

௫௩ சாய டங்க நலங்க லந்து தழங்கு தன்குல் நன்மையும்
போய டங்க நெடுங்கொ டும்பழி கொண்ட ரும்புகழ் சிந்துமத்
தீய டங்கிய சிந்தை யாள்செயல் கண்டு சீரிய நங்கைமார்
வாய டங்கிய தென்ன வந்து குவிந்த வண்குமு தங்களே.

௫௪ மொய்ய ராக நிரம்ப வாசை முருங்கு தீயின் முழங்கமேல்
வைய ராவிய மாரன் வாளியும் வானி லாநெடு வாடையும்
மெய்ய ராவிட வாவிசோர வெதும்பு மாதர்த மென்செவிப்
பைய ராநுழை கின்ற போன்றன பண்க னிந்தெழு பாடலே.

௫௫ ஆழி யான்முடி சூடு நாளிடை யான பாவி யிதோரிரா
ஊழி யாயின வாறெ னாவுயர் போதின் மேலுறை பேதையும்
ஏழுலோகமுமெண்டவஞ்செய்த கண்ணுமெங்கண் மனங்களும்
வாழு நாளி தெனாவெ ழுந்தனர் மஞ்சு தோய்புய மைந்தரே.

௫௬ ஐயு றுஞ்சுடர் மேனி யானெழில் காண மூளு மவாவினுற்
கொய்யு றுங்குல மாம லர்க்குவை நின்றெ ழுந்தனர் கூர்மைகூர்
நெய்யு றுஞ்சுடர் வேனெடுங்கண் முகிழ்த்துநெஞ்சி னினைம்பொடும்
பொய்யு றங்கு மடந்தை மார்குழல் வண்டு பொம்மென விம்மவே

(பிரதி) 1 பந்த ரிரைத்த.

௫௭ ஆட கந்தரு பூணமு ந்திட வஞ்சி யஞ்சி யனந்தலால்
ஏட கந்தரு தார்பொ திந்திட யாமபேரி யிசைத்தலாற்
சேட கம்புனை கோதை மங்கையர் சிந்தையின்செறி திண்மையால்
ஊடல் கண்டவர் கூடல் கண்டிலர் நையு மைந்தர்க ளுய்யவே

௫௮ தழையொ லித்தன வண்டொ லித்தன தாரொ லித்தன பேரியாம்.
முழவொ லித்தன தேரொ லித்தன முத்தொ லித்தெழுமல்குலார்
இழையொ லித்தன புள்ளொ லித்தனயா ழொலித்தன வெங்கணும்
மழையொலித்தன போலொலித்தமனத்தின் முந்துறும் வாசியே

௫௯ வைய மேழு மொரேழு மாருயி ரோடு கூட வழங்குமாம்
மெய்யன் வீரருள் வீரமா மகன் மேல்வி ளைந்ததொர் காதலால்
நைய நைய கலம்பு லன்க ளவிந்த டங்க நடுங்குவான்
தெய்வ மேனி படைத்த சேயொளி போன்ம ழுங்கின தீபமே.

௬௰ வங்கி யம்பல தேன்வி ளம்பின பாணி முந்தின வாணியின்
பங்கி யம்பல வெங்கும் விம்மின பம்பை பம்பின பல்வகைப்
பொங்கி யம்பல வுங்க றங்கின நூபு ரங்கள் புலம்பவெண்
பங்கி யம்பின கொம்ப லம்பின சாம கீத நிரந்தவே, 1645

௬௧ தூப முற்றிய காரிருட்பகை துள்ளியோடிடவுள்ளெழுந்
தீப முற்றவு [1]நீர்த்த கன்றனச் சேய தாருயிர் தேயவப்
பாவ மூற்றிய பேதை செய்த பகைத்தி றத்தினில் வெய்யவன்
கோப முற்றி மிகச்சி வந்தன ளுத்த னன்குணக் குன்றின்மேல்.

௬௨ மூவ ராய்முத லாகி மூலமு மாகி ஞாலமு மாகுமத்
தேவ தேவர் பிடித்த போர்வி லொடித்த சேவகர் சேணிலங்
காவன் மாமுடி சூடு மாரெழில் காண லாமெனு மாசைகூர்
பாவை மார்முக மென்ன வந்து மலர்ந்த பங்கய வாவியே. 1647

௬௩ இன்ன வேலையி னேழு வேலையு மொத்த போல விரைத்தெழும்
மன்னன் மாநகர் மைந்தன் மாமுடி சூடும் வைக விதாமெனத்
துன்னு காத லுரப்ப வங்கவை சொல்ல லாம்வகை யெம்மனோர்க்
குன்ன லாவன வல்ல வென்னினு முற்ற பெற்றி யுணர்த்துவாம்

௬௪ *குஞ்சர மனையார் சிந்தைகொ ளிளையார்.
பஞ்சிக ளணிவார் பால்வளை தெரிவார்
அஞ்சன மெனவா ளம்புக ளிடையே
நஞ்சினை யிடுவார் நாண்மலர் புனைவார். 1649

(பிரதி) 1 தித்த.

௬௫ *பொங்கிய வுவகை வெள்ளம் பொழிதரக் கமலம் பூத்த
சங்கையின் முகத்தார் நம்பி தம்பிய ரனைய ரானார்
செங்கையி னறவ மாந்திக் களிப்பன சிவணுங் கண்ணார்
குங்குமச் சுவடு நீங்காக் குவவுத்தோட் குமர ரெல்லாம்

௬௬ மாதர்கள் கற்பின் மிக்கார் கவுசலை மனத்தை யொத்தார்
வேதியர் வசிட்ட னொத்தார் வேறுள மகளி ரெல்லாஞ்
சீதையை யொத்தா ரன்னா டிருவினை யொத்தா ரிவ்வூர்ச்
சாதுகை மாந்த ரெல்லாந் தசரதன் றன்னை யொத்தார்.

௬௭ இமிழ்திரைப் பரவை ஞால மெங்கணும் வறுமை கூர
உமிழ்வதொத் துதவு காத லுந்திட வந்த தன்றே
குமிழ்முலைச் சீதை கொண்கன் கோமுடி புனைதல் காண்பான்
அமிழ்துணக் குழுமு கின்ற வமரரி னரச வெள்ளம்.

௬௮ பாகியல் பவளச் செவ்வாய்ப் பணைமுலைப் பரவை யல்குற்
றோகையர் குழாமு மைந்தர் சும்மையுந் துவன்றி யெங்கும்
ஏகுமி னேகு மென்றன் றிடையிடை நிற்ற லாற்றார்
போகுனர் மீள்க லாகாப் பொன்னகர் வீதி யெல்லாம்.

௬௯ வேந்தரே பெரிதென் பாரும் வேதியர் பெரிதென் பாரும்
மாந்தரே பெரிதென் பாரும் மகளிரே பெரிதென் பாரும்
போந்ததே பெரிதென் பாரும் புதுவதே பெரிதென் பாருந்
தேர்ந்ததே தேரி னல்லால் யாவரே தெரியக் கண்டார்.

௭0 குவளையி னெழிலும் வேலின் கொடுமையுங் குழைத்துக் கூட்டித்
திவளுமஞ் சனமென் றேய்ந்த நஞ்சினைத் தெரியத் தீட்டித்
தவளவொண் மதியின் வைத்த தன்மைசா றடங்க ணல்லார்
துவளுநுண் ணிடைபா ராடுந் தோகையின் குழாத்திற் றொக்கார்.

௭௧ நலங்கிளர் பூமி யென்னு நங்கையை நறுந்து ழாயின்
அலங்கலான் புணருஞ் செல்வங் காணவந் தடைந்தி லாதார்
இலங்கையி னிருந் ரேயிவ் வேழுல கத்து வாழும்
விலங்கலு மாசை நின்ற விடாமத விலங்க லேயால்.

௭௨ சந்திரர் கோடி யென்னத் தரளவெண் கவிகை யோங்க
அந்தரத் தன்ன மெல்லா [1]மார்ந்தெனக் கவரி துன்ன
இந்திரற் குவமை சாலு மிருநிலக் கிழவ ரெல்லாம்
வந்தனர் மவுலி சூட்டு மண்டப மரபிற் புக்கார். 1657

(பிரதி) 1 யார்த்தெனக்

௭௩ முற்பயந் தெடுத்த காதற் புதல்வனை முறையி னேடும்
இற்பயஞ் சிறப்பிப் பாரி னீண்டிய வுவகை தூண்ட
அற்புதன் றிருவைச் சேரு மருமணங் காணப் புக்கார்
நற்பயன் றவத்தி னுய்க்கு நான்மறைக் கிழவ ரெல்லாம்.

௭௪ விண்ணவர் விசும்பு தூர்த்தார் விரிதிரை யுடுத்த கோல
மண்ணவர் திசைக டூர்த்தார் மங்கல மிசைக்குஞ் சங்கங்
கண்ணகன் முரசி னோதை கேட்டவர் செவிக டூர்த்த
எண்ணருங் கனக மாரி யெழுதிரைக் கடலுந் தூர்த்த.

௭௫ விளக்கொளி மறைத்த மன்னர் மின்னொளி மகுட கோடி
துளக்கொளி விசும்பி னூருஞ் சுடரையு மறைந்த சூழ்ந்த
அளக்கர்வாழ் முத்த மூரன் முறுவலா ரணியுஞ் சோதி
வளைந்தலா மென்றவ் வானோர் கண்ணையு மறைத்த வன்றே.

௭௬ ஆயதோ ரமைதி யின்க ணையனை மகுடஞ் சூட்டற்
கேயுமங் கலங்க ளான யாவையு மியையக் கொண்டு
தூயநான் மறைகள் வேத பாரகர் சொல்லத் தொல்லை
வாயில்க ணெருக்க நீங்க மாதவக் கிழவன் வந்தான்.

௭௭ கங்கையே முதல வாயக் கன்னியீ ருயதீர்த்தம்
மங்கலப் புனலு நாலு வாரியி னீரும் பூரித்
தங்கிசெய் வினையிற் கேற்ற யாவையு மமைத்து வீரச்
சிங்கவா சனமும் வைத்துச் செய்வன பிறவுஞ் செய்தான்

௭௮ கணிதநூ லுணர்ந்த மாந்தர் காலம்வந் துற்ற தென்னப்
பிணியற நோற்று நின்ற பெரியவன் விரைவி னெய்தி
மணிமுடி வேந்தன் றன்னை வல்லையிற் கொணர்தி யெனனப்
பணிதலை நின்ற காதற் சுமந்திரன் பரிவிற் சென்றான்.

௭௯ விண்டொட நிவந்த கோயில் வேந்தர்தம் வேந்தன் றன்னைக்
கண்டிலன் வினவக் கேட்டான் கைகயை கோயி னண்ணித்
தொண்டைவாய் மடந்தை மாரிற் சொல்லமற் றவருஞ் சொல்லப்
பெண்டிரிற் கூற்ற மன்னாள் பிள்ளையைக் கொணர்க வென்றாள்.

௮௰ என்றன ளென்னக் கேட்டா னெழுந்தபே ருவகை பொங்கப்
பொன்றிணி மாட வீதி பொருக்கென நீங்கிப் புக்கான்
தன்றிரு வுள்ளத் துள்ளே தன்னையே நினையு மற்றக்
குன்றிவர் தோளி னானைத் தொழுதுவாய் புதைத்துக் கூறும்.

அக கொற்றவர் முனிவோர் மற்றுங் குவலயத் துள்ளோ ருன்னைப்
பெற்றவன் றன்னைப் போலப் பெரும்பரி சியற்றி நின்றார்
சிற்றவை தானு மாங்கே கொணர்கெனச் செப்பி னாள்செம்
பொற்றட மகுடஞ் சூடப் போதுதி விரைவி னென்றான்.

அஉ அய்யனு மச்சொற் கேளா வாயிர மவுலி யானைக்
கைதொழு தரசர் வெள்ளங் கடலெனத் தொடர்ந்து சுற்றத்
தெய்வகீ தங்கள் பாடத் தேவர்கள் மகிழ்ந்து வாழ்த்தத்
தையலா ரிரைத்து நோக்கத் தாரணி தேரிற் போனான்.

அந திருமணி மகுடஞ் சூடச் சேவகன் செல்கின் றானென்
றொருவரி னொருவர் முந்திக் காதலோ டுவகை யுந்த
இருகையு மிரைத்து மொய்த்தா ரின்னுயிர் யார்க்கு மொன்றாய்ப்
பொருவருந் தேரிற் செல்லப் புறத்திடைக் கண்டார் போல்வார்.

அச துண்ணெனுஞ் சொல்லாள் சொல்லச் சுடர்முடி துறந்து தூய
மண்ணெனுந் திருவை நீங்கி வழிக்கொளா முன்னம் வள்ளல்
பண்ணெனுஞ் சொல்லி னார்தந் தோளெனும் பணைத்த வேயுங்
கண்ணெனுங் கால வேலு மிடைநெடுங் கானம் புக்கான்.

அரு சுண்ணமு மலருஞ் சாந்துங் கனகமுந் தூவ வந்து
வண்ணமே கலையு நாணும் வளைகளுஞ் சிந்து வாரும்
புண்ணுற வனங்கன் வாளி புதைத்ததம் புணர்மென் கொங்கை
கண்ணுறப் பொழிந்த காமங் கனற்றரக் கலுழு வாரும்.

அசு அங்கணா னவனி காத்தற் காமிவ னென்ன லாமோ
நங்கணான் பிலனென் றுள்ளந் தள்ளுற நடுங்கி நைவார்
செங்கணுங் கரிய கோல மேனியுந் தேரு மாகி
எங்கணுந் தோன்று கின்றா ரெனைவரோ விராம னென்பார்.

அஎ இனையராய் மகளி ரெல்லா மிரைத்தனர் நிறைத்து மொய்த்தார்
முனைவரு நகர மூதூர் முதிருரு மிளைஞர் தாமும்
அனையவன் மேனி கண்டா ரன்பினுக் கெல்லை காணார்
நினைவன மனத்தால் வாயா னிகழ்ந்தது நிகழ்த்து வாம்யாம். 1672

அஅ உய்ந்ததிவ் வுலக மென்பா ரூழிகாண் கிற்பா யென்பார்
மைந்தநீ கோடி யெங்கள் வாழ்க்கைநாள் யாவு மென்பார்
ஐந்தவித் தரிதிற் செய்த தவமுனக் காக வென்பார்
பைந்துணர்த் தெரிய லாய்க்கே நல்வினை பயக்க வென்பார்

அகூ உயரருளொண்கணொக்குந் தாமரை நிறத்தையொக்கும்
புயல்பொழி மேகமென்ன புண்ணியஞ் செய்தவென்பார்
செயலருந் தவங்கள் செய்திச் செம்மலைத் தந்த செல்வத்
தயரதற் கென்ன கைம்மா றுடையம்யாந் தக்க தென்பார். 1674

கூ0 வாரண மரற்ற வந்து மகரங்கோள் விடுத்த நேமி
நாரண னொக்கு மிந்த நம்பிதன் கருணை யென்பார்
ஆரண மறித றேற்றா வையனை யணுகி நோக்கிக்
காரண மின்றி யேயுங் கண்கணீர் கலுழ நிற்பார். 1675

கூக நீலமா முகிலி னான்ற னிறைவினோ டறிவு நிற்க
சீலமார்க் குண்டு கெட்டேன் றேவரி னடங்கு வானோ
காலமாக் குனித்து நுண்மைக் கணக்கையுங் கடந்துநின்ற
மூலமாய் முடிவி லாத மூர்த்தியிம் முன்ப னென்பார்.

கூஉ ஆர்கலி யகழ்ந்தோர் கங்கை யவனியிற் றந்தோர் முந்தைப்
போர்கெழு தேவர்க் காக வசுரரைப் பொருது வென்றோர்
பேர்கெழு சிறப்பின் வந்த பெரும்புகழ் நிற்ப தையன்
தார்கெழு திரடோ டந்த புகழினைத் தழுவி யென்பார்.

கூங *சந்தமிவை தாவின்மணி யாரமிவை யாவுஞ்
சிந்துரமு மிங்கிவை தெரிந்தமத வேழப்
பந்தமும் வயங்கொளி பசும்பொனின் வெறுக்கை
மைந்தர்வறி யோர்கொள வழங்கென நினைப்பார். 1678

கூச மின்பொருவு தேரின்மிசை வீரன்வரு போழ்திற்
றன்பொருவில் கன்றுதனி தாவிவரல் கண்டாங்
கன்புருகு சிந்தையொடு மாவுருகு மாபோல்
என்புருகி நெஞ்சுருகி நைந்துருகி நிற்பார். 1679

கூரு சத்திர நிழற்றநிமிர் தானையொடு நானா
அத்திர நிழற்றவரு ளோடவனி யாள்வார்
புத்திர ரினிப்பெறுதல் புல்லிதென நல்லோர்
சித்திர மெனத்தனி திகைத்துருகி நிற்பார். 1680

கூசா கார்மினொ டுலாயதென நூல்களுலு மார்பன்
தேர்மிசைநம் வாயில்கடி தேகுதல்செய் வானோ
நேர்மினிமிர் கோடிமணி யாலுநிதி யாலும்
தூர்மினெடு வீதியினை யென்றுசொரி வாரும். 1681

௯௭ தாய்கையில் வளர்ந்திலன் வளர்ந்தது தவத்தாற்
கேகயன் மடந்தைகிளர் ஞாலமிவ னாள்வான்
ஈகையி லுவந்தன ளியற்கையிது வென்றாற்
றோகையவள் பேருவகை சொல்லவரி தென்பார். 1682

௯௮ பாவமு மருந்துயரும் வேர்பறியு மென்பார்
பூவலய மின்றுமுத லன்றுபொது வென்பார்
தேவர்பகை யுள்ளவுமிவ் வள்ளறெறு மென்பார்
ஏவல்செயு மன்னர்தவம் யாவதுகொ லென்பார். 1683

௯௯ ஆண்டினைய ராயினைய கூறவடல் வீரன்
தூண்டுபுர விப்பொருவில் சுந்தர மணித்தேர்
மாண்டகொடி மாடநெடு வீதிமறை யப்போய்ப்
பூண்டபுகழ் மன்ன னுறைகோயில்புக லோடும். 1684

௧௦௦ *ஆங்குவந் தடைந்த வண்ண லாசையின் கவரி வீசப்
பூங்குழன் மகளி ருள்ளம் புதுக்களி யாட நோக்கி
வீங்கிருங் காதல் காட்டி விரிமுகக் கமல பீடத்
தோங்கிரு மகுடஞ் சூடி யுவகைவீற் றிருப்பக் காணான்.

௧௦௧ வேத்தவை முனிவ ரோடும் விருப்பொடுங் களிக்கு மெய்ம்மை
ஏத்தவை யிசைக்குஞ் செம்பொன் மண்டபத் தினிதின்னெய்தான்
ஒத்தவை யுலகத் தெங்கு முள்ளவை யுணர்ந்தா னுள்ளம்
பூத்தவை வடிவே லொக்குஞ் சிற்றவை கோயில் புக்கான்.

௧௦௨ புக்கவன் றன்னை நோக்கிப் புரவலர் முனிவ ரெல்லாந்
தக்கது நினைந்தான் றாதை தாமரைச் சரணஞ் சூடித்
திக்கினை நிமிர்ந்த கோலச் செல்வனே செம்பொற்சோதி
மிக்குயர் மகுடஞ் சூட்டச் சூடுதல் விழுமி தென்றார்.

௧௦௩ ஆயன நிகழும் வேலை யண்ணலு மயர்ந்து தேறாத்
தூயவன் கிடந்த சூழல் குறுகினன் வருத னோக்கி
நாயக னுரையான் வாயா னினிது பகர்வெ னென்னாத்
தாயென நினைவான் முன்னே கூற்றெனத் தமியள் வந்தாள்.

௧௦௪ வந்தவ டன்னைச் சென்னி மண்ணுற வணங்கி வாய்த்த
சிந்துரப் பவளச் செவ்வாய் செங்கையிற புதைத்து மற்றைச்
சுந்தரத் தடக்கை தானை மடக்குறத் தொழுது நின்றான்
அந்திவந் தடைந்த தாயைக் கண்டவான் கன்றி னன்னான்.

க0ரு நின்றவன் றன்னை நோக்கி யிரும்பினா லியன்ற நெஞ்சிற்
கொன்றுழல் கூற்ற மென்னும் பெயரிற் கொடுமை பூண்டாள்
இன்றெனக் குணர லாய தாயதே யென்ன லாகும்
ஒன்றுனக் குந்தை மைந்த வுரைத்ததோ ருரையுண் டென்றாள்.

க0சு எந்தையே யேவ நீரே யுரைசெய வியைந்த துண்டேல்
உய்ந்தன னடியே னென்னிற் பிறந்தன ருளரோ வாழி
வந்ததென் றவத்தி னாய வருபயன் மற்றொன் றுண்டோ
தந்தையுந் தாயு நீரே தலைநின்றேன் பணியு மென்றான்.

க0எ ஆழிசூ ழுலக மெல்லாம் பரதனே யாள நீபோய்த்
தாழிருஞ் சடைக டாங்கித் தாங்கருந் தவமேற் கொண்டு
பூழிவெங் கான நண்ணிப் புண்ணிய நதிக ளாடி
ஏழிரண் டாண்டின் வாவென் றியம்பின னரச னென்றாள்.

க0அ இப்பொழு தெம்ம னோருக் கியம்புவ தெளிதே யார்க்குஞ்
செப்பருங் குணத்தி ராமன் றிருமுகச் செவ்வி நோக்கில்
ஒப்பதே முன்பு [1]பின்பவ் வாசக முணரக் கேட்ட
அப்பொழு தலர்ந்த செந்தா மரையினை வென்ற தம்மா. 1693

க0கூ தெருளுடை மனத்து மன்ன னேவலிற் றிறம்ப வஞ்சி
இருளுடை யுலகந் தாங்கு மின்ன லுக் கிசைந்து நின்றான்
உருளுடைச் சகடம் பூண்ட வுடைய வனுய்த்த காரே
றருளுடை யொருவ னீக்க வப்பிணி யவிழ்ந்த தொத்தான். 1694

கக0 மன்னவன் பணியன் றாகி [2]னும்பணி மறுப்ப னோவென்
பின்னவன் பெற்ற செல்வ மடியனேன் பெற்ற தன்றோ
என்னிதி னுறுதி யப்பா லிப்பணி தலைமேற் கொண்டேன்
மின்னொளிர் கானமின்றே போகின்றேன் விடையுங் கொண்டேன்.

ந. கைகேசி சூழ்வினைப் படலம் முற்றும்.

(பிரதி) 1 பின்பின், 2 னின்பணி.

௪. நகர் நீங்கு படலம்

௧ என்றுகொண் டினைய கூறி யடிதொழு திறைஞ்சி மீட்டுந்
தன்றுணைத் தாதை பாத மத்திசை நோக்கித் தாழ்ந்து
பொன்றிணி போதி னாளும் பூமியும் புலம்பி னையக்
குன்றினு முயர்ந்த தோளான் கோசலை கோயில் புக்கான்.

௨ குழைக்கின்ற கவரி யின்றிக் கொற்றவெண் குடையு மின்றி
இழைக்கின்ற விதிமுன் செல்லத் தருமம்பின் னிரங்கிச் செல்ல
மழைக்குன்ற மனையான் மவுலி கவித்தனன் வருமென் றென்று
தழைக்கின்ற வுள்ளத் தன்னாள் முன்னொரு தமியன் சென்றான்.

௩ புனைந்திலன் மவுலி குஞ்சி மஞ்சனப் புனித நீரால்
நனைந்தில னென்கொ லென்னு மையத்தா னளின பாதம்
வனைந்தபொற் கழற்கால் வீரன் வணங்கலுங் குழைந்து வாழ்த்தி
நினைந்ததென் னிடையூ றுண்டோ நெடுமுடி புனைதற் கென்றாள்.

௪ *மங்கை யம்மொழி கூறலு [1]மானவன்
செங்கை கூப்பிநுங் காதற் றிருமகன்
பங்க மில்குணத் தெம்பி பரதனே
துங்க மாமுடி சூடுகின் றானென்றான். 1699

௫ முறைமை யன்றென்ப தொன் றுண்டதல்லது
நிறைகு ணத்தவ னின்னினு நல்லனோர்
குறைவி லன்னெனக் கூறின னால்வர்க்கும்
மறுவி [2]லன்பினில் வேற்றுமை மாற்றினாள். 1700

௬ என்று பின்னரு மன்னவ னேவிய
தன்றெ னாமை மகனே யுனக்கறன்
நன்று நும்பிக்கு நானில நீகொடுத்
தொன்றி வாழுதி யூழி பலவென்றாள். 1701

௭ தாயு ரைத்தசொற் கேட்டுத் தழைக்கின்ற
தூய சிந்தையத் தோமில் குணத்தினான்
நாய கன்னெனை நன்னெறி யுய்ப்பதற்
கேய துண்டோர் பணியென் றியம்பினான். 1702

௮ ஈண்டு ரைத்த பணியென்னை யென்றவட்
காண்டோ ரேழினோ டேழகன் கானிடை
மாண்ட மாதவத் தோருடன் வைகிப்பின்
மீண்டு நீவர வேண்டுமென் றானென்றான். 1703

(பிரதி) 1 மாதவன், 2 லன்பன்றி.

௯ ஆங்கவ் வாசக மென்னு மனல்குழை
தூங்கு தன்செவி யிற்றொட ராமுனம்
ஏங்கி னாளிளைத் தாடிகைத் தாண்மனம்
வீங்கி னாள்விம்மி னாள்விழுந் தாளரோ. 1704

௧௦ வஞ்ச மோமக னேயுனை மாநிலந்
தஞ்ச மாகநீ தாங்கென்ற வாசகம்
நஞ்ச மோவினி நானுயிர் வாழ்வெனோ
அஞ்சு மஞ்சுமென் னாருயி ரஞ்சுமால். 1705

௧௧ கைகள் கையி னெரிக்குந்தன் காதலன்
வைகு மாலிலை யன்ன வயிற்றினைப்
பெய்வ ளைத்தளி ராற்பிசை யும்புகை
வெய்து யிர்த்து விழுந்து புழுங்குமால். 1706

௧௨ நன்று மன்னன் கருணையெ னாகும்
நின்ற மைந்தனை நோக்கி நெடுஞ்சுரத்
தென்று போவதெ னாவெழு மின்னுயிர்
பொன்றும் போதுற்ற துற்றனள் போலுமால். 1707

௧௩ அன்பி ழைத்த மனத்தர சற்குநீ
என்பி ழைத்தனை யென்றுநின் றேங்குமால்
முன்பி ழைத்த வறுமையின் முற்றினோர்
பொன்பி ழைக்கப் பொதிந்தனர் போலவே. 1708

௧௪ அறமெ னக்கிலை யோவென வாவிநொந்
[1]திறவ டுத்ததென் றெய்வதை காளெனும்
பிறவி சைப்பதென் கன்று பிரிந்துழிக்
கறவை யொப்பக் கரைந்து கலங்கினாள். 1709

௧௫ இத்தி றத்தி னிடருறு வாடனைக்
கைத்த லத்தி னெடுத்தருங் கற்பினோய்
பொய்த்தி றத்தின னாக்குதி யோபுகல்
மெய்த்தி றத்துநம் வேந்தனை நீயெனா. 1710

௧௬ பொற்பு றுத்தன மென்மை பொதிந்தன
சொற்பு றுத்தற் குரியன சொல்லினான்
கற்பு றுத்திய கற்புடை யாடனை
வற்பு றுத்தி மனங்கொளத் தேற்றுவான். 1711

(பிரதி) 1 திறம்.

௰௭ சிறந்த வெம்பி திருவுற வெந்தையை
மறந்தும் பொய்யில னாக்கி வனத்திடை
உறைந்து தீரு முறுதிபெற் றேனிதிற்
பிறந்தி யான்பெறும் பேறென்ப தியாவதோ. 1712

௰௮ விண்ணு மண்ணுமவ் வேலையு மற்றும்வே
றெண்ணும் பூதமெ லாமழிந் தேகினும்
அண்ண லேவன் மறுக்க வடியனேற்
கொண்ணு மோவிதற் குள்ளழி யேலென்றான். 1713

௰௯ ஆகி லைய வரசன்ற னாணையால்
ஏக னீயென்றி யானுமு ரைக்கிலேன்
சாகிலா வுயிர் தாங்கவல் லேனையும்
போகி லுன்னொடுங் கொண்டனை போகென்றாள். 1714

௨௰ என்னை நீங்கி யிடர்க்கடல் வைகுறும்
மன்னர் மன்னனை வற்புறுத் தாதுடன்
துன்னு கானம் படரத் துணிவதே
அன்னை நீயறம் பார்க்கிலை யாமெனா. 1715

௨௧ வரிவி லெம்பியிம் மண்ணர சாயவற்
குரிமை மாநில முற்றபின் கொற்றவன்
திருவி னீங்கித் தவஞ்செயு நாளுடன்
அருமை நோன்புக ளாற்றுதி யாமென்றான். 1716

௨௨ சித்த நீதிகைக் கின்றதென் றேவரும்
ஒத்த மாதவஞ் செய்துயர்ந் தாரன்றே
எத்த னைக்குள வாண்டுக ளீண்டிவை
பத்து நாலும் பகலல வோவெனா. 1717

௨௩ முன்னர்க் கோசிக னென்னு முனிவரன்
தன்ன ருட்டலை தாங்கிய விஞ்சையும்
பின்ன ரெய்திய பேறும் பிழைத்தவோ
இன்ன நன்றவ ரேயது செய்தலே. 1718

௨௪ மாத வர்க்கு வழிபா டிழைத்தரும்
போத முற்றிப் பொருவரு விஞ்சைகள்
ஏத மற்றன தாங்கி யிமையவர்
காதல் பெற்றிந் நகர்வரக் காண்டியால். 1719

௨௫ மகர வேலைமண் டோயதண் டோட்டினர்
சகரர் தாதை பணிதலை நின்றுதம்
புகரில் யாக்கையி னின்னுயிர் போக்கிய
நிகரின் மாப்புகழ் நின்றதன் றேவெனா. 1720

௨௬ மான்ம றிக்கரத் தான்மழு வேந்துவான்
தான்ம றுத்திலன் றாதைசொற் றாயையே
ஊன றக்குறைத் தானுர வோனருள்
யான்ம றுப்பதென் றெண்ணுவ தோவெனா. 1721

௨௭ இத்தி றத்த வனைப்பல வாசகம்
உய்த்து ரைத்த மகனுரை யுட்கொளா
எத்தி றத்து மிறக்குமிந் நாடெனா
மெய்த்தி றத்து விளங்கிழை யுன்னுவாள். 1722

௨௮ அவனி காவல் பரதன தாகுக
இவனிஞ் ஞால மிறந்திருங் கானிடைத்
தவனி லாவகை காப்பென் றகவிலாப்
புவனி நாதற் றொழுதென்று போயினாள். 1723

௨௯ போகின் றாளைத் தொழுது புரவலன்
ஆக மற்றவ டன்னையு மாற்றியிச்
சோகந் தீர்ப்பவ ளென்று சுமித்திரை
மேகந் தோய்மணிக் கோயிலை மேவினாள். 1724

௩௰ நடந்த கோசலை கேகய நாட்டிறை
மடந்தை கோயிலை யெய்தினண் மன்னவன்
கிடந்த பார்மிசை வீழ்ந்தனள் கெட்டுயிர்
உடைந்த போதி னுடல்விழுந் தென்னவே. 1725

௩௧ *பிறிவோர் பிரிவோ விவைதான் பெரியோய் ககவோ வென்னும்
நெறியோ வடியோ நிலைநீ நினையாய் நினைவே யென்னும்
வறியோர் தனமே யென்னுந் தமியேன் வலியே யென்னும்
அறிவோ வினையே யென்னு மரசே யரசே யென்னும்.

௩௨ இருளற் றிடவுற் றொளிரு மிரவிக் கெதிருந் திகிரி
யுருளத் தனியுய்த் தொருதேர் நடையிற் கடைகா ணுலகம்
பொருளற் றிடமுற் றுறுமப் பகலிற் புகுதற் கென்றோ
அருளிற் கருதிற் றிதுவோ வரசர்க் கரசே யென்னும்.

௩௩ திரையார் கடல்சூ ழுலகின் றவமே திருவின் றிருவே
நிரையார் கலையின் கடலே நெறியார் மறையின் னிலையே
கரையா வயர்வே னெனைநீ கருணை யிலையே யென்னென்
றுரையா யிதுதா னழகோ வுலகே ழுடையா யென்னும்

௩௪ மின்னின் றனைய மேனி வெறிதாய் விடநின் றதுபோல்
உன்னுந் தகைமைக் கடையா வுறுமோ யுணர்கின் றுணரான்
என்னென் றுரையா யின்னே யிதுதா னேதென் றறியேன்
மன்னன் றன்மை காண வாராய் மகனே யென்னும்

௩௫ இவ்வா றழுவா ளிரியற் குரல்சென் றிசையா முன்னம்
ஒவ்வா தொவ்வா தென்னா வொளிர்வா ணிருபர் முனிவ
அவ்வா றறிவா யென்ன [1]வந்தான் முனிவன் னவனும்
வெவ்வா ளரசன் னிலைகண் டென்னும் வினையென் றுன்னா. 1730

௩௬ இறந்தா னரச னல்ல னிறவா தொழிவா னல்லன்
மறந்தா லுணர்வென் றன்னான் னென்கை கயர்கோன் மங்கை
துறந்தா டுயரந் தன்னைத் துறவா தொழிவா ளென்னாப்
பிறந்தார் பெயருந் தன்மை பிறரா லறிதற் கெளிதோ

௩௭ என்னா வுன்னா முனிவ னிடரா லழிவா டுயரஞ்
சொன்னா லாகா ளெனமுன் றெருமுகை கயர்கோன் மகளை
அன்னா யுரையா யரச னயர்வா னிலையென் னென்னத்
தன்னா னிகழ்ந்த தெல்லாந் தானே தெரியச் சொன்னாள்

௩௮ சொற்றாள் சொற்றா முன்னஞ் சுடர்வா ளரசர்க் கரைசப்
பொற்றா மரைபோற் கையாற் பொடிசூழ் படிநின் றெழுவிக்
கற்றா யயரே லவளே தருநின் காதற் சுரசை
எற்றே செயலின் றொழிநீ யென்றென் றிரவா நின்றான். 1733

௩௯ சீதப் பனிநீ ரளவித் திண்கா லுக்க மென்காற்
போதத் தளவே தழுவித் றின்சொற் புகலா நின்றான்
ஓதங் கடனஞ் சனையா னுரைநஞ் சொருவா றவியக்
காதற் புதல்வன் பெயரே புகல்வா னுயிருங் கண்டான்.

௪௰ காணா வையா வினிநீ பொழிவாய் கழிபே ரவலம்
ஆணா யகனே யினிநா டாள்வா னிடையூ றுளதோ
மாணா வுரையா டருமம் மழையே யனையான் மகுடம்
பூணா தொழிவா னெனில்யா முளமோ பொன்றே லென்றான்.

(பிரதி) 1 வந்தார் முனிவர் வந்தான்.

௪௧ என்ற முனிவன் றன்னை நினையா வினையே னினிநான்
பொன்றும் மளவில் லவனைப் புனைமா மகுடம் புனைவித்
தொன்றும் வனமென் றுள்ளா வண்ணஞ் செய்தென் னுரையுங்
குன்றும் பழிபூ ணமற் காவாய் கோவே யென்றான்.

௪௨ முனியும் முனியுஞ் செய்கைக் கொடியாண் முகமே முன்னி
இனியுன் புதல்வற் கரசு [1]மேனை யோருக் குயிரும்
மனுவின் வழிநின் கணவற் குயிரும் முதவி வசைதீர்
புனிதம் மருவும் புகழே புனையாய் பொன்னே யென்றான்.

௪௩ மொய்ம்மாண் வினைவே ரறவென் றுயர்வான் மொழியா முன்னம்
விம்மா விழுவா ளரசன் மெய்யிற் றிரிவா னென்னில்
இம்மா னுலகத் துயிரோ டினிவாழ் வுகவே னென்சொற்
பொய்மா ணமற் கின்றே பொன்று தொழியேனென்றாள்

௪௪ கொழுநன் றுஞ்சு மெனவுங் கொள்ளா துலகு மெனவும்
பழிநின் றுயரும் மெனவும் பாவ முளதா மெனவும்
ஒழிகின் றிலையன் றியுமொன் றுணர்கின் றிலையா னினிமேல்
மொழிகின்றனவென் னென்று முனியும் முறையன் றென்பான்

௪௫ கண்ணோ டாதே கணவ னுயிரோ டிடர்கா ணாதே
புண்ணூ டாடுங் கனலோ விடமோ வென்னப் புகல்வாய்
பெண்ணோ தீயோ மாயப் பேயோ கொடியாய் நீயும்
மண்ணோ டுன்னோ டென்னு மனமே வலிதே யென்றான்

௪௬ வாயான் மன்னன் மகனை வனமே கென்று முன்னம்
நீயோ சொன்னா யவனோ நிமிர்கா னிடைவன் னெறியிற்
போயோ புகலோ தவிரப் புகழோ டுயிரைச் சுடுவெந்
தீயோ நின்போற் றீயோ ருளரோ செயலென் னென்றான்.

௪௭ தாவின் முனிவன் புகலத் தளரா நின்ற மன்னன்
நாவின் னஞ்ச முடைய நங்கை தன்னை நோக்கிப்
பாவி நீயே வெங்கான் படர்வா யென்றென் னுயிரை
[2]ஏவி னாயோ வவனு [3]மேகி னானோ வென்ன. 1742

௪௮ கண்டே னெஞ்சங் களிநின் கனிவாய் விடநா னெடுநாள்
உண்டே னதனா லென்ன னுயிரை முதலோ டுண்டாய்
பண்டே யெரிமுன் னுன்னைப் பாவி தேவி யாகக்
கொண்டே னல்லேன் வேறோர் கூற்றந் தேடிக் கொண்டேன்.

(பிரதி) 1 பேனை யோருக் குயிரும். 2 ஏவின் 3 மேகின்.

௪௯ விழிக்குங் கண்வே றில்லா வெங்கா னென்கான் முளையைச்
சுழிக்கும் வினையா லேகச் சூழ்வா யென்னிற் பேழ்வாய்
பழிக்கு நாணுய் மாணுப் பாவி யினியென் பலவுன்
கழுத்தி ஞணுன் மகற்குக் காப்பு ஞணு மென்னு. 1744

௫௰ இன்னே பலவும் பகர்வா னிரங்கா தவளை நோக்கிச்
சொன்னேன் முன்னே யிவளென் றூர மல்ல டுறந்தேன்
மன்னே யாவான் வருமப் பரதன் றனையும் மகனென்
றுன்னேன் முனிவா வவனு மாகா னுரிமைக் கென்றான்.

௫௧ என்னைக் கண்டு மேகா வண்ண மிடையூ றுடையான்
உன்னைக் கண்டு மிலனே வென்னு வுயர்கோ சலையைப்
பின்னைக் கண்டா னனையான் பிரியக் கண்ட துயரந்
தன்னைக் கண்டே தவிர்வா டளர்வா ணிலையிற் றளர்வான்

௫௨ மாற்றுள் செயலா மென்றுங் கணவன் வரமீந் துள்ளம்
ஆற்று தயர்ந்தா னென்று மறிந்தா ளவளும் மனத்தைத்
தேற்று நின்றுண் மகனைத் திரிவா னென்னு ளரசன்
தோற்றுன் மெய்யென் றுலகஞ் சொல்லும் பழிக்குஞ் சோர்வாள்.

௫௩ தள்ளா நிலைசான் மென்மை தழுவா வகையா லெய்தின்
எள்ளா நிலைகூர் பெருமைக் கிழிவா மென்று லுரவோய்
விள்ளா நிலைசே ரன்பான் மகன்மே னினியிவ் வுலகங்
கொள்ளா தன்றே வென்றுள் கணவன் குறையக் குறைவாள்.

௫௪ போவா னொழியா னென்றுள் புதல்வன் றன்னைக்கணவன்
சாவா தொழியா னென்றென் றுள்ளந் தளர்வுற் றயர்வாள்
காவா யென்னுண் மகனைக் கணவன் புகழுக் கழிவாள்
ஆவா வுயர்கோ சலையா மன்ன மென்னுற் றனளே. 1749

௫௫ உணர்வா னனையா ளுரையா லுயர்ந்தா னுரைசால் குமரன்
புணரா னிலமா வனமே போவா னேயா மென்னு
இணரார் தருதா ரரச னிடரா லயர்வான் வினையேன்
துணைவா துணைவா வென்றான் றேன்று றேன்று யென்றான்.

௫௬ கண்ணு நீரா யுயிரு மொழுகக் கழியா நின்றேன்
எண்ணு நீரான் மறையோ ரெரிமுன் னின்மேற் சொரிய
மண்ணு நீராய் வந்த புனலை மகனே வினையேன்
உண்ணு நீரா யுதவி யுயர்கா னடையா யென்றான். 1751

௫எ படைமா ணரசைப் பலகான் மழுவா ளதனு லெறிவான்
மிடன்மாண் வலிதானனையான் வில்லோ டடுமா வல்லாய்
உடையாமகுடம்புனையென் றுரையாவுடனே கொடியேன்
சடைமா மகுடம் புனையத் தந்தே னந்தோ வென்றான்.

௫அ கறுத்தா யுருவும் மனமுங் கண்ணுங் கையுஞ் செய்யாய்
பொறுத்தாய் பொறையே யிறைவன் புரமூன் றெரித்த போர்வில்
இறுத்தாய் தமியே னென்னு யென்னை யிம்மூப் பிடையே
வெறுத்தா யினிநான் வாணாள் வேண்டேன் வேண்டேனென்றான்.

௫௯ பொன்னின் முன்னமொளிரும்பொன்னே புகழின்புகழே
மின்னின் மின்னும் வரிவிற் குமரா மெய்யின் மெய்யே
என்னின் முன்னம் வனநீ யடைதற் கெளியே னல்லேன்
உன்னின் முன்னின் புகுவே னுயர்வா னினியானென்றான்.

௬0 நெகுதற் கொத்த நெஞ்சி னேய்த்தாலே யாவி
உகுதற் கொத்த வுடலு முடையே னுன்போ லல்லேன்
தகுதற் கொத்த சனகன் றையல் கையைப் பற்றிப்
புகுதக் கண்ட கண்ணுற் போகக் காணே னென்றான்.

௬௧ எற்றே பகர்வே னினியா னென்னே யுன்னிற் பிரிய
வற்றே யுலகமெனினும் வானே வருந்தா [1]தெனினும்
பொற்றே ரரசே தமியேன் புகழே யுயிரே யுன்னைப்
பெற்றே னருமை யறிவேன் பிழையேன் பிழையே னென்றான்.

௬௨ அள்ளற் பள்ளப் புனல்சூழ் மகனு னிலமும் மரசுங்
கொள்ளக் குறையா நிதியின் குவையுமுதலா வெவையுங்
கள்ளக் கைகே சிக்கே யுதவிப் புகழ்கைக் கொண்ட
வள்ளற் றனமென் [2]னுயிரைமாய்க்கும்மாய்க்குமென்றான்

௬௩ ஓலியார் கடல்சூழுலகத் துயர்வா னிடைநா கரினும்
பொலியா நின்றா னுன்னைப் போல்வா ருளரோ பொன்னே
வலியா ருடையா ரென்றான் மழுவா ளுடையான் வரவுஞ்
சலியா நிலையா னென்றாற் றவிர்வா ருளரோ வென்றான்

௬௪ கோட்டே யிருந்தே னெனினுங் கிளர்வா னின்றே யடைய
மாட்டே னுகிலன் றோவன் கணென் கண் மைந்தா
காட்டே யுறைவாய் நீயிக் கைகே சியையுங் கண்டியான்
நாட்டே யுறைவே னென்றா னன்றென் றன்மையென்றான்

(பிரதி) 1 னெனினும். 2 னுயிரா லன்றி மறையெ னென்றான்,

௬௫ மெய்யே தவமே செய்துன் மிடல்மார் பரிதிற் பெற்ற
செய்யா ளென்னும் பொன்னு நிலமா தென்னுந் திருவும்
உய்யா ருய்யார் கெடுவே னுன்னைப் பிரியில் வினையேன்
ஐயா கைகே சியைநே ருளரா கேனோ வென்றான். 1760

௬௬ பூணா ரணியும் முடியும் பொன்னா சனமுங் குடையுஞ்
சேணார் மார்புந் திருவும் தெரியக் காணக் கடவேன்
மாணா மாவற் கலையு மானின் றோலு மவைதான்
காணா தொழிந்தே னன்றாய்த் தன்றோ கன்றே யென்றான். 1761

௬௭ ஒன்றோ டொன்றென் றெவ்வா வுரைதந் தாசன் னுயிருஞ்
சென்றோ நின்றா னென்னுந் தன்மை யெய்தித் தேய்ந்தான்
மென்றோல் மார்பின் முனிவன் வேந்தே யயரே லவனை
யின்றே பேகா வண்ணந் தகைவ னுலகோ டென்றான். 1762

௬௮ முனிவன் சொல்லு மளவின் முடியுங் கொல்லென் றரசன்
றனிநின் றுழறன் னுயிரைச் சிறிதே தகைவா னிந்தப்
புனிதன் போனா லிவனாற் போகா தொழிவா னென்னா
மனிதன் வடிவங் கொண்ட மறையோன் றானும் போனான்

௬௯ மறந்தா னினைவு முயிரும் மன்ன னென்ன மறுகி
இறந்தான் கொல்லோ வரச னென்னோ விடருற் றழிவான்
துறந்தாய்மகனே யுலகோ டமையுமென்னத் துணையாம்
அறந்தா னிதுவோ வையா வரசற் கரசே யென்றாள்.

௭௰ மெய்யின்மெய்யே யுலகின் வேந்தர்க் கெல்லாம் வேந்தே
உய்யும் வகைநின் னுயிரை யோம்பா திங்ஙன் றேம்பின்
வையு முழுதுந் துயரான் மறுகு முனிவன் னுடனம்
ஐயன் வரினும் வருமா லயரே லயரே லரசே. 1765

௭௧ என்றென் றரசன் மெய்யு மிருதா ளிணையும் முகனுந்
தன்றன் செய்ய கையாற் றைவந் திடுகோ சலையை
ஒன்றுந் தெரியா மம்ம ருள்ளத் தரசன் மெள்ள
வன்றிண் சிலைநங் குரிசில் வருமே வருமே யென்றான்.

௭௨ [1]வன்மா யக்கை கேசி வாக்கா லென்றன் னுயிரை
முன்மாய் விப்பத் துணிந்தா ளேனுங் கூனி மொழியாற்
றன்மா மகனுந் தானுந் தரணி பெறுமா றன்றி
யென்மா மகனைக் கானே கென்றா ளெறும்பின் கதையாள்

(பிரதி) 1 வன்மா மாயக் கைகேசி,

௭௩ பொன்னார் வலயத் தோளான் கானே புகுத றவிரான்
என்னு ருயிரோ வகலா தொழியா திதுகோ சலைகேண்
முன்னு ளொருமா முனிவன் மொழிந்த சாப முளதென்
றந்நா ளுற்ற தெல்லா மவளுக் கரச னறைவான். 1768

௭௪ வெய்ய கானத் திடையே வேட்டை வேட்கை மிகவே
ஐய சென்றே கரியோ டரிக டுருவித் திரிவேன்
கையிற் சிலையுங் கணையு மிறுகக் கதமா வருமோர்
செய்ய நதியின் கரைவாய்ச் சென்றே மறைய நின்றேன்.

௭௫ ஒருமாமுனிவன் மனையோ டொளியொன் றிலதாய் நயனந்
திருமா மகவே துணையாய்த் தவமே புரிபோழ் தினின்வாய்
அருமாமைந்தன்புனல்கொண் டகல்வான்வருமா றறியேன்
பொருமா கணைவிட் டிடலும் பூமீ தலறிப் புரள 1770

௭௬ புக்குப் பெருநீர் நுகரும் பொருபோ தகமென் றுருவிமேற்
கைகட் கணைசென் றதலாற் கண்ணிற் றெரியக் கானேன்
அக்கைக் கரியின் குரலே யன்றீ தென்ன வெருவா
மக்கட் குரலென் றயர்வேன் மனநொந் தவண்வந் தனனால்

௭௭ கையுங் குடமுந் நெகிழக் கணையோ டுழல்வோற் கானு
மெய்யுந் தனுவு மனனும் வெறிதே கிடமேல் வீழா
ஐய நீதான் யாவ னந்தோ வருள்கென் றயரப்
பொய்யொன் றறியா மைந்தன் கேணீ யென்னப் புகல்வான்.

௭௮ சேலா கியமா முதல்வன் றிருவுந் தியின்மா மலரின்
மேலா கியநான் முகனார் வேதங் களின்மா முறையின்
பாலா கியயோ னிகளிற் பலவாம் வருணந் தருவான்
நாலா கியதாம் வருணந் தனின்மே லைமைநல் கினனால்.

௭௯ இருகண் களுமின் றியாய்க்கு மெந்தைக் குமிங் கிவர்கள்
பருகும் புனல்கொண் டகல்வான் படர்ந்தேன் பழுதா யினதால்
இருகுன் றனைய புயத்தா யிபமென் றுணரா வெய்தாய்
உருகுந் துயரந் தவிர்நீ யூழின் செயலீ தெனவே. 1774

௮௰ உண்ணீர் வேட்கை மிகவே யுயங்கு மெந்தைக் கொருநீ
தண்ணீர்கொடுபோயளித்தென் சாவுமுரைத்துப்புதல்வன்
விண்மீ தடைவான் றொழுதான் வருந்தே லெனவும் விளம்பென்
றெண்ணீர் மையினன் வாரே றெதிர்கொண் டிடவே கினனால்.

௮௧ மைந்தன் வரவு நோக்கும் வளர்மா தவர்பான் மகவோ
டந்தண் புனல்கொண் டணுக வையா விதுபோ தளவாய்
வந்திங் கணுகா யென்னோ வந்த தென்னே நொந்தேஞ்
சந்தங் கமழுந் தோளாய் தழுவிக் கொளவா வெனவே.

௮௨ ஐயா யானோ ரரச னயோத்தி நகரத் துள்ளேன்
மையார் களபந் துருவி மறைந்தே வதிந்தேன் றிருவாய்
பொய்யா வாய்மைப் புதல்வன் புனன்மொண் டிடுமோ தையின்மேற்
கையாற் கணைசென் றதலாற் கண்ணிற் றெரியக் காணேன்

௮௩ வீட்டுண் டலறுங் குரலால் வேழக் குரலன் றெனவே
ஓட்டந் தெதிரா னையா ரெனவுற் றதெலா முறையா
வாட்டந் தருநெஞ் சினனாய் நின்றான் வணங்கி வானோர்
ஈட்ட மெதிர்வந் திடவே யிறந்தே கினன்விண் ணிடையே

௮௪ அறுத்தாய் கணையா லெனவே யடியேன் றன்னை யைய
கறுத்தே யருளா தியானோ கண்ணிற் கண்டே னல்லேன்
மறுத்தா னில்லான் வனமொண் டிடுமோ தையினெய் தனனாற்
பொறுத்தே யருள்வா யென்று விருதாள் சென்னி புனைந்தேன். 1779

௮௫ வீழ்ந்தா ரயர்ந்தார் புரண்டார் விழியே போயிற் றென்றார்
ஆழ்ந்தார் துன்பக் கடலு ளையா வையா வென்றார்
போழ்ந்தாய் நெஞ்சை யென்றார் பொன்னு டதனிற் போய்நீ
வாழ்ந்தே யிருப்பத் தரியேம் வந்தே மினியே.

௮௬ என்றென் றயருந் தவரை யிருதாள் வணங்கி யானே
இன்றும் புதல்வ னினிநீ ரேவும் பணிசெய் திடுவேன்
ஒன்றுந் தளரே லையா வொழியு மிடரென் றிடலும்
வன்றிண் சிலையாய் கேண்மோ வென்று வொருசொல் வகுத்தார்.

௮௭ கண்ணுண் மணிபோன் மகவை யிழந்து முயிர்கா தலியா
உண்ண வெண்ணி யிருந்தா லுலகோ ரென்னென் றுரையார்
விண்ணின் றலைசே ருதும்யா மெம்போல் விடலை பிரியப்
பண்ணும் பரிமா வுடையா யடைவாய் படர்வா னெனவே.

௮௮ தார்வா தொளிருங் குடையாய் தவறீங் கிதுநின் சரணங்
காவா யென்று யதனாற் கடிய சாபங் கருதேம்
ஏவா மகவைப் பிரிந்தின் றெம்போ லிடருற் றினையா
போவா யுகல்வா னென்னுப் பொன்னுட் டிடைபோ யினரால்.

௮௯ சிந்தை தளர்வுற் றயர்வுஞ் சிறிது மில்னா யின்சொல்
மைந்த னுளனென் றதனான் மகிழ்வோ டிவண்வந் தனனால்
அந்த முனிசொற் றமையு மண்ணால் வனமே குதலும்
என்ற னுயிர்வீ குதலு மிறையுந் தவறா தென்றான். 1784

௯௰ *உரைசெய் பெருமை யுயர்குணத்தோ [1]ரோங்கல்
புரைசெய் மதகளிற்றான் பொற்கோயின் முன்னம்
முரச முழங்க முடிசூட்ட மொய்த்தாண்
டரச ரினிதிருந்த நல்லவையி னாயினன். 1785

௯௧ வந்த முனியை முகநோக்கி வாள்வேந்தர்
எந்தை புகுந்த விடையூறுண் டாயதோ
அந்தமில் சோகத் தாழ்கதுரற் றானென்ன
சிந்தை தெளிந்தாய் தெளியெமக்கீ தென்றுரைத்தார்.

௯௨ வேந்தன் பணியினாற் கைகேசி மெய்ப்புதல்வன்
பாந்தண் மிசைக்கிடந்த பார்காப்பா னாயினான்
ஏந்துந் தடந்தோ ளிராமன் றிருமடந்தை
காந்த னொருமுறைபோய்க் காடுறைவா னாயினான். 1787

௯௩ கொண்டாள்வரமிரண்டுங் கைகயர்கோன்கொம்பவட்குத்
தண்டாத செங்கோற் றசரதனுந் தானளித்தான்
ஒண்டார் முகிலை வனம்போகென் றொருப்படுத்தாள்
எண்டானும் வேறில்லை யீதடுத்த வாறென்றான். 1788

௯௪ வாரார் முலையாரு மற்றுள்ள மைந்தர்களும்
ஆராத காத லரசர்களு மந்தணரும்
பேராத வாய்மைப் பெரியோ னுரைசெவியுட்
சாராத முன்னந் தசரதனைப் போல்வீழ்ந்தார். 1789

௯௫ புண்ணுற்ற தீயிற் புகையுற் [2]றுயிர்பதைப்ப
மண்ணுற் றயர்ந்து மறுகிற் றுடம்பெல்லாங்
கண்ணுற்ற வாரி கடலுற்ற தந்நிலையே
விண்ணுறற தெம்மருங்கும் விட்டழுத போரோசை.

௯௬ மாத ரருங்கலமு மங்கலமுஞ் சிந்தித்தங்
கோதை புடைபெயரக் கூற்றனைய கண்சிவப்பப்
பாத மலர்பதைப்பத் தாம்பதைத்துப் பார்வீழ்ந்தார்
ஊதை யெறிய வொசிபூங் கொடிபோல்வார். 1791

(பிரதி) 1 னோங்கற். 2 றுரை பதைப்ப,

கூள ஆவா வரச னருளிலனே [1]யாமென்பார்
காவா வறத்தையினிக் கைவிடுவோம் [2]யாமென்பார்
தாவாத மன்னர் தலத்தலைவீழ்ந் தேங்கினார்
மாவாதஞ் சாய்த்த மராமரமே போல்வீழ்ந்தார். 1792

கூஅ இள்ளையொடு பூவை யழுத கிளர்மாடத்
துள்ளுறையும் பூசை யழுத வுருவறியாப்
பிள்ளை யழுத பெரியோரை யென்சொல்ல
வள்ளல் வனம்புகுவா னென்றுரைத்த மாற்றத்தால்.

கூகூ சேதாம்பற் போதனைய செங்கனிவாய் வெண்டளவப்
போதாம்பற் றேன்றப் புணர்முலைமேற் பூண்டரள
மாதாம்பற் றென்ன மழைக்கண்ணீ ராலியுக
நாதாம்பற் றுமழலை நங்கைமா ரேங்கினார். 1794

க00 ஆவு மழுதவதன் கன்றழுத வன்றலர்ந்த
பூவு மழுதபுனற் புள்ளழுத கள்ளொழுகுங்
காவு மழுத களிறழுத கால்வயப்போர்
மாவு மழுதனவான் மன்னவனை மானவே. 1795

க0க நானீயு முய்கலா மென்னாதே நாயகனைக்
கானீயு மென்றுரைத்த கைகேசி யுங்கொடிய
கூனீயு மல்லாற் கொடியார் பிறருளரே
மேனீயு மெல்லாம் வெறுநீரே யாயினார். 1796

க0உ தேரூ தறிவழிந்தா ரெங்குலப்பார் தேரோட
நீராகிச் சுண்ண நிறைந்த தெருவெல்லாம்
ஆறாகி யோடின கண்ணினீ ராருணெஞ்சங்
கூறாகி யோடாத வித்த னயே குற்றமே. 1797

க0ந மண்செய்த பாவ முளம்தென்பார் மாமலர்மேற்
பெண்செய்த பாவ மிதனிற் பெரிதென்பார்
புண்செய்தார் நெஞ்சை விதியென்பார் பூதலத்தோர்
கண்செய்த பாவங்[3]கடலிற் பெரிதென்பார். 1798

க0ச ஆளான் பரத னரசென்பா ரையனினி
மீளா னமக்கு விதிகொடிதே காணென்பார்
கோளாகி வந்தவா கொற்ற முடியென்பார்
மாளாத நம்மின் மனம்வலியா ராரென்பார் 1799

(பிரதி) 1 யாமென்றும். 2 யாமென்றும். 3 கடலென்ப தாயினார்

கoரு ஆதி யரச னருங்கை கயர்மகண்மேற்
காதன் முதிரக் கருத்தழிந்தா ளுமென்பார்
சீதை மணவாளன் றன்னோடுந் தீக்கானம்
போது மதுவன்றேற் புகுது மெரியென்பார். 1800

கoசு கையானி லந்தடவிக் கண்ணீர் மெழுகுவார்
உய்யாள்பொற் கோசலையென் றோதுவார் வெய்துயிர்ப்பார்
ஐயாவி ளங்கோவே யாற்றுதியோ நீயென்பார்
நெய்யார மூலுற்ற துற்றூரங் நீணகரார். 1801

கoஎ தள்ளூறு வேறில்லாத் தன்மகற்குப் பார்கொள்வான்
எள்ளூறு தீக்கரும நேர்ந்தா ளிவளென்பார்
கள்ளூறு செவ்வாய்க் கணிகையருங் கைகேசி
உள்ளூறு காதலிலள் போலென் [1]றுள்ளழிந்தார் 1802

கoஅ நின்று தவமியற்றித் தான்றீர நேர்ந்ததோ
வன்றி யுலகத்து ளாருயிரை வாழ்வாரைக்
கொன்று களையக் குறித்த பொருளன்றோ
நன்று வரங்கொடுத்த நாயகற்கு நன்றென்பார். 1803

கoகூ பெற்றுடைய மண்ணவளுக் கீய்ந்து பிறந்துலகம்
முற்றுடைய கோவைப் பிரியாது மொய்த்தீண்டி
உற்றுறையும் யாரு முறையவே சின்னாளிற்
புற்றுடைய காடெல்லா நாடாகிப் போமென்பார். 1804

ககo என்னே நிருப னியற்கை யிருந்தவா
தன்னேரொன் றில்லாத தலைமகற்குத் தாரணியை
முன்னே கொடுத்து முறைதிறம்பத் தம்பியற்குப்
பின்னே கொடுத்தாற் பிழையாதோ மெய்யென்பார்.

கக்க கோதை வரிவிற் குமரர் கொடுத்தநில
மா‥த யொருவர் புணர்‥ராம் வஞ்சித்த
பேதை சிறுவனையே பின்பார்த்து நிற்குமே
சீதை பிரியினுந் தீரா டி நவென்பார். 1806

ககஉ உந்தாது [2]நெய்வார்த் த நவாது காலெறிய
நந்தா விளக்கி னடுங்குகின்ற நங்கைமார்
செந்தா மரைப்பெருங்கட் செவ்வி யருணோக்கம்
அந்தோ பிரிதுமோ வாவிதியே யோவென்பார். 1807

(பிரதி) 1 றுள்ளழிவார். 2 நெய்வந் துறையாது.

௧௧௩ *கேட்டா னிளையோன் கிளர்ஞாலம் வரத்தினாலே
மீட்டா ளளித்தாள் வனந்தம்முனை வெம்மை முற்றித்
தீட்டாத வேற்கட் சிறுதாயென யாவராலும்
மூட்டாத காலக் கடைத்தீயென மூண்டெழுந்தான்.

௧௧௪ கண்ணிற் கடைத்தீயுக நெற்றியிற் கற்றை நாற
விண்ணிற் சுடருஞ் சுடர்தோன்ற மெய்நீர் விரிக்க
உண்ணிற்கு முயிர்ப்பெனு மூதை பிறக்க நின்ற
அண்ணற் பெரியோன் றனதாதியின் மூர்த்தி யொத்தான். 1809

௧௧௫ சிங்கக் குருளைக்கிடு தீஞ்சுவை யூனை நாயின்
வெங்கட் சிறுகுட் டனுக்கூட்ட விரும்பி னாளால்
நங்கைக் கறிவின் றிறநன்றிது நன்றி தென்னாக்
கங்கைக் கிறைவன் கமலக்கை புடைத்து நக்கான். 1810

௧௧௬ சுற்றார் மணியின் வடிவாள்புடை தோன்ற வார்த்து
விற்றாங்கி வாளிப் பெரும்புட்டில் புறத்து வீக்கிப்
பற்றார்ந்த செம்பொற் கவசம்பனி மேரு வாங்கோர்
புற்றா மென வோங்கிய தோளொடு மார்பு போர்க்க.

௧௧௭ அடியிற் சுடர் பொற்கழ லார்கலி நாண வார்ப்பப்
பிடியிற் றடவுஞ் சிறுநாண் பெரும் பூச லோசை
இடியிற் றொடரக் கடலேழு மெடுத்து ஞாலம்
முடிவிற் குமிறும் மழை மும்மையின் மேன்முழங்க.

௧௧௮ வானு நிலனு முதலீறில் வரம்பில் பூதம்
மேனின்று கீழ்காறும் பிரிந்தன வீழ்வ போலத்
தானுந் தனதம்முனு மல்லது மும்மை ஞாலத்
தூனு முயிரு முடையார்க ளுளைந் தொதுங்க. 1813

௧௧௯ புவிப்பாவை பரங்கெட போரில்வந் தோன ' யெல்லாம்
அவிப்பானு மின்றே யவித்தாக்கையை யடாட முற்றக்
குவிப்பானு மின்றே யெங்கோவினைக் கொற்ற மௌலி
கவிப்பானு [1]மின்றே னிதுகாக்குனர் காமி, னென்றான்.

௧௨0 விண்ணாட்டவர் விஞ்சையர் மண்ணவர் நாகர் மற்றும்
எண்ணாட்டவர் யாவரு நிற்கவொர் மூவ ராகி
மண்ணாட்டுநர் காக்குநர் நீக்குனர் வந்த போதும்
பெண்ணாட்ட மொட்டே னினிப்பே ருலகத்து ளென்னா.

(பிரதி) 1 மின்றே யிதுகாக்குனர்.

கஉக காலைக் கதிரோ னடுவுற்றதோர் வெம்மை காட்டி
ஞாலத்தவர் கோமக னங்கரத்து நாப்பண்
மாலைச் சிகரத் தனிமந்தர மேரு முந்தை
வேலைத் திரிகின் றதுபோற் றிரிகின்ற வேலை. 1816

கஉஉ வேற்றுக் கொடியாண் முடிப்பித்த வினைக்கு விம்மித்
தேற்றத் தெளியா தயர்சிற் றவைபா லிருந்தான்
ஆற்றத் தனித் தம்பிதன் விற்புய லண்ட கோளங்
கீற்றுத் துடையப்படு நாணுரு மேறு கேளா. 1817

கஉங வீருக்கிய பொற்கலன் வில்லிட வார மின்ன
மாருத் தனிச்சொற் றுளிமாரி வழங்க வந்தான்
காருக்க நிமிர்ந்து கனன்று புகைந்து [1]பொங்கும்
[2]ஆருக்கன லாற்றுமொ ரஞ்சன மேக மென்ன. 1818

கஉச மின்னொத்த சீற்றக் கனல்விட்டு விளங்க நின்ற
பொன்னொத்த மேனிப் புயலொத்த தடக்கை யானை
என்னத்த னென்னீ யிமையோரை முனிந்தி லாதாய்
சன்னத்த னாகித் தனுவேந்துதற் கேது வென்றான். 1819

கஉரு மெய்யைச் சிதைவித்துநின் [3]மென்முறைநீத்தநெஞ்சின்
மையிற் கரியாளெதிர் நின்னையம் மௌலி சூட்டல்
செய்யக் கருதித் தடைசெய்குநர் தேவ ரேனுந்
துய்யைச் சுடுவெங் கனலிற் சுடுவான் றுணிந்தேன்.

கஉசா வலக்கார் முகமென் கையதாகவவ் வானு ளோரும்
விலக்கா ரவர்வந்து விலக்கினு [4]மென்கை வாளி
இலக்கா யெரிவித் துலகேழினொ டேழு மன்னர்
குலக்காவலுமின் றுனக்கியான் றரக்கோடி யென்றான்.

கஉஎ இளையா னிதுகூற விராம னியைந்த நீதி
வளையாவரு நன்னெறி நின்னறி வாகு மன்றே
[5]விளையாவறம் வற்றிட வூழ்வழு வுற்ற சீற்றம்
விளையாத நிலத்துனக் கெங்ஙன் விளைந்த தென்றான்.

கஉஅ நீ டான துரைத்தலு நித்திலந் தோன்ற நக்குச்
சேண்டான் றொடர்மாநில நின்னது தாதைசெப்பப்
பூண்டாய் பகையா விழுந்தாய்வனம் போதி யென்றால்
யாண்டோ வடியேற் கினிச்சீற்ற மடுப்ப[6]தென்னா. 1823

(பிரதி) 1 பொங்கி. 2 மாருக். 3 மென்மை 4 மென்மை
5 உளையாவா மற்றிட ஆழ்வழு வற்ற. 6 தென்றோ.

௧௨௯ நின்கட் பரிவில்லவர் நீள்வனத் துன்னை நீக்கப்
புன்கட் பொறியாக்கை பொறுத்துயிர் போற்றுகேனோ
என்கட் புலமுன் னுனக்கீய்ந்துவைத் தில்லையென்ற
வன்கட் புலந்தாங்கிய மன்னவன் .[1]போல வென்றான்.

௧௩௰ பின்குற்ற மன்னும் பயக்கு மரசென்றல் பேணேன்
முன்குற்ற மன்ன முடிகொள்கெனக் கொள்ள மூண்ட
என்குற்ற மன்றி விகல்மன்னவன் குற்றம் யாதோ
மின்குற் றொளிரும் வெயிலிற்கொண் டமைந்தவேலோய்

௧௩௧ நதியின் பிழையன்று நறும்பெய லின்மை மற்றப்
பதியின் பிழையன்று பயந்து நமைப் புரந்தாள்
மதியின் பிழையன்று மகன்பிழை யன்று மைந்தா
விதியின் பிழைநீ யிதற்கென்னை வெகுண்ட தென்றான்.

௧௩௨ உதிக்கும்முலை யுள்ளூறு தீயென வூதை பொங்கக்
கொதிக்கும்மன மெங்ஙன மாறுமிக் கோளி ழைத்தாள்
மதிக்கும்மதி யாமுதல் வானவர்க் கும் மற்றை
விதிக்கும் விதியாமென் விற்றொழில் காண்டியென்றான்

௧௩௩ ஆய்தந்தவ னவ்வுரை கூறலு மைய னின்றான்
வாய்தந் ததுகூறு தியோமறை தந்த நாவாய்
நீதந்த தன்றே [2]நெறியின்க ணிலாத தீன்ற
தாய்தந்தை [3]யென்று லவர்மேற் சலிக்கின்ற தென்னே.

௧௩௪ நற்றா தையுநீ தனிநா யகனீ வயிற்றிற்
பெற்றாயு நீயே பிறரில்லை பிறர்க்கு நல்கக்
கற்றா யிதுகாணு தி யின்றெனக் கைம்ம றித்தான்
முற்றா மதியம் மிலைந்தான் முனிந்தானை யன்னான். 1829

௧௩௫ வரதன் பகர்வான் வரம்பெற்றவ டானிவ் வையஞ்
சரதம் முடையா ளவளென் றனித் தாய ரன்றேற்
பரதன் பெறுவா னினியான் படைக்கின்ற செல்வம்
விரதம் மிதனல்லது வேறினி யாவ தென்றான். 1830

௧௩௬ செல்லுஞ்சொல் வல்லானெதிர் தம்பியுந் தேவர் சொல்லுஞ்
சொல்லுஞ் சுமந்தே னிருதோளெனச் சோம்பி யோக்குங்
கல்லுஞ் சுமந்தேன் கணைப்புட்டிலுங் கட்ட மைந்த
வில்லுஞ் சுமக்கப் பிறந்தேன் வெகுண்டென்னையென்னை

(பிரதி) 1 காண்கொ ளென்றான். 2 நெறியோர் களனைத்து மீன்ற.
3 யுரென் றிவர்மேற் சலிக்கின்ற தென்றான்.

கஙஎ நன்சொற் கடந்தாண் டெனை நாளும்வளர்த்தமேலோன்
தன்சொற் கடந்தெற் கரசாள்வது தக்க தன்றால்
என்சொற் கடந்தா லுனக்கியாதுள தூற்ற மென்றான்
தென்சொற்கடந்தான்வடசொற்கடற்கெல்லைகண்டான்

கஙஅ ஆன்றான் பகர்வான் பகரையவோ ரைய மெங்குந்
தோன்று நெறிவாழ் துணைத்தம்பியைப் போர்தொலைத்தோ
சான்றோர் புகழுந் தனித்தாதையை வாகைகொண்டோ
ஈன்றாளை வென்றோ வினியிக்கதந் தீர்வ தென்றான்.

கஙகூ சீற்றந் துறந்தா னெதிர்நின்று தெரிந்து செப்பும்
மாற்றந் துறந்தான் மறைநான்கென வாங்கல்செல்லா
நாற்றெண் டிரைவேலையி னம்பித னாணை யாலே
ஏற்றந் தொடங்கார்க் கடலேற்றணி வெய்தி நின்றான்.

கசம அன்னான் றனை யையனு மாதியொ டங்க மென்னுந்
தன்னாலு மளப்பருந் தானுந்தன் பாக நின்ற
பொன்மா னுரியானுந் தழீஇயெனப் புல்லிப் பின்னைச்
சொன்மாண் புடையன்னைசுமித்திரை கோயில்புக்கான்.

கசக கண்டாண் மகனும் மகனுந்தன் கண்கள் போல்வார்
தண்டா வனஞ்செல் வதற்கே சமைந்தார்க டம்மைப்
உண்டாய துன்பக் கடற்கெல்லை யுணர்ந்தி லாதாள்.
புண்டாங்கு நெஞ்சத்தி னளாய்ப் புரண்டான் பொடிமேல் விழுந்து

கசஉ சேர்வாளை யோடித்தொழுதேத்தினன் றுன்பமென்னும்
ஈர்வாளை வாங்கி மனந்தேற்றுதற் கேற்ற செய்வான்
போர்வா ளரசர்க்கிறை பொய்த்தன னாக்க கில்லேன்
கார்வா னெடுங்கா னிறைகண்டுபின் மீள்வ னென்றான்.

கசங கான்புக் கிடினுங் கடல்புக் கிடினுங் கலிப்பேர்
வான்புக் கிடினு மெனக்கன்னவை மாண யோத்தி
யான்புக்க தொக்கும் மெனையார் நலிகிற்கு மீட்டார்
ஊன்புக் குயிர்புக் குணர்வுக் குலையற்க வென்றான். 1838

கசச தாயாற்று கிலாடனை யாற்றுகின் றார்க டம்பாற்
றீயாற்று கின்றாரெனச் சிந்தையி னின்று தேற்ற
நோயாற்று இல்லா வுயிர்போல நுடங்கி னடையார்
மாயாப் பழியாடர வற்கலை யேந்தி வந்தார். 1839

௧௪௫ கார்வான மொப்பான் றனைக் காண்டொறுங் காண்டொறும்போய்
நீராயுகக் கண்ணினு நெஞ்சழி கின்ற நீரார்
பேரா விடர்ப்பட் டயலாருறு பீழை கண்டுந்
தீரா மனத்தாட ரவந்தது சீரை யென்றார். 1840

௧௪௬ வாணித்தில நன்னகை யார்களை வள்ள றம்பி
யாணர்த் திருநா டிழந்தீய்ந்தவ னீய்ந்த வெல்லாம்
பூணப் பிறந்தானு நின்றானது போர்வி லோடுங்
காணப் பிறந்தேனு நின்றேனவை காட்டு மென்றான்.

௧௪௭ அன்னா ளவையினம் மடவாரவை யங்கை நல்க
இன்னா விடர்தீர்த் தெனையே கெனவெம் பிராட்டி
சொன்னா [1]லதுவே துணையாமெனத் தூய நங்கை
பொன்னா ரடிமேற் பணிந்தா னவளும் புகல்வாள். 1842

௧௪௮ ஆகாத தன்றா லுனக் கவ்வன மிவ்வ யோத்தி
மாகாதன் மன்னனிவன் வையக மீது வானிற்
போகாவிரு தாயரும் பூங்குழற் சீதை யென்றே
ஏகாயினி யிவ்வயி னிற்றலு மேத மென்றாள். 1843

௧௪௯ பின்னும் பகர்வாண் மகனேயிவன் பின்செல் தம்பி
யென்னும் படியன்றி யடியாரி னேவல் செய்தி
மன்ன னகர்க் கிண்டிவன் வந்திடின்வா வதன்றேல்
முன்ன முடியென்றனள் பால்முலை சோர நின்றாள்.

௧௫௦ *இருவருந் தொழுதன ரிரண்டு கன்றுரீஇ
வெருவருந் தாயெனத் தாயும் விம்மினாள்
பொருவருங் குமரரும் போயி னார்புனை
திருவரைத் துகிலொரீஇச் சீரை சாத்தியே. 1845

௧௫௧ தான்புனை சீரையைத் தானுஞ் சாத்துமத்
தேன்புரை தெரியலான் செய்கை நோக்கினான்
வான்புரை யிசையினாய் மறுக்க லாதுநீ
யான்புக றகையதோ ருறுதி கேளென்றா.

[Verse number 1846, printed in the right margin beside the line above, stands on its own line here:]

1846

௧௫௨ அன்னைய ரனைவரு மாழி வேந்தனும்
முன்னைய ரல்லர்வெந் துயரின் மூழ்கினார்
என்னையும் பிரிந்தன ரிடரு றுவகை
உன்னைநீ யென்பொருட் டுதவு வாயென்றான். 1847

(பிரதி) 1 ஏதுவே.

கருங ஆண்டகை யம்மொழி பகர வையனுந்
தூண்டரு திரள்புயந் துளங்கத் துண்ணெனா
மீண்டதோ ருயிரிடை விம்ம விம்முவான்
ஈண்டுனக் கடியனேன் பிழைத்த [1]தியாதெனா 1848

கருச நீருள வெனிலுள மீனு நீலமும்
பாருள வெனிலுள பாரம் போற்புறு
நாருள தனுவுளாய் நானுஞ் சீதையும்
ஆருள ரெனிலுள மருளு நீயெனா. 1849

கருரு பைந்தொடி யொருத்திசொற் கொண்டு பார்மகள்
நைந்துயிர் நடுங்கவு [2]நடத்தி கானெனா
உய்ந்தன னிருந்தன னுண்மை காவலன்
மைந்தனென் றினையசொல் வழங்கி னாயெனா. 1850

கருசு மாறினி யென்னைநீ வனங்கொள் வாயென
ஏறின வெகுளியை யாது முற்றுற
ஆறினை தவிர்கென வைய வாணையிற்
கூறிய மொழியினுங் கொடிய தாமெனா. 1851

கருஎ செய்துடைச் செல்வமோ யாதுந் தீர்ந்தெனைக்
கைதுடைத் தேகவுங் கடவையோ வையா
[3]நெய்துடைத் தடையலார் நேய மாதர்கண்
மைதுடைத் துறைபுகும் மறங்கொள் வேலினாய். 1852

கருஅ உரைத்தபி னிராமனொன் றுரைக்க நேர்கலன்
வரைத்தடந் தோளினான் வதன நோக்கினான்
விரைத்தடந் தாமரைக் கண்ணின் மிக்கநீர்
நிரைத்திடை யிடைவிழ நெடிது நிற்கின்றான். 1853

கருகூ அவ்வயி னரசவை நின்று மன்பினன்
எவ்வமி லருந்தவ முனிவ னெய்தினான்
செவ்விய குமரருஞ் செங்கை கூப்பினார்
கவ்வையின் பெருங்கடல் முனியுங் கால்வைத்தான்.

கசு௦ அன்னவர் முகத்தினோ டகத்தை நோக்குவான்
பொன்னரைச் சீரையின் பொலிவு நோக்கினான்
என்னினி யுணர்த்துவ தெடுத்த துன்பத்தாற்
றன்னையு முணர்ந்தில னுணருந் தன்மையான். 1855

(பிரதி) 1 யாதெனா. 2 நடக்கின் றனெனா.
3 நெய்துடை யடையலார்.

கசுக வாழ்வினை நுதலிய மங்கலத்து நாட்
டாழ்வினை யதுவரச் சிறை சாத்தினுன்
சூழ்வினை நான்முகத் தொருவன் ஞேன்றினும்
ஊழ்வினை யொருவரா லொழிக்கற் பாலதோ. 1856

கசுஉ வெவ்வினை யவடர விளைந்த தேயுமன்
றிவ்வினை யிவன்வயி னெய்தற் பாற்றுமன்
றெவ்வினை நிகழ்ந்ததோ [1]வேவ ரெண்ணமோ
செவ்விதென் றெருமுறை தெரியும் பின்னெனு. 1857

கசுந விற்றடந் தாமரைச் செங்கை வீரனை
உற்றடைந் தையநீ யொருவி னுய்கன்
கற்றடங் கானுதி யென்னிற் கண்ணகன்
மற்றடந் தானையான் வாழ்கிலா னென்றுன். 1858

கசுச அன்னவன் பணிதலை யேந்தி யாற்றுதல்
என்னது கடனவ னிடரை நீக்குதல்
நின்னது கடனிது நெறியு மென்றனன்
பன்னகப் பாயலிற் பள்ளி நீங்கினுன். 1859

கசுரு வெவ்வரம் பணையசம் பரனை வென்றநாட்
டெவ்வரம் பணையசொற் றீட்டினு டனக்
கவ்வரம் பொருதவே லரச னுய்கிலா
திவ்வரந் தருவெனென் றேன்ற துண்டென்றுன். 1860

கசுசு ஏன்றவ னெந்தையிவ் வரத்தி னேவினுள்
ஈன்றவள் யானது சென்னி யேந்தினேன்
சான்றென நின்றநீ தடுத்தி யோவென்றுன்
தோன்றிய நல்லற நிறுத்தத் தோன்றினுன். 1861

கசுஎ என்றனன் முனிவனென் றியம்ப நேர்ந்திலன்
நின்றன னெடுங்கணீர் நிலத்து [2]நீர்த்துகக்
குன்றன தோளவற் றெழுது கொற்றவன்
பொன்றிணி நெடுமதின் வாயில் போயினுன். 1862

கசுஅ சுற்றிய சிறையன் றெருடருந் தம்பியன்
முற்றிய வுவகையின் முளரிப் போதினுங்
குற்றமில் முகத்தினன் கொள்கை கண்டவர்
உற்றதை யொருவனை யுணர்த்து வாமரோ. 1863

(பிரதி) 1 தெய்வ. 2 நீத்துகக்.

கசுசு அய்யனைக் காண்டலு மணங்க ஞரெலாம்
மொய்யிளந் தளிர்களால் முளரி மேல்விழும்
மையலின் மதுகரங் கடியு மாறெனக்
கைகளின் மதர்நெடுங் கண்ணி னெற்றினூர். 1864

களo தம்மையு முணர்ந்திலர் தணப்பி லன்பினால்
அம்மையி னிருவினை யகற்ற வோவன்றே
விம்மிய பேருயிர் மீண்டி லாமைகொல்
செம்மறன் ருதையிற் சிலவர் முந்தினூர். 1865

களக விழுந்தனர் சிலர்சிலர் விம்மி விம்மிமேல்
எழுந்தனர் சிலர்சில ரிழிக ணீரிடை
அழுந்தினர் சிலர்பதைத் தளக வல்லியங்
கொழுந்தன லுற்றெனத் துயரங் கூர்கின்றூர். 1866

களஉ கரும்பன மொழியவர் கண் பனிக்கிலர்
வரம்பறு துயரினூன் மயங்கி யேகொலாம்
இரும்பன மனத்தவ ரென்ன நின்றனர்
பெரும்பொரு ளிழந்தவர் போலும் பெற்றியார். 1867

களங நெக்கென வுயிருட னிலையி னின்றில
இக்கண மிக்கண மென்னுந் தன்மைய
புக்கன புறத்தன புண்ணிற் கண்மலர்
உக்கன நீர்வறந் துதிர வாரியே. 1868

களச இருகையிற் கரிகை ரெண்ணி றந்தவர்
பெருகையிற் பெயர்த்து[illegible]ந் தலையைப் பேணலர்
ஒருகையிற் கொண்ட[illegible] ருருட்டு கின்றனர்
சுரிகையிற் கண்மலர் குழ்ந்து நீக்கினூர். 1869

களரு சிந்தின வணியணி சிதறி வீழ்ந்தன
பைந்துணர் மாலையிற் [illegible]ரிந்த மேகலை
நந்தின நகையொளி வ[illegible]ாக்க நங்கைமார்
சுந்தர வதனமு மதிக்கு[illegible] தோற்றவே. 1870

களசு அறுபதி னுயிர ரரசன் றேவியர்
மறுவறு கற்பினர் மழைக்கண் ணீரினர்
சிறுவனைத் தொடர்ந்தனர் திறந்த வாயினர்
எறிதிரைக் கடலென விரங்கி யேங்குவார் 1871

களஎ கன்னிநன் மயில்களுங் குயிற்க ணங்களும்
அன்னமுஞ் சிறையிழந் தவ்னி சேர்ந்தன
என்னவீழ்ந் துழன்றன ரிராம னல்லது
மன்னுயிர்ப் புதல்வரை மற்றும் பெற்றிலார். 1872

களஅ கிளையினு நரம்பினு நிரம்புங் கேளென
அளவிறந் துயரவிட் டரற்றுந் தன்மையாற்
றுளைபடு குழலினோ டியாழ்க்குந் தோற்றன
இளையவ ரமுதினு மினிய சொற்களே. 1873

களகூ புகலிடங் கொடுவனம் போது மென்றுதம்
மகன்வயி னிரங்குறு மகளிர் வாய்களால்
அகன்மதி னெடுமனை யரத்த வாம்பல்கள்
பகலிடை மலர்ந்ததோர் பழனம் போன்றவே. 1874

கஅ0 திடருடைக் குங்குமச் சேறுஞ் சாந்தமும்
இடையிடை வண்டலிட் டார் மீர்த்தன
மிடைமுலைக் குவட்டொரீஇ மேகலைத்தடங்
கடலிடைப் பரந்ததக் கலுழி யாறரோ. 1875

கஅக தண்டலைக் கோசலைத் தலைவன் மாதரைக்
கண்டன னிரவியங் கமல வாண்முகம்
விண்டலத் துறையுள வேந்தற் காயினும்
உண்டிட ருற்றபோ தென்னு ருதன. 1876

கஅஉ தாயருங் கிளைஞருஞ் சார்ந்து ளோர்களுஞ்
சேயரு மணியருஞ் சிறந்த மாதருங்
காயெரி யுற்றன ரனைய கவ்வையர்
வாயிலு முன்றிலு மறைய மொய்த்தனர். 1877

கஅங இரைத்தன ரிரைத்தெழுந் தேங்கி யெங்கணுந்
திரைப்பெருங் கடலெனத் தொடர்ந்து பின்செல
உரைப்பதை யுணர்ந்தில னுழிப்ப தோர்கிலன்
வரைப்புயத் தண்ணறன் மனையை நோக்கி னன். 1878

கஅச நன்னெடு நளிர்முடி சூட நன்மணிப்
பன்னெடுந் தேரொடும் பவனி போனவன்
துன்னெடுஞ் சிறைகள் சுற்றி மீண்டுமப்
பொன்னெடுந் தெருவிடைப் போத நோக்கினர். 1879

கஅரு அந்தண ரருமறை முனிவர் காவலர்
நந்தலி னகருளோர் நாட்டு ளோர்கடஞ்
சிந்தையென் புகல்வது தேவ ருள்ளமும்
வெந்தனர் மேல்வரு முறுதி வேண்டலார். 1880

கஅசு அஞ்சன மேனியவ் வழகற் கெய்திய
வஞ்சனை கண்டபின் வகிர்ந்து நீங்கலா
நெஞ்சினும் [1]வலிதுயிர் நினைப்ப தென்சில
நஞ்சினும் வலியநம் நலமென் றார்சிலர். 1881

கஅஎ மண்கொடு வருமென வழியிருந் தயாம்
எண்கொடு தொடர்வனத் தேகல் காணவே
பெண்கொடு வினைசெயப் பெற்ற நாட்டினிற்
கண்கொடு பிறத்தலுங் கடையென் றார்சிலர். 1882

கஅஅ வலங்கடிந் தேழைய ராய மன்னரை
நலங்கடிந் தறங்கெட நயத்தி யோவெனுக்
குலங்கடிந் தான்வலி கொண்ட கொண்டலை
நிலங்கடிந் தாளொடு நிகரென் றார்சிலர். 1883

கஅகூ முழுவதே பிறந்துல குடைய மொய்ம்பினோன்
உழுவைசேர் கானகத் துறைவன் யானெனா
எழுவதே யெழுதல்கண் டிருப்ப தேயிருந்
தழுவதே யழுகிதெம் மன்பென் றார்சிலர். 1884

கசுo திருவரை சுற்றிய சீரை யாடையன்
பெருவருந் துயரினன் றொடர்ந்து போகின்றான்
இருவரைப் பயந்தவ ளீன்ற கான்முளை
ஒருவனோ விவற்கிவ்வூ ருறவென் றார்சிலர். 1885

கசுக முழுக்கலின் வலியன மூரி நெஞ்சினை
மழுக்களிற் பிளத்துமென் றோடு வார்வழித்
தொழுக்கிய கலுழியாற் றிடை விழுந்துயர்
இழுக்கலி லிழுக்கவீழ்ந் திடருற் றார்சிலர். 1886

கசுஉ பொன்னணி மணியணி மெய்யிற் போக்கினர்
மின்னென மின்னென விலக்கி மெய்யிலைப்
பன்னிறத் துகிலெனப் பறித்து நீக்கினர்
சின்னநுண் டுகிலரை புனைகின் றார்சிலர். 1887

(பிரதி) 1 வலியரு

௧௯௩ நிறைமக வுடையவர் நெறிசெ லைம்பொறி
குறைமகன் குறையினுங் கொடுப்ப ராமுயிர்
முறைமகன் வனம்புக மொழியைக் காக்கின்ற
இறைமகன் றிருமன மிரும்பென் றூர்சிலர். 1888

௧௯௪ †மானமே யனையதோர் கருணை மாண்பலால்
ஊனமே வேறிலா னுலகம் யாவையுங்
கானமே புகுமினிக் காதன் மைந்தனுந்
தானுமே யாளுங்கொ றறையென் றூர்சிலர். 1889

௧௯௫ வாங்கிய மருங்குலார் வைத்த கொங்கையார்
பூங்கொடி யொதுங்குவ போலொ துங்கினார்
ஏங்கிய குரலின ரிணைந்த காந்தளிற்
றூங்கிய செங்கைதன் தலையின் மேலுளார் 1890

௧௯௬ தலைக்குவட் டயல்மதி தவழு மாளிகை
நிலைக்குவட் டிடையிடை நின்ற நங்கைமார்
முலைக்குவட் டிழிகணீ ராலி மொய்த்துக
மலைக்குவட் டகவுறு மயிலின் மாழ்கினார். 1891

௧௯௭ மஞ்சன வகிற்புகை வழங்கு மாளிகை
எஞ்சவில் சாளரத் திரங்கு மின்சொலார்
அஞ்சனக் கண்கணீ ரருவி சோர்தரப்
பஞ்சரத் திருந்தழுங் கிளியிற் பன்னினார். 1892

௧௯௮ நன்னெடுங் கண்களி னூன்ற நீர்த்துளி
தன்னெடுந் தாரைக டலத்தின் வீழ்தலால்
அன்னெடுங் குமரர்மாட் டழுங்கி மாடமும்
பொன்னெடுங் கண்குழிந் தழுவ போன்றவே. 1893

௧௯௯ மக்களை மறந்தனர் மாதர் தாயரைப்
புக்கிட முணர்ந்திலர் புதல்வர் பூசலிட்
டுக்கன ருயங்கின ருருகிச் சோர்ந்தனர்
துக்கமின் றறிவினைச் சூறை யாடவே. 1894

௨௦௦ காமரங் கனிந்தெனக் கனிந்த [1]மென்மொழி
மாமடந் தையரெலா மறுகு சேர்தலாற்
றேமரு நறுங்குழற் றிருவி னீங்கிய
தாமரை யொத்ததத் தவள மாடமே. 1895

(பிரதி) 1 தம்மொழி.

உ௦க மழைக்குலம் புரைகுழல் விரிந்து மண்ணுறக்
குழைக்குல முகத்தியர் குழாங்க ளேங்கின
இழைக்குலஞ் சிதறிட வேவுண் டோய்வுறும்
உழைக்குல முழைப்பன வொத்த பாரெலாம். 1896

உ௦உ கொடியடங் கினமணிக் குன்றங் கோமுர
சிடியடங் கினமுழக் கிழந்த பல்லியம்
படியடங் கலுமிமிர் பசுங்கண் மாரியாற்
பொடியடங் கினமதிட் புறத்து வீதியே. 1897

உ௦ங அட்டிலு மிழந்தன புகைய கிற்புகை
நெட்டிலு மிழந்தன நிறைந்த பால்கிளி
வட்டிலு மிழந்தன மகளிர் சால்மணித்
தொட்டிலு மிழந்தன மகவுஞ் சோர்ந்தவே. 1898

உ௦ச ஒளிதுறந் தனமுக முயிர்து றந்தெனத்
துளிதுறந் தனமுகிற் றெருகையுந் தூயவாம்
தளிதுறந் தன்பலி தானம் யானையுங்
களிதுறந் தனமலர்க் கள்ளுண் வண்டினே. 1899

உ௦ரு நிழல்பிரிந் தனகுடை நெடுங்க ணேழையர்
குழல்பிரிந் தனமலர் குமரர் தாளிணை
கழல்பிரிந் தனசினக் காமன் வாளியும்
அழல்பிரிந் தனதுணை பிரிந்த வன்னமே. 1900

உ௦சு தாரொலி நீத்தன புரவி தண்ணுமை
வாரொலி நீத்தன மழையின் விம்முறுந்
தேரொலி நீத்தன தெருவுந் தெண்டிரை
நீரொலி நீத்தமு நீத்த போலவே. 1901

உ௦எ முழவெழு மொலியில முறையின் யாழ்நரம்
பெழவெழு மொலியில விமைப்பில் கண்ணினர்
விழவெழு மொலியில வேறு மொன்றில
அழவெழு மொலியெழு மரச வீதியே. 1902

உ௦அ தெள்ளொலிச் சிலம்புகள் சிலம்பு பொன்மணி
நள்ளொலித் திலநளிர் கலையு மன்னவே
புள்ளொலித் திலபுனற் பொழிலு மன்னவே
கள்ளொலித் திலமலர் களிறு மன்னவே. 1903

உ0கூ செய்மறந் தனபுனல் சிவந்த வாய்ச்சியர்
கைமறந் தனவருங் குழவி காங்கெரி
நெய்மறந் தனநெறி யறிஞர் யாவரும்
மெய்மறந் தனரொலி மறந்த வேதமே. 1904

உகம ஆடின ரழுதன ரமுத வேழிசை
பாடின ரழுதனர் பரிந்த கோதையர்
ஊடின ரழுதன ருயிரி னன்பரைக்
கூடின ரழுதனர் குழாங்கு ழாங்கொடே. 1905

உகக நீட்டில களிறுகை நீரி னீரின்வாய்
பூட்டில புரவிகள் புள்ளும் பார்ப்பினுக்
கீட்டில விரைபுனிற் றீன்ற கன்றையும்
ஊட்டில கறவைநைந் துருகிச் சோர்ந்தவே. 1906

உகஉ மாந்தர்த மொய்ம்பினின் மகளிர் கொங்கையாம்
ஏந்திள நீர்களும் வெறுமை யெய்தின
சாந்தயர் சடையவாந் தார்பெய் குஞ்சியின்
கூந்தலின் வறுமைய மலரின் கூலமே. 1907

உகங *ஓடை நல்லணி முனிந்தன வுயர்களி றுச்சி
சூடை நல்லணி முனிந்தன தொடர்மணி கொடியின்
ஆடை நல்லணி முனிந்தன வம்பொன்செ [1]யிஞ்சி
பேடை நல்லணி முனிந்தன [2]மென்னடைப் புறவம்.

உகச இக்கு நோக்கிய தீவினைப் பயமிது சிந்தை
நெக்கு நோக்கிய நல்வினைப் பயமென நேராப்
பக்க நோக்கலாப் பருவர லின்பமென் றிரண்டும்
ஒக்க நோக்கிய யோகரு மருந்துய ருழந்தார். 1909

உகரு ஓவ னல்லுணர் வுயிர்ப்பினோ டுடல்பதைத் துலைய
மேவு தொல்லழ கெழில்கெட விம்மனோய் விம்மத்
தாவி லைம்பொறி மறுகுறத் தசரத னென்ன
ஆவி நீக்கின்ற தொத்ததவ் வயோத்திமா நகரம். 1910

உகசு உயங்கி யங்கக ருலைவுற வொருங்குழைச் சுற்ற
மயங்கி யேங்கினர் வயின்வயின் வரம்பிலர் தொடர
இயங்கு பல்லுயிர்க் கோருயி ரெனநின்ற விராமன்
தயங்கு பூண்முலைச் சானகி யிருந்துழிச் சார்ந்தான்.

(பிரதி) 1 யுன்னம், 2 வெள்ளிடைப் பிறக்கம்,

உகஎ அழுது தாயரொ டந்தணர் முனிவரோ டரசர்
புழுதி யாடிய மெய்யினர் புடைவந்து பொருமப்
பழுதில் சீரையி னுடையினன் வரும்படி பார்த்தாள்
எழுதுபாவையன் னாண்மனத் துணுக்கமொடெழுந்தாள்.

உகஅ எழுந்த மங்கையை மாமியர் தழுவின ரேந்திப்
பொழிந்த வுண்கணீர்ப் புதுப்புன லாட்டினர் புலம்பி
அழிந்த சிந்தையன் னாண்மதி யின்னதென் றறியாள்
வழிந்த நீர்நெடுங் கண்ணினாள் வள்ளலை நோக்கி. 1913

உக௯ *பொன்னை யுற்றபொ லங்கழ லோய்புகழ்
மன்னை யுற்றதுன் டோவினை வன்றுயர்
என்னை யுற்றதி யம்பென் றியம்பினாண்
மின்னை யுற்றந டுக்கத்து மேனியாள். 1914

உஉ0 பொருவி லெம்பி புவிபுரப் பான்புகழ்
இருவ ராணையு மேந்தின னின்றுபோய்க்
கருவி மாமழைக் கற்கடங் கண்டுநான்
வருவ னீண்டு வருந்தலை நீயென்றான். 1915

உஉக நாய கன்வன நண்ணலுற் றானென்றும்
மேய மண்ணிழந் தானென்றும் விம்மலள்
நீவ ருந்தலை நீங்குவன் யானென்ற
தீய வெஞ்சொல் செவிசுட விம்முவாள். 1916

உஉஉ துறந்து போமென்று சொற்றசொற் றேறுமே
உறைந்த பாற்கடற் சேக்கை யுடனொரீஇ
அறந்தி றம்புமென் றய்யன யோத்தியிற்
பிறந்த பின்பும் பிரியல ளாயினாள். 1917

உஉ௩ அன்ன தன்மைய ளன்னையுந் தாதையுஞ்
சொன்ன செய்யத் துணிந்தது தூயதே
என்னை யென்னை யிருத்தியென் றாயென்றாள்
உன்ன வுன்ன வுயிருமி ழாநின்றாள். 1918

உஉ௪ வல்ல ரக்கரின் மால்வரை போய்விழுந்
தல்ல ரக்கி னுருக்கழற் காட்டதர்க்
கல்ல ரக்குங் கடுமைய வல்லநின்
சில்ல ரக்குண்ட சேவடிப் போதென்றான். 1919

௨௨௫ பரிவி கந்தம னத்தொரு பற்றிலா
தொருவு கின்றனை யூழி யருக்கனும்
எரியு [1]மென்பதி யாண்டைய தீண்டுநின்
பிரிவி னுஞ்சுடு மோபெருங் கானென்றாள். 1920

௨௨௬ அண்ண லன்னசொற் கேட்டன னன்றியும்
உண்ணி வந்த கருத்து முணர்ந்தனன்
கண்ணி னீர்க்கடற் கைவிட [2]நேர்கிலன்
எண்ணு கின்றன னென்செயற் பாற்றென்றான். 1921

௨௨௭ அனைய வேலை யகன்மனை யெய்தியப்
புனையுஞ் சீரை துணிந்து புனைந்தனள்
நினைவின் வள்ளல்பின் வந்தய னின்றனள்
பனையி னீள்கரம் பற்றிய கையினாள். 1922

௨௨௮ ஏழை தன்செயல் கண்டபின் யாவரும்
வீழ மண்ணிடை வீழ்ந்தனர் வீய்ந்திலர்
வாழ நாளுள வென்றபின் மாள்வரோ
ஊழி பேரினு முய்குவ ருய்குவார். 1923

௨௨௯ தாயர் தவ்வையர் தன்றுணைச் சேடியர்
ஆய [3]மன்னிய வன்பின ரென்றிவர்
தீயின் மூழ்கின ரொத்தனர் சேவகன்
றூய தையலை நோக்கினன் சொல்லுவான். 1924

௨௩௦ முல்லை யுங்கடன் முத்துமெ திர்ப்பினும்
வெல்லும் வெண்ணகை யாய்விளை வெண்ணுவாய்
அல்லை போத வமைந்தனை யாதலின்
எல்லை தீர்ந்த விடர்தரு வாயென்றான். 1825

௨௩௧ கொற்ற வன்னது கூறலுங் கோகிலஞ்
செற்ற தன்ன குதலையள் சீறுவாள்
உற்று நின்ற துயரமி தொன்றுமே
எற்று றந்தபி னின்பங்கொ லாமென்றாள். 1926

௨௩௨ பிறிதொர் மாற்றம் பெருந்தகை பேசலன்
மறுகி வீழ்ந்தழு மைந்தரு மாதருஞ்
செறுவின் வீழ்ந்த நெடுந்தெருச் சென்றனன்
நெறிபெ ருமை யரிதென நீங்குவான். 1927

(பிரதி) 1 என்பன யாண்டைய வீண்டுநின். 2 நோக்கினன்.
3 மன்னவ ரன்பின.

உருரு சீரை சுற்றித் திருமகள் பின்செல
மூரி விற்கை யிளையவன் முன்செல
காரை யொத்தவன் போம்படி கண்டவவ்
வூரை யுற்றது ணர்த்தவு மொண்ணுமோ. 1928

உருச ஆரும் பின்ன ரழுதவ வித்திலர்
சோருஞ் சிந்தையர் யாவருஞ் சூழ்ந்தனர்
வீரன் முன்வன மேவுது யாமெனப்
போரொன் றெல்லொலி கைம்மிகப் போயினர். 1929

உருரு தாதை வாசல் குறுகினன் சார்தலுங்
கோதை வேலவன் றாயரைக் கும்பிடா
ஆதி மன்னனை யாற்றுமி னீரென்றான்
மாத ராரும் விழுந்து மயங்கினார். 1930

உருசு வாழ்த்தி னார்தம் மகனை மருகியை
ஏத்தி னாரிளை யோனை வழுத்தினர்
காத்து நல்குமின் றெய்வதங் காளென்றார்
நாத்த ழும்ப வரற்றி நடுங்குவார். 1931

உருஎ அன்ன தாய ரரிதிற் பிரிந்தபின்
முன்னர் நின்ற முனிவனைக் கைதொழா
தன்ன தாருயிர்த் தம்பியுந் தாமரைப்
பொன்னுந் தானுமோர் தேர்மிசைப் போயினன். 1932

ச. நகர் நீங்குபடலம் முற்றும்.

ரு. தைல மாட்டு படலம்

க ஏவிய குரிசில்பின் யாரு மேகினார்
மாவிய றனைய மன்ன னீங்கலாத்
தேவியர் தவிர்ந்தனர் தெய்வ மாநகர்
ஓவிய [1]மொழிந்தன வுயிரி லாமையால். 1933

உ கைகனீர் பரந்துகா ரொடரக் கண்ணுகும்
வெய்யநீர் வெள்ளத்து மெள்ளச் சேறலால்
உய்யவே முலகுமொன் றான நீருழல்
தெய்வமீ னொத்ததச் செம்பொற் றேரரோ. 1934

(பிரதி) 1 மொத்தன.

௩ மீன்புகழ் பெறவெயி லொதுங்க மேதியோ
டான்புகக் கதிரவ னத்தம் புக்கனன்
கான்புகக் காண்கிலே னென்று கல்லதர்
தான்புக முடுகின னென்னுந் தன்மையான். 1935

௪ பகுத்தவான் மதிகொடு பதுமத் தண்ணலே
வகுத்தவா ணுதலியர் வதன ராசிபோல்
உகுத்தகண் ணீரென வொளிவு நீங்கின
முகிழ்த்தழ கிழந்தன முளரி யீட்டமே. 1936

௫ அந்தியின் வெயிலொளி யழிய வான்கம்
நந்தலில் கைகயன் பயந்த நங்கைதன்
மந்தரை யுரையெனுங் கடுவின் வட்கிய
சிந்தையி னிருண்டது செம்மை நீங்கியே. 1937

௬ பரந்துமீ னரும்பிய பசலை வானகம்
அரந்தையின் முனிவர னறைந்த சாபத்தால்
நிரந்தர மிமைப்பிலா நெடுங்க ணீண்டிய
புரந்தர னுருவெனப் பொலிந்த தெங்குமே. 1938

௭ திருநகர்க் கோசனை யிரண்டு சென்றொரு
விரைசெறி சோலையை [1]விரைவி னெய்தினார்
இரதமின் றிழிந்துபி னிராம னின்றுணை
உரைசெறி முனிவரோ டுறையுங் காலையே. 1939

௮ வட்டமே யோசனை வளைவிற் றாய்நடு
எட்டனை யிடவுமோ ரிடமி லாவகை
புட்டகு சோலையின் புறத்துப் போர்த்தன
விட்டது குரிசிலை விடாத சேனையே. 1940

௯ குயின்றன குலமணி நதியின் கூலத்திற்
பயின்றுயர் வாலுகப் பரப்பிற் பைம்புலின்
வயின்றொறும் வயின்றொறும் வைகி னாரொன்றும்
அயின்றிலர் துயின்றில ரழுது விம்மினார். 1941

௧0 *வாவிவிரி தாமரையின் மாமலரின் வாசக்
காவிவிரி நாண்மலர் முகிழ்த்தனைய கண்ணார்
ஆவிவிரி பானுரையி னுடையணை யாக
நாவிவிரி கூழையிள நவ்வியர் துயின்றார். 1942

(பிரதி) 1 விரவி னெய்தினார்.

கக பெரும்பகல் வருந்தினர் பிறங்குமுலை தெங்கின்
குரும்பைகள் பொருஞ்செவிலி மங்கையர் குறங்கில்
அரும்பனைய கொங்கையயி லம்பனைய வுண்கட்
கரும்பனைய செஞ்சொனவில் கன்னியர் துயின்றார்.

கஉ பூவக நிறைந்தபுளி னத்திடர்க டோறும்
மாவகிரி லுண்கணின் மடப்பிடியின் வைகுஞ்
சேவக மணைந்தசிறு கட்கரிக ளென்னத்
தூவக விலங்குமயின் மன்னர்கடு யின்றார். 1944

கங தகவுமிகு தவமுமிவை தழுவவுயிர் கொழுநர்
முகமுமவ ரருளுநுகர் கிலர்துயர முறுவார்
அகவுமிள மயில்களுயி ரலசியன வனையார்
மகவுமுலை வருடவிள மகளிர்கடு யின்றார். 1945

கச மாகமணி வேதிகையின் மாதவிசெய் பந்தர்
கேகய நெடுங்குல மெனச்சிலர் கிடந்தார்
பூவகன மூடுபடு கர்ப்புளின முன்றிற்
றோகையிள வன்னநிரை யிற்சிலர் துயின்றார். 1946

கரு சம்பக நறும்பொழி லியற்றருண வஞ்சிக்
கொம்பழ கொசிந்தன வெனச்சிலர் குழைந்தார்
வம்பளவு கொங்கையொடும் வாலுகம் வளர்க்கும்
அம்பவள வல்லிக ளெனச்சில ரயர்ந்தார். 1947

கசு குங்கும மலைக்குளிர் பனிக்குமிழி யென்னத்
துங்கமுலை யிற்றுக ளுறச்சிலர் துயின்றார்
அங்கையணை யிற்பொலி வழுங்கமுக மெல்லாம்
பங்கய முகிழ்ப்பன வெனச்சிலர் படிந்தார். 1948

கஎ தொடுத்த புருவச்சிலை துவண்டனர் துயின்றார்
அடுத்தகலி டைச்சில ரழிந்தன ரயர்ந்தார்
உடுத்ததுகில் சுற்றொரு தலைச்சில ருறைந்தார்
படுத்ததளி ரிற்சிலர் பதைத்தனர் திகைத்தார். 1949

கஅ ஏனையரு மின்னண முறங்கின ருறங்கா
மானவனு மந்திரி சுமந்திரனை வாவென்
றூனமில் பெருங்குண மொருங்குடைய வன்றான்
மேனிகழ்வ துண்டவுரை கேளென விளம்பும். 1950

௧௯ *பூண்டபே ரன்பி னுரைப் போக்குவ தரிது போக்கா
நீண்டுபின் றேகல் பொல்லா தெந்தைநீ யிரத மின்னே
தூண்டினை மீள நோக்கிச் சுவடுதேர்ந் தென்னை யங்கே
மீண்டன னென்ன மீள்வா ரிதுநின்னை வேண்டிற் றென்றான்.

௨௦ செவ்விய குரிசில் கூறத் தேர்வல்லா னுணர்த்து வான்வ்
வெவ்விய தாயிற் றீய விதியினின் மேலன் போலாம்
இவ்வயி னின்னை நோக்கி யின்னுயிர் நீக்கென் றேகி
அவ்வயி னனைய காண்டற் கமைந்தன னடியனென்றான்

௨௧ *தேவியு மிளவலுந் தொடரச் செல்வனைப்
பூவுயர் கானகம் புகவுய்த் தேனென்கோ
கோவினை யுடன்கொடு குறுகி னேனென்கோ
யாவது கூறுகே னிரும்பி னெஞ்சினேன். 1953

௨௨ தாருடை மலரினு மொதுங்கத் தக்கிலா
வாருடை முலையொடு மதுகை மைந்தரைப்
பாரிடைச் செலுத்தினேன் பழைய நண்பினேன்
தேரிடை வந்தனன் றீதி லேனென்கோ. 1954

௨௩ வன்புலக் கன்மன மதியி னெஞ்சினேன்
என்புலப் புறவுடைந் திரங்கு மன்னன்பால்
உன்புலக் குரியசொ லுணர்த்திச் செல்கெனோ
தென்புலக் கோமகன் றூதிற் செல்கெனோ. 1955

௨௪ நாற்றிசை மாந்தரு நகர மாக்களுந்
தேற்றினர் கொணர்வருன் சிறுவன் றன்னையென்
றாற்றின வரசனை யைய வெய்யவெங்
கூற்றன சொல்லினாற் கொலைசெய் வேன்கொலோ.

௨௫ அங்கிமேல் வேள்விசெய் தரிதி னீபெற்ற
சிங்கவே றகன்றதென் றுணர்த்தச் செல்கெனோ
எங்கள்கோ மகற்கினி யெண்ணிற் கேகயன்
நங்கையே கடைமுறை நல்லள் போலுமால். 1957

௨௬ முடிவுற வின்னண மொழிந்த பின்னரும்
அடியுற வணங்கினின் றழுங்கும் பையரா
இடியுறத் துவளுவ தென்னு மின்னலன்
படியுறப் புரண்டன னின்ன பன்னினான். 1958

உஎ தடக்கையா லெடுத்தவற் றழுவிக் கண்ணினீர்
துடைத்துவே றிருத்திவைத் தினைய சொல்லினன்
அடக்குமைம் பொறியொடுங் கரணத் தப்புறங்
கடக்கும்வா லுணர்வினுக் கணுகுங் காட்சியான். 1959

உஅ பிறத்தலொன் றுற்றபின் பெறுவ யாவையுந்
திறத்துளி யுணர்வதோர் செம்மை யுள்ளத்தாய்
புறத்துறு பெரும்பழி பொதுவன் றெய்தவும்
அறத்தினை மறத்தியோ வவல முண்டெனா. 1960

உகூ முன்புநின் றிசைநிறீஇ முடிவு முற்றிய
பின்புநின் றுறுதியைப் பயக்கும் பேரறம்
இன்பம்வந் துறுமெனி னினிய தாயிடைத்
துன்பம்வந் துறுமெனிற் றுறக்கற் பாலதோ. 1961

ங0 நிறப்பெரும் படைக்கல நிறத்தி னெய்தவும்
மறப்பயன் துறப்பன வளவை யன்றரோ
இறப்பெனுந் திருவெலா மிழப்ப வெய்தினுந்
துறப்பில ரறமெனல் சூர ராதலே. 1962

ஙக கான்புகச் சேறலி லருமை காண்டியால்
வான்பிறங் கியபுகழ் மன்னர் தொல்குலம்
யான்பிறந் தறத்தினின் றிழிக்கிற் றென்பவோ
ஊன்றுறந் துயிர்குடித் தொளிரும் வேலினாய். 1963

ஙஉ வினைக்கரு மெய்ம்மையின் வனத்து விட்டனன்
மனக்கரும் புதல்வனை [1]யென்றல் மன்னவன்
தனக்கருந் தவமிது தலைக்கொண் டேகலே
எனக்கருந் தவமிதற் கிரங்க லெந்தைநீ. 1964

ஙங முந்தினை முனிவனைக் குறுகி முற்றுமென்
வந்தனை முதலிய மாற்றங் கூறினை
எந்தையை யவனொடு மெய்தி யீண்டென்
சிந்தையை யுணர்த்துதி யென்று செப்புவாய். 1965

ஙச முனிவனை யெம்பியை முறையி னின்றரும்
புனிதவே தியர்க்குமே லுறைபுத் தேளிர்க்கும்
இனியன விளைத்தியென் றியம்பி யெற்பிரி
தனிமையுந் தீர்த்தியென் றுணர்த்தி தன்மையோய்.

(பிரதி) 1 யென்ன,

௩௫ வெவ்விய தன்னையால் விளைந்த தீண்டொரு
கவ்வையென் றிறையுந்தன் கருத்தி [1]னேகலா
தெவ்வரு ளென்வயின் வைத்த தென்சொலால்
அவ்வரு ளவ்வயி னருளு கென்றியால். 1967

௩௬ வேண்டின னிவ்வர மென்று மேலவன்
ஈண்டரு ளெம்பிரா னிறுவி யேபினைப்
பூண்டமா தவனெடுங் கோயில் புக்கினி
தாண்டகை வேந்தனை யவல மாற்றிப்பின். 1968

௩௭ ஏழிரண் டாண்டுநீத் தீண்டு வந்துனைத்
தாழ்குவன் றிருவடித் தலத்தி லீண்டெனாச்
சூழிவெங் கடகளிற் றரசர் சொல்லிப்பின
வாழிமா தவன்சொலால் மனந்தெ ருட்டுவாய். 1969

௩௮ முறைமையா லெற்பயந் தெடுத்த மூவர்க்குங்
குறைவிலா நன்னெடு வணக்கங் கூறிப்பின்
இறைமகன் றுயர்துடைத் திருத்தி யாண்டென்றான்.
மறைகளை மறைந்துபோய் வனத்துள் வைகுவான். 1970

௩௯ ஆள்வினை யாணையிற் றிறம்ப லன்றெனாத்
தாள்முதல் வணங்கிய தனித்திண் டேர்வலான்
ஊழ்வினை வருந்துயிர் நிலையென் றுன்னுவான்
வாள்விழி நோக்கியை வணங்கி நோக்கினான். 1971

௪௦ அன்னவள் கூறுவா ளரசற் கத்தையர்க்
கென்னுடை வணக்கமுன் னியம்பி யானுடைப்
பொன்னிறப் பூவையுங் கிளியும் போற்றுகென்
றென்னுடை யெங்கையர்க் குணர்த்து வாயென்றாள்.

௪௧ தேர்வலா னவ்வுரை கேட்டுத் தீங்குறு
ஆர்வலா ருயிர்துறப் பெளிதன் றேயெனாப்
போர்வலான் றுக்கவும் பொருமி விம்மினான்
சோர்விலா னறிவிலாத் துயர்க்குச் சோர்கின்றான். 1973

௪௨ ஆறினன் போற்சிறி தவல மவ்வழி
வேறிலா வன்பினாய் விடைதந் தீகெனா
ஏறுசே வகற்றொழு திளைய மைந்தனைக்
கூறுவ தியாதென வினைய கூறினான். 1974

(பிரதி) 1 னேக்கலா.

௪௩ உரைசெய்தெங் கோமகற் குதவி யோதிய
தரைசெறி செல்வத்தைத் தவிர மற்றொரு
விரைசெறி குழலிமாட் டளித்த மெய்யனை
அரசனென் றின்னமொன் றுணர்த்த லாகுமோ. 1975

௪௪ கானகம் பற்றியிப் புதல்வன் காயுணப்
போனகம் பற்றுமப் பொருவில் மன்னவற்
கூனகம் பற்றிய வுயிரோ டின்னம்போய்
வானகம் பற்றிலா வலிமை கூறென்றான். 1976

௪௫ மின்னுடன் பிறந்தவாட் பரத வேந்தற்கென்
மன்னுடன் பிறந்திலன் மண்கொண் டாள்கின்றான்
தன்னுடன் பிறந்திலன் றம்பி முன்பலென்
என்னுடன் பிறந்தயான் வலிய னென்றியால். 1977

௪௬ ஆரிய னிளவலை நோக்கி யையநீ
சீரிய வல்லன செப்ப லென்றபின்
பாரிடை வணங்கினன் பரியு நெஞ்சினன்
தேரிடை வித்தகன் சேறல் மேயினான். 1978

௪௭ கூட்டினன் றேர்ப்பொறி கூட்டிக் [1]கொண்முறை
பூட்டினன் புரவியப் புரவி போநெறி
காட்டினன் காட்டித்தன் கல்வி மாட்சியால்
ஓட்டின னொருவரு முணர்வு றாமலே. 1979

௪௮ தையறன் கற்புந்தன் றகவுந் தம்பியும்
மையறு கருணையு முணர்வும் வாய்மையுஞ்
செய்யகை வில்லுமே சேம மாகக்கொண்
டையனும் போயினா னல்லி னுப்பணே. 1980

௪௯ *பொய்வினைக் குதவும் வாழ்க்கை யரக்கரைப் பொருத்தி யன்னார்
செய்வினைக் குதவி நட்பாற் செல்பவர்த் தடுப்ப தொக்கும்
மைவிளக் கியதே யன்ன மயங்கிரு டுரக்க வானுங்
கைவிளக் கெடுத்த தென்ன வந்தது கடவுட் டிங்கள்.

௫௦ மருமத்துத் தன்னை யூன்று மாக்கொடும் பாவந் தீர்க்கும்
உருமொத்த சிலையி னோரை யொருப்படுத் துதவி நின்ற
கருமத்தின் வினையை யெண்ணிக் களிப்பொடு காண வந்த
தருமத்தின் வதன மென்னப் பொலிந்தது தனிவெண் டிங்கள்.

(பிரதி) 1 கோன்முறை.

௫௧ காம்புயர் கானஞ் செல்லுங் கரியவன் வறுமை நோக்கித்
தேம்பின குவிந்த போலுஞ் செங்கழு நீருஞ் சேரைப்
பாம்பின தலைய வாகிப் பரந்தன குவிந்து சோர்ந்த
ஆம்பலு மென்ற போது போதெலா மலர்வ துண்டோ.

௫௨ அஞ்சனக் குன்ற மன்ன வழகனு மழகன் றன்மேல்
எஞ்சலி லன்பு போர்த்த விளவலு மிந்து வென்பான்
வெஞ்சிலைப் புருவத் தாடன் மெல்லடிக் கேற்ப வெண்ணூற்
பஞ்சிடைப் படுத்தா லன்ன வெண்ணிலாப் பரப்பப் போனார்.

௫௩ சிறுவிலை மருங்குல் கொங்கை யிந்திரை செல்வ மென்னுஞ்
செறியிருங் கூந்த னங்கை சீறடி நீர்க்கொப் பூழின்
நறியன தொடர்ந்து சென்று நடந்தன னவையு ணீங்கி
உறுவலி யன்பி னூக்கொன் றுண்டென வுணரவ துண்டோ.

௫௪ பரிதிவா னவனுங் கீழ்பாற் பருவரை பற்றா முன்னந்
திருவினா யகனுந் தென்பால் யோசனை யிரண்டு சென்றான்
அருவிபாய் கண்ணும் புண்ணா லழிகின்ற மனமுந் தானுந்
துரகமான் றேரிற் போனான் செய்தது சொல்ல லுற்றாம்.

௫௫ கடிகையோரிரண்டுமுன்றிற்கடிமதிளயோத்திகண்டான்
அடியிணை தொழுதா னாதி முனிவனை யவனு முற்ற
படியெலாங் கேட்டா னெஞ்சிற் பருவர லுழந்தான் முன்னம்
முடிவெலா முணர்ந்தா னந்தோ முடிந்தனன் மன்ன னென்றான்.

௫௬ நின்றுயர் பழியை யஞ்சி நேர்ந்திலன் றடுக்க வள்ளல்
ஒன்றுநா னுரைத்த தேகான் றருமத்துக் குறுதி [illegible]ன்
வென்றவ ருளரோ மேலை விதியினை யென்றா விம்மாப்
பொன்றிணி மன்னன் கோயில் சுமந்திர னோடும் புக்கான்

௫௭ தேர்கொண்டு வள்ளல் வந்தா னென்றுதஞ் சிந்தை யுந்த
ஊர்கொண்ட திங்க ளென்ன மன்னனை உழையர் சுற்றக்
கார்கொண்ட மேனி யானைக் கண்டிலர் கண்ணில் வற்றா
நீர்கொண்ட நெடுந்தேர்ப் பாக னிலைகண்டே நிலையிற் றீர்ந்தார்.

௫௮ இரதம்வந் துற்ற தென்றாங் கியாவரு மிசைப்ப லோடும்
வரதன்வந் துற்றா னென்ன மன்னனு மயக்கந் தீர்ந்தான்
புரைதபு கமல நாட்டம் பொருக்கென விழித்து நோக்கி
விரதமா தவனைக் கண்டான் வீரன்வந் தானோ வென்றான்

௫௯ இல்லையென் றுரைக்க லாற்று தேங்கிமா முனிவ னின்றான்
வல்லவன் முகமே நம்பி வந்தில [1]னென்ற மாற்றஞ்
சொல்லலு மரசன்சோர்ந்தான் [2]றுயர்பெறு முனிவனுனிவ்
அல்லல்காண்கில்லேனென்னு வாங்குநின் றகலப்போனான்

௬௦ நாயகன் பின்னு நற்றேர்ப் பாகனை நோக்கி நம்பி
சேயனோ வணிய னோவென் றுரைத்தலுந் தேர்வ லானும்
வேயுயர் கானிற் றானுந் தம்பியு மிதிலைப் பொன்னும்
[3]போயினனென்று னென்ற போழ்தத்தே யாவிபோனான்

௬௧ இந்திரன் முதல்வ ரான கடவுளர் யாரு மீண்டிச்
சந்திர னனைய தாங்கோர் விமானத்தின் றலையிற் றாங்கி
வந்தன னெந்தை தந்தை யெனமனங் களித்து வள்ளல்
உந்தியா னுலகத் தும்பர்ப் போக்கிலா வுலகத் துய்த்தார்

௬௨ உயிர்ப்பிலன் றுடிப்புமில்லனென் றுணர்ந் துருவந் தீண்டி
அயிர்த்தனர் நோக்கி மன்னற் காருயி ரின்மை தேறி
மயிற்குல மனைய நங்கை கோசலை மறுகி வீழ்ந்தாள்
வெயிற்சுடுங்கோடை தன்னி லென்பிலா வுயிரின்வேவாள்

௬௩ இருந்தவந் தனையோ டெல்லா மீன்றவன் றன்னை யீன்ற
பெருந்தவஞ் செய்த நங்கை கணவனைப் பிரிந்து தெய்வ
மருந்திழந் தவரின் விம்மி மணிபிரி யராவின் மாழ்கி
அருந்துணை பிரிந்தவன்றிற் பெடையென வரற்ற லுற்றாள்

௬௪ *வடித்தாழ் கூந்தற் கைகயன் மாதே மதியாலே
பிடித்தாய் வையம் பெற்றனை பேரா வரமின்னே
முடித்தா யன்றே மந்திர மென்றாண் முகில்வாய்மின்
துடித்தா லென்ன மன்னவன் மார்பிற் றுவள்கின்றாள்.

௬௫ நோயும் மன்றே நோன்கதிர் வாள்வே லிவையன்றி
மாயுஞ் செல்வ மக்களி னுக மறமன்னன்
காயும் புள்ளிக் கற்றட நாகங் கனிவாழை
வேயும் போன்றா னென்று மயங்கி விழுகின்றாள். 1997

௬௬ தானே தானே தஞ்சமி லாதான் றகவில்லான்
போனான் போனா னெங்களை நீத்திப் பொழுதென்னு
வானீர் சுண்டி மண்ணற வற்றி மறுகுற்ற
மீனே யென்ன மெய்தடு மாறி மெலிகின்றாள். 1998

(பிரதி) 1 னென்னு. 2 றுயருறு. 3 போயினு ரென்று.

௬௭ [1]ஒன்றா நன்னா டுய்க்குவ ரிந்நாட் டுயிர்காப்பார்
அன்றே மக்கட் பெற்றுயிர் வாழ்வா னறமுண்டோ
இன்றே வந்தீண் டஞ்சலென் னானென் மகனென்பான்
கொன்றா னென்றே தந்தையை யென்றாள் குலைகின்றாள்.

௬௮ அருந்தே ரானைச் சம்பர னைப்பண் டமர்வென்றாய்
இருந்தார் வானோர் நின்னரு ளாலே யினிதன்னார்
விருந்தா கின்றா யென்றனள் வேழத் தரசொன்றைப்
பெருந்தா ளன்பிற் றாழ்பிடி யென்னப் பிரிவுற்றாள். 2000

வேள்விச்செல்வந் துய்த்திகொல் மெய்ம்மைத் துணையின்மைச்
௬௯ சூழிச் செல்வந் துய்த்திகொ றோலா மனுநூலால்
வாழிச் செல்வந் துய்த்திகொல் மன்னென் றனள்வானோர்
கேள்விச் செல்வந் துய்க்க வயிற்றோர் கிரிதந்தாள். 2001

௭௦ *ஆழி வேந்தன் பெருந்தேவி யனைய பன்னி யழுதரற்றத்
தோழி யன்ன சுமித்திரையுந் துளங்கி யேங்கி யுயிர்சோர
ஊழி பேர்வ தெனக்கோயி லுலையும் வேலை மற்றொழிந்த
மாழை யொண்கட் டேவியருமயிலின் குழாத்தின் வந்திரைத்தார்

துஞ்சினானைத் தம்முயிரின் றுணையைக் கண்டார் துணுக்கத்தார்
நஞ்சு நுகர்ந்தா ரென்றுடல நடுங்கா நின்றா ரென்றாலும்
அஞ்சி யழுங்கி விழுந்திலரா லன்பிற் றறுகண் பிறிதுண்டோ
வஞ்ச மில்லா மனத்தானை வானிற் றொடர்வான் மனம்வலித்தார்

அளங்கொ ளளக்க ரிரும்பரப்பி லண்ட ருலகி னப்புறத்தில்
விளங்கு மாதர் கற்பினா ரிவரி னினியா ரென்கின்றார்
களங்க நீத்த முகத்தினார் கான வெள்ளங் கால்கோப்பத்
துளங்க லில்லாத் தனிக்குன்றிற் றொக்க மயிலிற் சூழ்ந்திருந்தார்.

கைத்த சொல்லா லுயிரிழந்தும் புதல்வற் பிரிந்துங் கடையோட
மெய்த்த வேந்தன் றிருவுடம்பைப் பிரியார் பற்றி விட்டிலரால்
பித்த மயக்கிற் சுறவெறியும் பிறவிப் பெரிய கடல்கடக்க
உய்த்து மீண்ட நாவாயிற் றாமும் போவா ரொக்கின்றார். 2005

௭௪ மாத ரார்க ளறுபதினா யிரர்தம் முள்ளம் வலித்திருப்பக்
கோதில் குணத்துக் கோசலையு மிளைய மாதுங் குழைந்தேங்கச்
சோதிமணித்தேர்ச் சுமந்திரன்சென் றரசன் றன்மை சொலவந்த
வேத முனிவன் விதிசெய்த வினையை நோக்கி விம்முவான்.

(பிரதி) 1 ஒன்றோ.

எரு †வந்த முனிவன் வரங்கொடுத்து மகனை நீத்த வன்கண்மை
எந்தைதீர்ந்தானெனவுள்ளத் தெண்ணியெண்ணியிரங்குவான்
உந்து கடலிற் பெருங்கலமொன் றுடையாயிற்பத்தனிநாய்கன்
நைந்துநீங்கச் செயலோரா மீகா மனைப்போ னலிவுற்றான்.

எசு செய்தற் குரிய செயற்குரிய சிறுவ ரவரண் டையரல்லர்.
எய்தக் கடவ பொருளெய்தா ரிகலா ரென்ன வியலென்னு
மையற் கொடியாண் மகனீண்டு வந்தால் முடித்து மற்றென்னத்
தையற் கடலிற் கிடந்தவனைத் தயிலக் கடலின் றலையுய்த்தான்.

எஎ தேவி மாரை யிவற்குரிமை செய்யு நாளிற் செந்தீயில்
ஆவிபோக்கீ ரெனநீக்கி யரிவை மார்க ளிருவரையுந்
தாவில் கோயிற் றலையிருத்தித் தண்டார்ப் பரதற் கொண்டணுசென்
றேவி னான்மன் னவனுணை யெழுது முடங்கல் கொடுத்தவரை.

எஅ போனா ரவருங் கேகயர்கோன் பொன்மா நகரம் புகவெய்த
ஆறு வறிவி னருந்தவனு மறமார் பள்ளி [1]யதுசேர்ந்தான்
சேனு பதியிற் சுமந்திரனே செயற்பாற் குரிய செய்கென்றான்
மேனுஞ் சொன்ன மாந்தர்க்கு விளைந்த பரிசு விளம்புவாம்.

எகூ மீனர் வேலை முரசியம்ப விண்ணோ ரேத்த மண்ணிறைஞ்சத்
தாரீரொளிவாள்புடையிலங்கச் சுடர்த்தேரேறித்தோன்றினன்
வானே புக்கா னரும்புதல்வன் மக்க ளகன்றார் வருமளவும்
யானே காப்ப னிவ்வுலகை யென்பான் போல விரிகதிரோன்.

அo வருந்தாவண்ணம்வருந்தினர்மறந்தார்தம்மைவள்ள லுமாங்
கிருந்தானென்றேயிருந்தார்களெல்லாமெழுந்தா ரருளிருக்கும்
பெருந்தா மரைக்கட் கருமுகிலைப் பெயர்ந்தார் காணர் வெய்துயிர்த்தார்
பொருந்தாநயனம்பொருந்திமைப்பொன்றச்சூழ்ந்தவனைப்புண்டார்

அக எட்டுத்திசையு மோடுவாரெழுவார்விழுவா ரீடர்க்கடலுள்
விட்டு நீத்தா னமையென்பார்வெய்ய னையன் வினையென்பார்
ஒட்டுப் படர்ந்த தண்டகமிவ் வுலகத் துளதன் றேவுணர் வைச்
சுட்டுச்சோரா தாற்றுதுமோ தொடர்துந்தேரின் சுவடென்பார்

அஉ தேரின் சுவடு நோக்குவார் திருமா நகரின் மிசைத்திரிய
ஊருந் திகிரிக் குறியொற்று யுணர்ந்தா ரெல்லா முயிர்வந்தார்
ஆரு மஞ்ச லய்யன்போ யயோத்தி யடைந்தா னெனவசனிக்
காருங் கடலு மொருவழிக் கொண் டார்த்த தென்னக் கடித்தார்த்தார்.

(பிரதி) 1 யறை சேர்ந்தான்.

மானவரவின்வாய்த்தியின் வளைவான்றுளைவா ளெயிற்றின்வழி
யான கடுவுக் கருமருந்தா மருந்து மமுதம் பெற்றுய்ந்து 2015
போனபொழுதிற்புகுந்தவுயிர்போர்த்தாரொத்தார்பொருவரிய
வேனின்மதனன்மதனழித்தான் மீண்டாரென்னவாண்டையார்

௮௪ ஆறு செல்லச் செல்லத்தே ராளி கண்டா ராயப்பால்
வேறு சென்ற நெறிகாணார் விம்மு கின்ற வுவகையராய்
மாறி யுலகம் வகுத்தநாள் வரம்பு கடந்து மண்முழுதும்
ஏறி யொடுங்கு மெறிகடல்போ லெழின்மா நகர மெய்தினார்.

புக்காரரசன்பொன்னுலகிற்போனானென்னும்பொருள்கேட்டார்
உக்கார் நெஞ்ச முயிருகுத்தா ருற்ற தெம்மா லுரைப்பரிதால்
தக்கான் போனான்வனமென்னுந்தகையுமுணர்ந்தார்மிகையாவி
அக்கா லத்தேயழியுமோ வறுதியென்றென் றுளதானால். 2017

௮௬ மன்னற் கல்லார் வனம் புகுந்த மைந்தற் கல்லர் வாங்கரிய
இன்னற்சிறையி லிடைப்பட்டா ரிருந்தா ரின்ற வருந்தவனும்
உன்னற் கரிய பழியஞ்சி யன்றே வொழிந்த தியானென்று
பன்னற் கரிய பலநெறியும் பகர்ந்து பதைப்பை விலக்கினான்.

௮௭ வெள்ளத் திடைவாழ் வடவனலை யஞ்சி வேலை கடவாத
பள்ளக் கடலின் முனிபணியாற் பையு ணகரம் பதைப்படங்க
வள்ளற் றாதை பணியினார் வானோர் தவத்தால் வயங்கிருளில்
நள்ளிற் போன வரிசிலைக்கை நம்பி செய்கை நடத்துவாம்.2019

௫. தைலமாட்டு படலம் முற்றும்.

---

௬. கங்கைப் படலம்.

௧ *வெய்யோனொளி தன்மேனியின் விரிசோதியின் மறையப்
பொய்யோவெனு மிடையாளொடு மிளையானொடும் போனான்
மையோமர கதமோமறி கடலோமழை முகிலோ
ஐயோவிவன் வடிவென்பதோ ரழியாவழ குடையான். 2020

௨. அளியன்னதொ ரறல்பன்னிய குழலாள்கட லமுதின்
தளியன்னதொர் மொழியாணிறைதவமன்னதொர்பொறையாள்
வெளியன்னதொரிடையாளொடும் விடையன்னதொர் நடையான்
களியன்னமு மடவன்னமு முடனாடுவ கண்டான். 2021

௩ அஞ்சம்பையு மையன்கையி லகலம்பையு மளவா
நஞ்சங்களை வெலவர்கிய நயனங்களை யுடையாள்
துஞ்சுங்களி வரிவண்டுகள் குழலின்மிசை சுழலக்
கஞ்சங்களை மஞ்சன்கழ னகுகின்றன கண்டாள். 2022

௪ மாகந்தமு மகரந்தமு மளகந்தொடர் மதியின்
பாகந்தரு நுதலாளொடு பவளந்தரு மிதழான்
மேகந்தனி வருகின்றது மின்னோடென மிளிர்பூண்
நாகந்தனி வருகின்றது பிடியோடென நடவா. 2023

௫ தொளைகட்டிய கிளைமுட்டிய சுருதிச்சுவை யமுதிற்
கிளைகட்டிய கருவிக்கிள ரிசையிற்பசை நறவின்
விளைகட்டியின் மதுரித்தெழு கிளவிக்கிளி விழிபோற்
களைகட்டவர் தளைவிட்டெறி குவளைத்தொகைகண்டான்.

௬ அருப்பேந்திய கலசத்துணை யமுதேந்திய மதமா
மருப்பேந்திய தெனலாமுலை மழையேந்திய குழலாள்
கருப்பேந்திர முதலாயின கண்டாளிடர் காணுள்
பொருப்பேந்தியதோளானொடுவிளையாடினள்போனாள்

௭ பன்னந்துகு தரளந்தொகு படர்பந்துள படுநீர்
அன்னந்துயில் வதிதண்டலை யயனந்துறை புளினஞ்
சின்னந்தரு மலர்சிந்திய செறிசந்தன வனநன்
பொன்னுந்தின நதிகண்டுள மகிழ்ந்தந்தனர் போனார்.

௮ கால்பாய்முலை முதுமேதிகள் கதிர்மேய்வன கடைவாய்
பால்பாய்வன புனல்பாய்வன மலர்வாயளி படரச்
சேல்பாய்வன கயல்பாய்வன செங்கான்மட வன்னம்
போல்பாய்கனல் மடவார்படி நெடுநாடவை போனார்.

௯ *பரிதி பற்றிய பல்கலன் முற்றினர்
மருத வைப்பின் வளங்கெழு நாடொரீஇச்
சுருதி கற்றுயர் தோமிலர் சுற்றுறும்
விரிதிரைப்புனற் கங்கையின் மேவினார். 2028

௧௦ கங்கை யென்னுங் கடவுட் டிருநதி
தங்கி வைகுந் தபோதனர் யாவரும்
எங்கள் செல்கதி வந்ததென் றேமுறு
அங்க ணையகற் காணவந் தண்மினார். 2029

கக பெண்ணி னோக்குஞ் சுவையிற் பிறர்பிறர்க்
கெண்ணி னோக்கி யியம்பரு மின்பத்தைப்
பண்ணி னோக்கும் பராவமு தைப்பசுங்
கண்ணி னோக்கின ருள்ளங் களிக்கின்றார். 2030

கஉ எதிர்கொண் டேத்தின ரின்னிசை பாடினர்
வெதிர்கொள் கோவின ராடினர் வீரனைக்
கதிர்கொ டாமரைக் கண்ணனைக் கண்ணினால்
மதுர வாரி யமுதென மாந்துவார். 2031

கங மனையி னீங்கிய மக்களை வைகலும்
நினையு நெஞ்சினர் கண்டிலர் நேடுவார்
அனையர் வந்துற வாண்டெதிர்ந் தார்கள்போல்
இனிய மாதவப் பள்ளிகொண் டேகினார். 2032

கச பொழியுங் கண்ணிற் புதுப்புன லாட்டினர்
மொழியு மின்சொலின் மொய்ம்மலர் சூட்டினர்
அழிவி லன்பெனு மாரமிர் தூட்டினர்
வழியின் வந்த வருத்தம் வருந்தவே. 2033

கரு காயுங் கானிற் கிழங்குங் கனிகளுந்
தூய தேடிக் கொணர்ந்தனந் தோன்றனீ
ஆய கங்கை யரும்புன லாடிமுத்
தீயு மோம்பினை செய்யமு தென்றனர். 2034

கசு மங்கை யர்க்கு விளக்கன்ன மானையுஞ்
செங்கை பற்றினன் றேவருந் துன்புறப்
பங்கயத் தயன் பண்டுதன் பாதநீர்
அங்கை யிற்றந்த கங்கையி னாடினான். 2035

கஎ கன்னி நீக்கருங் கங்கையுங் கைதொழாப்
பன்னி நீக்கரு பாதகம் பாருளோர்
என்னி னீக்குவர் யானுமின் றெற்றந்த
உன்னி னீக்கின னுய்ந்தனன் யானென்றாள். 2036

கஅ வெங்க ணாகக் கரத்தினன் வெண்ணிறக்
கங்கை வார்சடைக் கற்றையன் கற்புடை
மங்கை காணநின் றாடுகின் றான்வகிர்த்
திங்கள் சூடிய செல்வனிற் றோன்றினான். 2037

௧௯ தள்ளு நீர்க்குறை கங்கைத் தரங்கத்தால்
வள்ளி நுண்ணிடை மாமல ராளொடும்
வெள்ளி வெண்ணிறப் பாற்கடன் மேலைநாட்
பள்ளி நீங்கிய பான்மையிற் றேன்றினன். 2038

௨௰ வஞ்சி நாணி வணங்க மடநடைக்
கஞ்சி யன்ன மொதுங்க வடிக்குமென்
கஞ்ச நீரி லொளிப்பக் கயலுகப்
பஞ்சி மெல்லடிப் பாவையு மாடினள். 2039

௨௧ தேவர் தேவன் செறிசடைக் கற்றையுட்
கோவை மாலை யெருக்கொடு கொன்றையின்
பூவு நாறலள் பூங்குழற் கற்றையின்
நாவி நாண்மலர் கங்கையு நாறினள். 2040

௨௨ நுரைக்கொ ழுந்தெழுந் தோடி நுடங்கலால்
நரைத்த கூந்தல ணங்கைமந் தாகினி
உரைத்த சீதை தனிமைகண் டுன்னுவாள்
திரக்கை நீட்டிச் ரெவிவியி னட்டினள். 2041

௨௩ மங்கை வார்குழற் கற்றை மழைக்குலந்
தங்கி நீரிடைத் தாழ்ந்து குழைப்பன
கங்கை யாற்றுட னடுங் கரியவள்
பொங்கு நீர்ச்சுழி போயது போன்றதே. 2042

௨௪ சுழிபட் டோங்கிய தூங்கொலி யாற்றுத்தன்
விழியிற் சேலுகள் வானிற வெள்ளத்து
முழுகித் தோன்றுகின் றுண்முறை யாற்கடல்
அழுவத் தன்றெழு [1]வாளென லாயினள். 2043

௨௫ செய்ய தாமரைத் தாள்பண்டு தீண்டலால்
வெய்ய பாதகந் தீர்த்து விளங்கினுள்
அய்யன் மேனி யெலாமளைந் தாளினி
வைய மாநர கத்திடை வைகுமோ. 2044

௨௬ துறைநந் றும்புன லாடிச் சுருதியோர்
உறையு ளெய்தி யுணர்வுடைத் தம்பியோ
டிறைவற் கைதொழு தேந்தெரி யோம்பிப்பின்
அறிஞர் காதற் கமைவிருந் [2]தாயினன். 2045

(பிரதி) 1. வானென வாயினள். 2. தாகினன்.

உஎ வருந்தித் தான்றர வந்த வமுதையும்
அருந்து நீரென் றமரரை யூட்டினன்
விருந்து மெல்லட குண்டு விரும்பினன்
திருந்தி னர்வயிற் செய்வன தேயுமோ. 2046

சு. கங்கைப் படலம் முற்றும்.

எ. குகப் படலம்

க ஆய காலையி னுயிர மம்பிக்கு
நாய கன்போர்க் குகனெனு நாமத்தான்
தூய கங்கைத் துறைவிடுந் தொன்மையான்
காயும் வில்லினன் கற்றிர டோளினன். 2047

உ துடிய னாயினன் றோற்செருப் பார்த்தபேர்
அடிய னற்செறிந் தன்ன நிறத்தினன்
நெடிய தானை நெருக்கலி னீர்முகில்
இடியி னேடெழுந் தாலன்ன வீட்டினன். 2048

ந கொம்பு தித்துடி கொட்டு முறைமையன்
பம்பை பம்பும் படையினன் பல்லவத்
தம்ப னம்பிக்கு நாயக னழிகவுட்
டும்பி யீட்டம் புரைகிளை சுற்றினன். 2049

ச காழ மிட்ட குறங்கினன் கங்கையின்
ஆழ மிட்ட நெடுமையி னனரைத்
தாழ விட்டசெந் தோலன் றயங்குறச்
சூழ விட்ட தொடுபுலி வாலினன். 2050

ரு பற்றெருடுத் தன பல்கு கவடியன்
கற்றெருடுத் தன போலுங் கழலினன்
அற்றெருடுத் தன்ன குஞ்சியி னளியின்
நெற்றெரு டுத்து நெரித்த புருவத்தான். 2051

சு பெண்ணை [1]வன்செறும் பிற்பிறங் கிச்செறி
வண்ண வார்மயிர் வார்ந்துயர் முன்கையான்
கண்ண கன்றட மார்பெனுங் கல்லினன்
எண்ணெ யுண்ட விருள்புரை மேனியான். 2052

(பிரதி) 1 வன்செறுப்.

எ கச்சொ டார்த்த கறைக்கதிர் வாளினான்
நச்ச ராவு நடுக்குறு நோக்கினான்
பிச்ச ராமன்ன பேச்சின னிந்திரன்
வச்சி ரம்புரை கின்ற மருங்கினான். 2053

அ ஊற்ற மென்ன றவூனொடு மீனுகர்
நாற்ற மெய்ய னகையின் முகத்தினான்
சீற்ற மன்றியுந் தீயெழ நோக்குவான்
கூற்ற மஞ்சக் குமிறுங் குரலினான். 2054

கூ [1]சிருங்கி பேர மெனத்திரைக் கங்கையின்
மருங்கு தோன்று நகருடை வாழ்க்கையன்
ஒருங்கு தேனொடு மீனுப கார்த்தன்
இருந்த வள்ளலைக் காணவந் தெய்தினான். 2055

கo சுற்ற மப்புற நிற்கச் சுடுகணை
விற்று றந்தரை வீக்கிய வாளொழித்
சுற்ற நீத்த மனத்தின னன்பினன்
நற்ற வப்பள்ளி வாயிலை நண்ணினான். 2056

கக கூவா முன்ன மிளையோன் குறுகினீ
யாவா யாரென வன்பி னிறைஞ்சினான்
தேவா நின்கழல் சேவிக்க வந்தனன்
நாவாய் வேடுவ னடிய யேனென்றான். 2057

கஉ *நிற்றியீண் டென்று புக்கு நெடியவற் றொழுது தம்பி
கொற்றவ நின்னைக் காணக் குறுகின னிமிர்ந்த கூட்டச்
சுற்றமுந் தானு முள்ளந் தூயவன் றாயி னல்லன்
எற்றுநீர்க் கங்கை [2]நாவாய்க் கிறைகுக னொருவ னென்றான்.

கங அண்ண லும்விரும்பியென் பாலழைத்திநீயவனை யென்னப்
பண்ணவன் வருக வென்றான் பரிவினன் விரைவிற் புக்கான்
கண்ணனைக் கண்ணி னோக்கிக் கனிந்தன னிருண்ட குஞ்சி
மண்ணுறப் பணிந்து மேனி [3]வளைத்துவாய் புதைத்துநின்றான்

கச இருத்தியீண் டென்ன லோடு மிருந்தில னெல்லை நீத்த
அருத்தியன் றேனு மீனு மமுதினுக் கமைந்த வாகத்
திருத்தினன் கொணர்ந்தே னென்கொ றிருவுள மென்ன வீரன்
விருத்தமா தவரை நோக்கி முறுவலன் விளம்ப லுற்றான். 2060

(பிரதி) 1 சிருங்க வேரி யெனத்திரைக். 2 நாவா யிறையவ.
3 வளைந்து.

கரு அரியதா முவப்ப வுள்ளத் தன்பினா லமைந்த காதல்
தெரிதரக் கொணர்ந்த வென்றா லமுதினுஞ் சீர்த்ததன்றே
பரிவினிற் றழீஇய வென்னிற் பவித்திர மெம்மனோர்க்கும்
உரியன வினிதி னாமு முண்டன மன்றே யென்றான். 2061

கசு சிங்கவே றனைய வீரன் பின்னருஞ் செப்பு வான்யாம்
இங்குறைந் தெறிநீர்க் கங்கை யேறுது நாளை யாணர்ப்
பொங்குநின் சுற்றத் தோடும் போயுவந் தினிது னூரில்
தங்கினை நாவா யோடுஞ் சாருதி விடிய லென்றான். 2062

கஎ கார்குலா நிறத்தான் கூறக் [1]காதல னுணர்த்து வானிப்
பார்குலாஞ் செல்வ வுன்னை யிங்ஙனம் பார்த்த கண்ணை
ஈர்கிலாக் கள்வ னேனா னின்னலி னிருக்கை நோக்கித்
தீர்கிலே னுண்டு மீண்டு [3]செய்வனா னடிமை யென்றான்.

கஅ கோதைவிற் குரிசி லன்னான் கூறிய கொள்கை கேட்டான்
சீதையை நோக்கித் தம்பி திருமுக நோக்கித் தீராக்
காதல னாகு மென்னுங் கருணையின் மலர்ந்த கண்ணன்
யாதினு மினிய நம்பி யிருத்தியீண் டெம்மோ டென்றான்.

க௯ †அடிதொழு துவகை தூண்டி வழைத்தன னாழி யன்ன
துடியுடைச் சேனை வெள்ளம் பள்ளியைச் சுற்ற வேவி
வடிசிலை பிடித்து வாளும் வீக்கின னம்பு பற்றி
இடியுடை மேக மென்ன விணையடி யேத்தி நின்றான்.

உ0 திருநகர் தீர்ந்த தன்மை மானவ தெரித்தி யென்னப்
பருவர றம்பி கூறப் பரிந்தவன் பையு ளெய்தி
இருகணீ ரருவி சோரக் குகனுமாண் டிருந்தா னன்னோ
பெருநிலக் கிழத்தி நோற்றும் பெற்றிலள் போலுமென்னா.

உக விரியிருட்பகையையோட்டித் திசைகளைவென் றுமேனின்
ஒருதனித் திகிரி யுந்தி யுயர்புகழ் நிறுவி நாளும்
இருநிலத் தெவர்க்கு முள்ளத் திருந்தன னென்ன வீய்ந்த
செருவலி வீர னென்னச் செங்கதிர்ச் செல்வன் சென்றான்

உஉ மாலைவாய் நியமஞ் செய்து மரபுளி யியற்றி வைகல்
வேலைவா யமுத னாளும் வீர னும் விரிந்த நாணற்
பாலவாம் பாரின் பாயல் வைகினன் பருவி லேந்திக்
காலைகாண் பளவுந் தம்பி யிமைத்திலன் காத்து நின்றான்.

(பிரதி) 1 காதலி. 2. செய்குவ.

உ௩ †வெய்யில்விரி கனகக் குன்றத் தெழில்கெட விலகு சோதிக்
கயில்விரி வயிரப் பைம்பூண் கடுந்திறன் மடங்க லன்னான்
துயிலெனு மணங்கு வந்து தோன்றலு மவளை நாமே
எயிலுடை யயோத்திமூதூ ரெய்துநா ளெய்து கென்றான்

உ௪ †மறக்கவா ரிளைய வீர னுணையை மறுக்கல் செல்லா
உறக்கமா மாதுமண்ண லுபையபங் கயங்கள் போற்றித்
துறக்கமா மென்ன லாய தூய்மதி லயோத்தி யெய்தி
இறக்குநா ளெந்தை பாத மெய்துவ னென்னப் போனாள்.

உ௫ †மற்றவ ளிறைஞ்சி யேக மாமலர்த் தவிசி னீங்காப்
பொற்றொடி யோடு மையன் றுயிறரு புன்மை நோக்கி
இற்றதோர் நெஞ்ச னாகி யிருகணீ ரருவி சோர
உற்றவோ வியம தென்ன வொருசிலை யதனி னின்றான்.

தும்பியின் குழாத்திற் சுற்றுஞ் சுற்றத்தன் றொடுத்த வில்லன்
உ௬ வெம்பிவெந் தழியா நின்ற நெஞ்சினன் விழித்த கண்ணன்
தம்பிநின் றானை நோக்கித் தலைமகன் தன்மை நோக்கி
அம்பியின் றலைவன் கண்ணீ ரருவிசோர் குன்றி நின்றான்.

உ௭ துறக்கமே முதல வான தூயன யாவை யேனும்
மறக்குமா நினைய லம்மா வரம்பிலாத் தோற்ற மாக்கள்
இறக்குமா றிதுவென் பான்போன் முன்னைநாளிறந்தான் பின்னுட்
பிறக்குமா றிதுவென் பான்போற் பிறந்தனன் பிறவா வெய்யோன்

செஞ்செவே சேற்றிற் றோன்றுந் தாமரை தேரிற் றோன்றும்
உ௮ வெஞ்சுடர்ச் செல்வன் மேனி நோக்கிய விரிந்த வேறோர்
அஞ்சன நாயி றன்ன வையனை நோக்கிச் செய்ய
வஞ்சிவாழ் வதன மென்னுந் தாமரை மலர்ந்த தன்றே.

உ௯ நாண்முதற் கமைந்த யாவு நயந்தன னியற்றி நாமத்
தோண்முதற்றொடர்ந்தவில்லான் மறையவர்தொடரப் போனான்
ஆண்முதற் கமைந்த கேள்வி யன்பனை நோக்கி யையன்,
கோண்முதற் கமைந்த நாவாய் கொணருதி விரைவினென்றான்

௩௦ *ஏவிய மொழிகேளா விழிபுனல் பொழிகண்ணன்
ஆவியு நைகின்றா னடியிணை பிரிகில்லான்
காவியின் மலர்காயாக் கடன்மழை யணையானைத்
தேவியோ டடிதாழாச் சிந்தனை யுரை செய்தான். 2076

௩௧ பொய்முறை யலராலெம் புகவிடம் வனமேயாம்
கொய்முறை யுறுதாரீர் குறையிலம் வலியேமால்
செய்முறை குற்றேவல் செய்குது மடியோமை
இம்முறை யுறவென்னு மினிதிரு நெடிதெம்மூர். 2077

௩௨ தேனுள தினையுண்டாற் றேவரு நுகர்தற்காம்
ஊனுள துணைநாயோ டுயிருள விளையாடக்
கானுள புனலாடக் கங்கையு முளதன்றே
நானுள தனையுநீ யினிதிரு நாடெம்பால். 2078

௩௩ தோலுள துகில்போலுஞ் சுகமுள தொடர்மஞ்சம்
போலுள பரண்வைகப் புரையுள கடிதோடுங்
காலுள சிலைபூணுங் கையுள கலிவானின்
மேலுள பொருளேனும் விரைவொடு கொணர்வேமால்.

௩௪ ஐயிரு பத்தோடைந் தாயிர ருளராணை
செய்குநர் சிலைவேடர் தேவரின் வலியோமால்
உய்குது மடியேமெங் குடிவிடை யொருநாணீ
வைகுதி ரெனின்மேலும் வாழ்விலை பெரிதென்பான்.

௩௫ அண்ணலு மதுகேளா வகநிறை யருண்மிக்கான்
வெண்ணிற நகைசெய்தான் வீரனின் னுழையாமிப்
புண்ணிய நதியாடிப் புனிதரை வழிபாடுற்
றெண்ணிய சிலநாளிற் குறுகுது மினிதென்றான். 2081

௩௬ சிந்தனை யுணர்கிற்பான் சென்றனன் விரைவோடும்
தந்தன னெடுநாவாய் தாமரை நயனத்தான்
அந்தணர் தமையெல்லா மருளுதிர் விடையென்னு
இந்துவி னுதலாளோ [1]டிளவலொ டினிதேறு. 2082

௩௭ விடுநதி கடிதென்றான் மெய்யுயி ரனையானும்
முடுகின னெடுநாவாய் முரிதிரை நெடுநீர்வாய்க்
கடிதினின் மடவன்னக் கதியது செலநின்றார்
இடருறு மறையோரு மெரியுறு மெழுகானார். 2083

௩௮ பாலுடை மொழியாளும் பகலவ னனையானுஞ்
சேலுடை நெடுநன்னீர் சிந்தினர் விளையாடத்
தோலுடை நிமிர்கோலிற் றுழவிய நெடுநாவாய்
காலுடை நெடுஞ்ஞெண்டிற் சென்றது கடிதம்மா. 2083

(பிரதி) 1 டிளவலு மினிதேறு.

௩௯ சாந்தணி புளினத்தின் றடமுலை யுயர் கங்கை
காந்தின மணிமின்னக் கடிகமழ் கமலத்திற்
சேந்தொளி விரியுந்தெண் டிரையெனு நிமிர்கையால்
ஏந்தின ளொருதானே யேற்றின ளினிதிப்பால். 3986

௪௦ அத்திசை யுற்றைய னன்பனை முகநோக்கிச்
சித்திர கூடத்தின் சென்னெறி புகலென்னுப்
பத்தியி னுயிரீயும் பரிவின னடிதாழா
உத்தம நாயேனுன் கூறுவ துளதென்றான். 2086

௪௧ நெறியிடு நெறிவல்லே னேடின வழுவாமல்
நறியன கனிகாயு நறவிவை தரவல்லேன்
உறைவிட மமைவிப்பே னுடிவரை யளவும்மைப்
பிறியல னுடனேகப் பெறுகுவ [1]னெனினுயேன். 2087

௪௨ தீயன வகையாவுந் திசைதிசைச் செலநூறித்
தூயன வுறைகானந் துருவினன் வரவல்லேன்
மேயன பொருணுடித் தருகுவன் வினைமுற்றும்
ஏயின செயல்வல்லே னிருளினு நெறிசெல்வேன். 2088

௪௩ கல்லுவன் மலையேனுங் கவலையின் முதல்யாவுஞ்
செல்லுவ னெறிதூரஞ் செறிபுன றரவல்லேன்
வில்லினு முளனொன்றும் வெருவல னிருபோதும்
மல்லினு முயர்தோளாய் மலரடி பிரியேனால். 2089

௪௪ திருவுள மெனின்மற்றென் சேனையு முடனேகொண்
டொருவல னிருபோது முறைகுவ னுளராளுர்
மருவல ரெனின்முன்னே மாள்குவ னழிகல்லேன்
பொருவரு மணிமார்பா போதுவ னுடனென்றான். 2090

௪௫ அன்னவ னுரைகேளா வமலனு முரைநேர்வான்
என்னுயி ரனையாய்நீ யிளவலுன் னிளையானிந்
நன்னுத லிவணின்கே ணளிர்கட லுலகெல்லாம்
உன்னுடை யதுநானுன் னுரிமையி லுளனென்றான்.

௪௬ துன்புள [2]தெனினன்றோ சுகமுள ததுவன்றி
பின்புள திடைமன்னும் பிரிவுள தெனவுன்னேன்
முன்புள [3]மொருநால்வோ முடிவுள தெனவுன்னு
அன்புள வினிநாமோ ரைவர்க ளுளராளோம். 2092

(பிரதி) 1 னினிநாயேன். 2 தெனிலொன்றே சுகமெனி லது வன்றே. 3. தொருநால்வோ,

சஎ படருற வுளனும்பி கானுறை பகலெல்லாம்
இடருறு தனையாயோ யாதென வுரியாய்நீ
சுடருறை வடிவேலாய் சொன்முறை கடவேனுன்
வடதிசை வருமந்நா ணின்னுழை வருகின்றேன். 2093

சஅ அங்குள கிளைகாவற் கமைதியி னுளனும்பி
இங்குள கிளைகாவற் காருள ரிசையாய்நீ
உன்கிளை யெனதன்றோ வுறுதுய ருறலாமோ
என்கிளை யதுகாவென் னேவலி னினிதென்றான். 2094

சகூ பணிமொழி கடவாதான் பருவரல் [1]விகவாதான்
பிணியுடை மனனென்னும் பெயரினன் விடைகொண்டான்
அணியிழை மயிலோடு மையனு மிளையானுந்
திணிமர நிறைகானிற் சேணுற நெறிசென்றார். 2095

ஏ. குகப் படலம் முற்றும்.

அ. வனம்புகு படலம்.

க பூரியர் புணர்மாதர் பொதுமன மெனமன்னும்
ஈரமு முளதில்லென் றறிவரு மிளவேனில்
ஆரியன் வரலோடு மமுதுள வியசீதக்
காருறு குறிமானக் காட்டிய தவணெங்கும். 2096

உ வெயிலிள நிலவேபோல் விரிகதி ரிடைவீசப்
பயின்மர நிழலினப் பனிபுரை துளிமேகம்
புயறர விளமென்கால் பூவள வியதெய்த
மயிலின நடமாடும் வழியினி யனபோனார். 2097

ந மன்றலின் மலிகோதை மயிலிய லிளமாதே
இன்றுயில் வதிகோபத் தினம்விரி வனவெங்குங்
கொன்றைகள் சொரிபோதின் குப்பைகள் குவிமாலை
பொன்றிணி மணிமானப் பொலிவன பலகாணாய். 2098

ச பாணில மிஞிறுகப் படுமழை பணையாக
நாணின தொகுபீலிக் கோலின நடமாடும்
பூணிய வின்சாயற் பொலிவுறு மருகண்ணிற்
காணிய வெனலாகுங் களிமயி லிவைகாணாய். 2099

(பிரதி) 1 விகழாதான்.

௫ நெய்ந்நிறை நெடுவேலி னிழலுறு திறமுற்றிக்
கைந்நிறை நிமிர்கண்ணாய் கருதின வினமென்றே
மெய்ந்நிறை விரிசாயல் கண்டுநின் விழிகண்டு
மஞ்ஞையு மடமானும் வருவன பலகாணாய். 2100

௬ பூவலர் குரவோடும் புடைநிழ லிடைவீனும்
மாவலர் சொறிசூழற் றுயிலெழு மயிலொன்றின்
றூவியின் மணம்நாறத் துணைபிரி பெடைதானச்
சேவலோ டுறலூடித் திரிவத னியல்காணாய். 2101

௭ அருந்ததி யனையாளே யமுதினு மினியாளே
செருந்தியின் மலர்தாங்குஞ் செறியித [1]முனசோகம்
பொருந்தின களிவண்டிற் பொலிவன பொன்னூதும்
இருந்தையி ளெழுதீயொத் தெழுவன விவைகாணாய்.

௮ சேந்தொளி விரிசெவ்வாய்ப் பைங்கிளி செறிகோலக்
காந்தளின் மலரேறிக் கோதுவ கவினாரும்
மாந்தளிர் நறுமேனி மங்கைநின் மணிமுன்கை
ஏந்தின வெனலாகு மியல்பின விவைகாணாய். 2103

௯ ஏந்திள முலையாளே யெழுதரு மெழிலாளே
காந்தளின் முகைகண்ணிற் கண்டொரு களிமஞ்ஞை
பாந்தளி தெனவுன்னிக் கவ்விய படிபாராத்
தேந்தள வுகள்செய்யுஞ் [2]சிறுநகை பலகாணாய். 2104

௧0 குன்றுறை வயமாவின் குருளையு மிருள்சிந்திப்
பின்றின தெனலாகும் பிடிதரு சிறுமாவும்
அன்றல பிரிவொல்லா வண்டர்த மனையாவின்
கன்றொடு முடனாடுங் [4]களியன பலகாணாய். 2105

௧௧ அகில்புனை குழல்மாதே யணியிழை யெனலாகும்
நகுமலர் நிறைமாலைக் கொம்புக ணதிதோறுந்
துகில்புரை திரைநீரிற் றோய்வன துறையாடும்
முகிழிள முலையாரின் மூழ்குவ பலகாணாய். 2106

௧௨ முற்றுறு முகைகிண்டி [3]முரல்கில சிறுதும்பி
விற்றிரு நுதன்மாதே யம்மலர் விரிகோங்கின்
சுற்றுறு மலரேறித் துயில்வன சுடர்மின்னும்
பொற்றக டுறுநீலம் புரைவன பலகாணாய். 2107

(பிரதி) 1 முனகோங்கம். 2 சிறுகுறு நகைகாணாய். 3 முரல்சில
4 களியது.

கங. கூடிய நறைவாயிற் கொண்டன விழிகொள்ளா
மூடிய [1]களிமன்ன முடுகிய நெறிகாணா
ஆடிய சிறைமாவண் டந்தரி னிசைமுன்னம்
பாடிய பெடைகண்ணாய் வருவன பலகாணாய். 2108

கச கன்னிய ரணிகோலங் கற்றறி குனரென்னப்
பொன்னணி நிறவேங்கைக் கோங்குகள் புதுமென்பூ
அன்னமென் னடையாய்நின் னளகநு நுதலப்புஞ்
சின்னநன் மலர்மானச் சிந்துவ பலகாணாய். 2109

கரு மணங்கிளர் மலர்வாச மாருதம் வரவீசக்
கணங்கிளர் தருசுண்ணங் கல்லிடை யனகானத்
தணங்கினு மினியாயுன் னணிவட மூலமுன்றிற்
சுணங்கின மவைமானத் துறுவன பலகாணாய். 2110

கசு அடியிணை யுறைகல்லா தென்றுகொ லதரெங்கும்
இடையிடை மலர்சிந்து மினமர மிவைகாணாய்
கொடியினொ டிளவாசக் கொம்புகள் குயிலேயுன்
றுடிபுரை யிடைமானத் துவள்வன பலகாணாய். 2111

கள வாள்புரை விழியாயுன் மலர்புரை யடிமானத்
தாள்புரை தளிர்வைகுந் தகைநிமி றிவைகாணாய்
கோள்புரை யிருள்வாசக் குழல்புரை மழைகாணாய்
தோள்புரை யிளவேயின் றொகுதிக ளிவைகாணாய். 2112

கஅ பூநனை சினைதுன்றிப் புள்ளிடை யிடைபம்பி
நானிற நளிர்வல்லிக் கொடிநவை யிலபல்கி
மானின மயின்மாலை குயிலினம் வருகானந்
தீநிகர் தொழிலாடைத் திரைபொரு வனகாணாய். 2113

கக என்றனன் மடவாளோ டினிதினின் விளையாடிப்
பொன்றிணி திரடோளான் போயின னெறிபோதுஞ்
சென்றது குடபாலைத் திருமலை யிதுவன்றே
வென்றரு வினைவென்றோர் மேவிட மெனலோடும்.

உ0 அருத்தியி னகம்விம்மு மன்பின [2]நெடுநாளிற்
றிருத்திய வினைமுற்றிற் றின்றெனத் தெரிகின்றான்
பரத்துவ னெனுநாமப் பரமுனி பவநோயின்
மருத்துவ னனையானை வரவெதிர் கொளவந்தான். 211[illegible]

(பிரதி) 1 களிமன்னு. 2 னெடுநாளிற்.

உக குடையின னிமிர்கோலன் குண்டிகை யினன்மூரிச்
சடையின னுரிமானின் சருமனன் மரநாரின்
உடையினன் மயிர்நாலு முருவின னெறிபேணும்
நடையினன் மறைநாலு நடநவி றருநாவான். 2116

உஉ செந்தழல் தருசெல்வன் றிசைமுக முனிசெவ்வே
தந்தன வுயிரெல்லாந் தன்னுயி ரெனநல்கும்
அந்தண னுலகேழு மமைமயெனி னமரேசன்
உந்தியி னுதவாமே யுதவிடு தொழில் வல்லான். 2117

உங அம்முனி வரலோடு மழகனு மலர்தூவி
மும்முறை தொழுதானை முனிவனு மெதிர்புல்லி
இம்முறை யுருவோநான் காண்குவ தெனவுள்ளம்
விம்மின [1]னிழிகண்ணீர் விழிவழி யுகநின்றான். 2118

உச அகலிட நெடிதாளு மனைமதியை யதுதீரப்
புகலிட மெமதாகும் புனரயிடை யிந்நாளிற்
றகவில மனைவோடந் தழுவினை வருவானேல்
இகலடு மல்லவிரா வினையவ னெடுமென்றான். 2119

உரு உற்றுள பொருளெல்லாம் முணர்வுற வுரைசெய்தான்
நற்றவ முனியன்றோ விதிதரு நவையென்பான்
இற்றதுசெய லுண்டோ [2]விசையென விடர்கொண்டான்
பெற்றில டவமன்றோ பெருநில மகளென்றான். 2120

உசு துப்புறழ் துவர்வாயிற் றூய்மொழி யவளோடும்
அப்புறு கடன்ஞால மாளுதி கடிதென்னு
ஒப்பரு மகனுன்னை யுயர்வன முறையேகென்
றெப்பரி சுயிருய்ந்தா னென்றுனை யவனென்றான்.

உஎ அல்லலு முளவின்ப மறுகலு முளவன்றோ
நல்லன வுளசெய்யு நவைகளு முளதன்றே
இல்லையோர் [3]பயநாளிங் கிடருறு மிதிலெனுப்
புல்லின னுடனேகொண் டினிதுறை புரைபுக்கான்.

உஅ புக்குறை விடநல்கிப் பூசனை முறைபேணித்
தக்கன கனிகாயு தந்துறை தருமன்பாற்
றெக்கன முறைகூறித் தாயவ னுயிர்போலும்
மக்களி னருளுற்றான் மைந்தனு மகிழ்வுற்றான். 2123

(பிரதி) 1 னழிகண்ணீர். 2 விளியென. 3 பயனுனிங்.

௨௯ வைகின ரினிதன்று ரவ்வழி மறையோனும்
உய்குவ னெடியானு முடனுறை தலினென்பான்
செய்தன வினிதெல்லாஞ் செல்வனை முகமுன்னுக்
கொய்குல மலர்மார்பா கூறுவ துளதென்றான். 2124

௩0 *நிறையு நீர்மலர் நெடுங்கனி கிழங்குகாய் கிடந்த
குறையுந் தீயவை தூயவை குறைவில வெம்மோ
டுறையு மவ்வழி யுயர்தவ முயலுவா னெழுக
இறையு மீதிலா தினியதோ ரிடமரி தின்னும். 2125

௩௧ கங்கை யாளோடு கரியவ ளாறுகள் கலந்த
சங்க மாதலிற் பிரியலன் றுறைச்செங்கண்
அங்க ணாயக வயனுக்த மருள்பெற றீர்த்தம்
எங்கள் போலியர் தரத்ததன் றிருத்திரீண் டென்றான்.

௩௨ பூண்ட மாதவ னவ்வழி விருப்பின்ன் புரித
நீண்ட தன்றிது நிறைபுன லாட்டுந்து [1]நடுவாம்
மாண்ட சிந்தைய [2]விவ்வழி வைகுவ னென்றால்
ஈண்டி யாவரு நெருக்குவ ரென்றன னிராமன். 2127

௩௩ ஆவ துள்ளதே யையகே ளாயிரன் டமைந்த
[3]கூவிடைப் பொழிற் கப்புறம் போனபின் குறுகி
மேவு கானத்தி லேநதி விண்ணினு மினிதாற்
றேவர் கைதொழுஞ் சித்திர கூடமென் றுளதே. 2128

௩௪ என்று காதலி னேயின னடிதொழு திறைஞ்சிக்
கொன்றை வேய்ங்குழற் கோவலர் முல்லையங் குறிஞ்சி
சென்று செங்கதிர்ச் செல்வனு நடுவுறச் சிறுமான்
கன்று நீர்நுகர் கரையுடைக் காளிந்தி கண்டான். 2129

௩௫ ஆறு கண்டன ரகமகிழ்ந் திறைஞ்சின ரறிந்து
நீறு தோய்மணி மேனியர் நெடும்புனல் படிந்தார்
ஊறு மென்கனி கிழங்கிவை யுண்டுநீ ருண்டார்
ஏறி யேகுவ தெங்ஙன மென்றிட விளையோன். 2130

௩௬ வாங்கு வேய்ங்கழை துமித்தனன் மாணையின் கொடியால்
ஓங்கு தெப்பமொன் றமைத்தன னும்பர்தம் பதிபோல்
வீங்கு தோளண்ண றேவியொ டினிதுவீற் றிருப்ப
நீங்கி னானந்த நெடுநதி யிருகையா னிந்தி. 2131

(பிரதி) 1 நெடுநாண். 2 ரிவ்வழி வைகுவரென்றால். 3 கூவுடைப்.

௩௭ ஆலை பாய்வய லயோத்திய ராண்டகைக் கிளையான்
மாலை மால்வரை தோளனு மந்தரந் திரிய
காலை வேலையை யுற்றது கழிந்தநீர் கடிதின்
மேலை வேலையிற் பாய்ந்தது மீண்டநீர் வெள்ளம். 2132

௩௮ அனைய ரப்புனல் கடந்தன ரக்கரை யுற்றார்
புனையும் வற்கலைக் கோலத்தார் நெடுநெறி போனார்
சினையு மூலமும் வேரும்வெந் திருநிலந் தீய்ந்து
நினையு நெஞ்சமுஞ் சுடுவதோர் நெடுநெறி சேர்ந்தார்.

௩௯ நீங்க லாற்றலள் சனகியென் றிராகவ னினைந்தான்
ஓங்கு வெய்யவ னுடுபதி யெனக்கதி ருகுத்தான்
தாங்கு வேங்கடத் துலவைகள் தழைகொண்டு தழைத்த
பாங்கு வெங்கனல் பங்கய வனங்களாய்ப் பரந்த. 2134

௪௦ வறுத்து வித்திய வனையன வல்அயில் பரற்கள்
பறித்து வித்திய மலரெனக் குளிர்ந்தன பசைந்த
[1]இறுத்தெ ரிந்தன வல்லிக ளிளந்தளி ரீன்ற
கறுத்த வாளர வெயிற்றினூ டமுதுகக் களித்த. 2135

௪௧ குழுமி மேகங்கள் குமுறின நறுந்துளி கொணர்ந்த
முழுவில் வேடரு முனிவரின் முனிகில ருயிரைத்
தழுவி நின்றன பசியில பகையில தணிந்த
உழுவை யின்முலை மானிளங் கன்றுக ளுண்ட. 2136

௪௨ கல்லிடைக் கிடந்த கடுவெந் தயர்கின்ற கதழ்பாம்
பல்ல லுற்றில வலைபுனற் கிடந்தன வனைய
வல்லை யுற்றவேய் புற்றொடு மெரிவன மணிவாழ்
புல்லெ யிற்றிளங் கன்னியர் தோளொடும் பொலிந்த.

௪௩ படர்ந்தெ ழுந்தபுற் பசுநிறக் கம்பளம் பரப்பிக்
கிடந்த போன்றன மஞ்ஞையந் தோகைகள் கிளர
மடந்தை மாரென நாடகம் வயின்தொறு நவின்ற
தொடர்ந்து பாணரிற் றூங்கிசை முரன்றன தும்பி.

௪௪ கால மன்றியுங் கனிந்தன கனிநெடுங் கந்த
மூல மன்றியு முளைத்தன நிலனுற முழுதுங்
கோல மங்கைய ரொத்தன வளரிளங் கொம்பர்
சீல மன்றியுஞ் செய்தவம் வேறுமொன் றுளதோ. 2139

(பிரதி) 1 இறுத்த ரக்கென.

சரு எயினர் தங்கிட மிருடிக ளிருப்பிட மேய்ந்த
வயினவ யின்றொறு மணிசிறக் கோபங்கண் மலர்ந்த
பயின்ம ரந்தொறும் பிரிந்தன பேடையைப் பயிலுங்
குயிலி ரங்கின முருந்தினின் றரும்பின குருந்தம். 2140

சசு பந்த ஞாட்புறு பாசறைப் பொருள்வயிற் பருவந்
தந்த கேள்வரை யுயிரெனத் தழுவினர் பிரிந்த
கந்த வோதியர் சிந்தையிற் கொதிப்பதக் கழலோர்
வந்த போதவர் மனமெனக் குளிர்ந்தது வனமே. 2141

சஎ வெளிறு நீங்கிய பாலையின் மெல்லெனப் போனார்
ஒளிறு வான்மதிக் குழவிதன் சூல்வயி றுதைப்பப்
பிளிறு மேகத்தைப் பிடியெனப் பெரும்பணைத் தடக்கை
களிறு நீட்டுமச் சித்திர கூடத்தைக் கண்டார். 2142

அ, வனம்புகு படலம் முற்றும்.

கூ. சித்திரகூடப் படலம்.

க நினையுந் தேவர்க்கு நமக்குமொத் தொருநெறி நின்ற
வனக னங்கண னுயிரம் பேருடை யமலன்
சனகன் மாமட மயிற்கந்தச் சந்தனஞ் செறிந்த
கனக மால்வரை யழகெலாந் தெரிவுறக் காட்டும். 2143

உ வாளும் வேலும்விட் டளாவின வணையகண் மயிலே
தாளி னேலமுந் தமாலமுஞ் சுடர்தருஞ் சாரல்
நீள மாலைய துயில்வன [1]நீண்டரு கமஞ்சூற்
காள மேகமு நாகமுந் தெரிகில காணாய். 2144

ங குருதி வாளெனச் செவ்வரி பரந்தகட் குயிலே
மருவி மால்வரை யும்பரிற் குதிக்கின்ற வருடை
சுருதி [2]போற்றிறளி மரகதக் கொழுஞ்சுடர் சுற்றப்
பருதி வானவன் பசும்பரி நிகர்ப்பன பாராய். 2145

ச வடங்கொள் பூண்முலை மடமயி லேமழை மதமா
அடங்கு பாழ்வயிற் றரவுரி யமைதொறுந் தொடக்கித்
தடங்க டோறுநின் றுடுவ தண்டலை யயோத்தி
நுடங்கு மாளிகைத் துகிற்கொடி நிகர்ப்பன நோக்காய்

(பிரதி) 1 நீண்டக மஞ்சூற். 2 போற்றெளி.

௫ உவரி வாயன்றிப் பாற்கட லுதவிய வமுதே
துவரி னீண்மணிக் கடங்கொடு மிடந்தொறுந் துவன்றிக்
கவரி பாணிற வால்புடை பெயர்வன கடிதிற்
பவள மால்வரை யருவியைப் பொருவின பாராய். 2147

௬ சலந்த லைக்கொண்ட சீயத்தாற் றனிமதக் கதமா
உலந்து வீழ்தலிற் சிந்தின வுதிரத்தின் மடவார்
புலந்த [1]காலையற் றுக்கன குங்குமப் பொதியிற்
கலந்த முத்தென வேழமுத் திமைப்பன காணாய். 2148

௭ நீண்ட மால்வரை மதியுற நெடுமுடி நிவந்த
தூண்டு மாமணிச் சுடர்க்கனற் கற்றையிற் சொருகி
மாண்ட வாளர வழுவியம் மழைவிடைப் பாகன்
காண்ட குஞ்சடைக் கங்கையை நிகர்ப்பன காணாய்.

௮ விடங்கொ ணோக்கிநின் னிடையினை மின்னென வெருவிப்
படங்கொ ணாகங்கள் முழைபுகப் பதைப்பன பாராய்
மடங்கல் வாளரி யெனக்கொண்டு மழையின முழங்கக்
கடங்கொள் கார்மதக் கைம்மலை யிரிவன காணாய். 2150

௯ நெய்கொ ணீருண்டு நெருப்புண்டு [2]நீண்டமை நிறைந்த
வைகொள் வேலெனக் காலனு மஞ்சுறுங் கண்ணாய்
மெய்க ணோகின்ற பிடிகளை விரும்பிய வேழங்
கைக ணோகில தாங்கின நிற்பன காணாய். 2151

௧௦ தொட்ட வார்சுனை சுடரொளி மணியொடுந் தூவி
விட்ட தென்றன விடாமத மழையெழில் வேழம்
வட்ட வெங்கையின் மலரொடுந் ததைந்தன வயங்கும்
பட்டஞ் சுற்றிய வணியவே போல்வன பாராய். 2152

௧௧ இழைந்த நாலிடை மணிக்குடஞ் சுமக்கின்ற வென்னக்
குழைந்த நுண்ணிடை யொசியிள வனமுலைக் கொம்பே
தழைந்த சந்தனச் சோலைகள் செலவினைத் தடுப்ப
நுழைந்து போகின்ற தோங்கின்ற மதியினை நோக்காய்.

௧௨ உருகு காதலிற் றழைகொண்டு மழலைவண் டோச்சி
முருகு நாறுசெந் தேனினை முழைநின்று வாங்கிப்
பெருகு சூலிளம் பிடிக்கொரு பிறைமருப் பியானை
பருக வாயினிற் கையினின் றளிப்பது பாராய். 2154

(பிரதி) 1 காலையி. 2 நீண்டலகை.

௧௩ அளிக்கு நாயகன் மாயையுக் கடங்கின னெனினுங்
களிப்பி லிந்தியத் துயோகியிற் கரக்கிலா ததுபோல்
ஒளித்து நின்றுள ராயினு [1]முருத்தெரிக் கின்ற
பளிக்க றைச்சில பரிபுர மகளிரைப் பாராய். 2155

௧௪ ஆடு கின்றமா மயிலினு மழகிய குயிலே
கூடு [2]கின்றவர் கொடிச்சியர் தம்மனங் கொதிப்ப
ஊடு கின்றனர் கொழுநரை யுருகினர் நோக்கப்
பாடு கின்றன கின்னர மிதுனங்கள் பாராய். 2156

௧௫ வில்லி வாங்கிய சிலையெனப் பொலிநுதல் விளக்கே
வல்லி தாங்கமை தாக்கலின் வழிந்திழி பிரசங்
கொல்லி வாங்கிய குன்றவர் கொடிநெடுங் கவலை
கல்லி வாங்கிய குழிகளை நிறைப்பன காணாய். 2157

௧௬ ஒருவில் [3]பெண்மையென் றுரைக்கின்ற வுடலினுக்குயிரே
மருவு காதலி னினிதுட னுடிய மந்தி
அருவி நீர்கொண்டு வீசத்தா னப்புறத் தேறிக்
கருவி மாமழை யுருப்பதோர் கடுவனைக் காணாய். 2158

௧௭ வீறு பஞ்சினி லமுதநெய் யாடிய விளக்கே
சீறு வெங்கதிர் செறிந்தன பேர்கல திரிய
மாறில் மண்டில நிரம்பிய மாணிக்க மணிக்கற்
பாறை மற்றொரு பரிதியிற் பொலிவன பாராய். 2859

௧௮ சீல மின்னதென் றருந்ததிக் குதவிய திருவே
நீல வண்டினம் படிந்தெழ வளைந்துட னிமிர்ந்த
கோல வேங்கையின் கொம்புகள் பொன்மலர் தூவிக்
காலி னிற்றெழு தெழுவன நிகர்ப்பன காணாய். 2160

௧௯ விற்கொள்வா ணுதல்விளங்கிழையிளந்தளிர்க்கொழுந்தே
எற்கொள் மால்வரை யும்பரி னிரும்புனங் காக்குங்
கொற்கொள் வேற்கணார் குரீஇயினத் தெறிதரக் குறித்த
கற்கள் வானிடை மீனென விழுவன காணாய். 2161

௨0 நான நாண்மலர் நறையகி னுவிதே றுறுஞ்
சோனை வார்குழற் சுமைபொறாத் துடியிடைத் தோகாய்
வான யாறுமீ னலர்ந்தன வெனப்புனல் வறந்த
கான யாறுகள் கதிர்மணி யிமைப்பன காணாய். 2162

(பிரதி) 1 முருத்தெரிகின்ற. 2 கின்றிலர். 3 பெண்மையை யுரைக்கின்ற.

உக வரிகொ [1]ளொண்சிலை வயவர்தங் கணிச்சியின் மறிந்த
பரிய காரகில் சுடர்விமிர் பசுங்கதிர்ப் படலம்
அரிய வேதிய ராகுதிப் புகையொடு மளவிக்
கரிய மால்வரைக் கொழுந்தெனப் படர்வன காணாய்.

உஉ மஞ்ச ளாவிய மாணிக்கப் பாறையின் மறைவ
செஞ்செ வேநெடு மரகதப் பாறையிற் றெரிவ
விஞ்சை நாடியர் கொழுநரோ டூடிய விமலப்
பஞ்ச ளாவிய சீறடிச் சுவடுகள் பாராய். 2164

உங சுழித்த செம்பொனின் றளைபுரை யுந்தியென் றுணையே
கொழித்த மாமணி யருவியோ டிழிவன கோலம்
அழித்து மேவிய வரம்பைய ரறல்புரை கூந்தல்
கழித்து நீக்கிய கற்பக நறுமலர் காணாய். 2165

உச அறைக ழற்சினக் குன்றவ ரகன்புனங் காவற்
பறையெ டுத்தொரு கடுவனின் றடிப்பது பாராய்
பிறையை யெட்டினள் பிடித்ததற் கிதுபிழை யென்னாக்
கறைது டைக்குறுங் கொடிச்சியோர் பேதையைக்காணாய்

உரு அடுத்த பல்பக லன்பரிற் பிரிந்தன ரென்ப
தெடுத்து நந்தமக் கியம்புவ தெனக்கரிந் திருண்ட
தொடுத்த மாதவிச் சூழலிற் சூரர மகளிர்
படுத்து வைகிய பல்லவ சயனங்கள் பாராய். 2167

உசு நினைந்த போதிலு மமுதொக்கு நேரிழாய் நிறைதேன்
வனைந்தவேங்கையிற்கோங்கினில்வயின்கொளத் தொடுத்து
குனிந்த வூசலிற் கொடிச்சிய ரெடுத்தவண் குறிஞ்சி
கனிந்த பாடல்கேட் டசுணமா வருவன காணாய். 2168

உஎ இலவு மிந்திர கோபமும் புரையித ழினியாய்
அலவு நுண்டுளி யருவிநீ ரரம்பைய ராடக்
கலவை சாந்துசெங் குங்குமங் கற்பகங் கொடுத்த
பலவுந் தோய்தலிற் பரிமளங் கமழ்வன பாராய். 2169

உஅ செம்பொ னாற்செய்து குலிகமிட் டெழுதிய செப்போர்
கொம்பு தாங்கிய தெனப்பொலி வனமுலைக் கொடியே
அம்பொன் மால்வரை யலர்கதி ருச்சிசென் றணையப்
பைம்பொன் மாமுடி மிலைச்சிய தொப்பது பாராய்.

(பிரதி) 1 ணோன்.

௨௯ மடந்தை மார்களிற் றிலதமே மணிநிறத் [1]திணிகல்
தொடர்ந்த பாறையின் வேயினஞ் சொரிமணி முத்தம்
இடந்தொ றுங்கிடந் திமைப்பன வெரிகதிர்ச் செக்கர்
படர்ந்த வானிடைத் தாரகை புரைவன பாராய். 2171

௩0 குழுவி நுண்டுளை வேயினுங் குறிநரம் பெறிவுற்
றெழுது தண்டமிழ் யாழினு மினியசொற் கிளியே
முழுவ தும்மலர் விரிந்தநாள் முருக்கிடை மிடைந்த
பழுவம் வெங்கனல் கதுவிய தொப்பன பாராய். 2172

௩௧ வளைகள் காந்தளிற் பெய்தன வனையநை மயிலே
துளைக டாழ்தடக் கைநெடுந் துருத்தியிற் றூக்கி
அளவின் மூப்பின ரருந்தவர்க் கருவிநீர் கொணர்ந்து
களப மால்கரி குண்டிகைச் சொரிவன காணாய். 2173

௩௨ வடுவின் [2]மாவகி ரிவையெனப் பொலிந்தகண் மயிலே
இடுகு கண்ணின ரிடருறு மூப்பின ரேக
நெடுகு கூலவா னீட்டின வுருகுறு நெஞ்சக்
கடுவன் மாதவர்க் கருநெறி காட்டுவ காணாய். 2174

௩௩ அலம்பு வார்குழ லாய்மயிற் பெண்ணருங் கலமே
நலம்பெய் வேதியர் மார்பினுக் கிசைவன நாடிச்
சிலம்பி பஞ்சினூல் சிக்குறத் திரித்தன தேமாப்
பலம்பெய் மந்தியோ டுடன்வந்து கொடுப்பன பாராய்.

௩௪ தெரிவை மார்க்கொரு கட்டளை யெனச்செய்த திருவே
பெரிய [3]மாக்கனி பலாக்களின் வாழையங் கனியோ
டரிய மாக்கனி கடுவன்கள் கடிதுகொண் டளிப்பக்
கரிய மாக்கிழங் ககழ்ந்தவர்க் கொணர்ந்தன காணாய்.

௩௫ ஐவ னக்குர லேனலின் கதிரிறுங் [4]கவரை
மெய்வ ணக்குறும் வே[illegible]யின் றளித்தமெல் லரிசி
பொய்வ ணக்கிய மாதவர் புரைதொறும் புகுந்துன்
கைவ ணத்தவாய்க் கிள்ளைதந் தளிர்ப்பன காணாய். 2177

௩௬ இடிகொள் வேழத்தை யெயிற்றெருடுமெடுத்தனவிழுங்கும்
கடிய மாசுணங் [5]கற்றறிந் தவரென வடங்கிச்
சடைகொள் சென்னியர் தாழ்விலா தவர்மிதித் தேறப்
படிக டாமெனத் தாழ்வரைக் கிடப்பன பாராய். 2178

(பிரதி) 1 திணிதல். 2 மாவடு வகிரெனப். 3 மாக்களி பிறங்கிய.
4 கவையவரை. 5 கற்றிறந்.

௩௭ பாந்த டேரிவை [1]பழிபடப் பரந்தபே ரல்குல்
ஏந்து நூன்மணி மார்பினா ராகுதிக் [2]கிசைய
கூந்தன் மென்மயில் குறுகின நெடுஞ்சிறை கோழிக்
காந்து குண்டத்தி லடங்கெரி யெழுப்புவ காணாய்.

௩௮ அசும்பு பாய்வரை யருந்தவ முடித்தவ ரணையத்
தசும்பு வேய்ந்தென வொத்தவர் தமக்குவிண் டருவான்
விசும்பு தூர்ப்பன வாமென வெயிலென வீங்கும்
பசும்பொன் மானங்கள் போவன வருவன பாராய் 2180

௩௯ இனைய யாவையு மேந்திழைக் கியம்பினன் காட்டி
அனைய மால்வரை யருந்தவ ரெதிர்வர வணங்கி
வினையி னீங்கிய வேதியர் விருந்தின னானான்
மனையின் மெய்யினு மாதவம் புரிந்தவன் மைந்தன்.

௪0 *மாவிய லுதயமாந் [3]துளசி வானவன்
ஏவிய பகையினு ளவுணர் வீய்ந்துக
காவியல் குடவரைக் கால நேமிமேல்
ஏவிய திகிரியி னிரவி யேகினான். 2182

௪௧ சக்கரந் தானவ னுடலிற் றுக்குற
வெக்கிய குருதியிற் பரந்த தெங்கணுஞ்
செக்கரத் தியவன் வாயிற் றீர்ந்துவே
றுக்கவான் றனிமெயி ரொத்த திந்துவே. 2183

௪௨ ஆனன மகளிருக் களித்த தாமரைப்
பூநனி முகிழ்த்தென வலரி போனபின்
மீனென விளங்கின வெள்ளி யாம்பல்வீ
வானெனு மணித்தட மலர்ந்த தெங்குமே. 2184

௪௩ மந்தியுங் கடுவனு மரங்க ளேறின
தந்தியும் பிடிகளுந் தடங்க ளேறின
நிந்தையில் சகுந்தமும் [4]நீள நோக்கின
அந்தியை நோக்கின னறிவை நோக்கினான். 2185

௪௪ மொய்கிளர் நறுமலர் முகிழ்த்த வாஞ்சில
மையறு நறுமலர் மலர்ந்த வாஞ்சில
[5]ஐயனோ டிளவற்கு மமுதன் னாளுக்குங்
கைகளுங் கண்களுங் கமலம் போன்றவே. 2186

(பிரதி) 1 வழிபடப் படர்ந்தபே. 2 கியைந்த. 3 துளதி. 4 நீட்டு.
5 ஐயனு மிளவலு.

சரு மாலைவந் தகன்றபின் மருங்கி லாளொடும்
வேலைவந் துறைவிட மேய தாமெனக்
கோலைவந் துமிழ்சிலைத் தம்பி கோலிய
சாலைவந் தெய்தினன் றவத்தி [1]னெய்தினன். 2187

சசு நெடுங்கழைக் குறந்துணி நிரலி மேனிரைத்
தொடுங்கலி னெடுமுக டொழுக்கி யூழுற
இடுங்கலில் கைவிரித் தெற்றி யெங்கணும்
முடங்கலில் [2]வரிச்சுமேல் விரித்து மூட்டியே. 2188

சஎ தேக்கடைப் படலையிற் செறிவு செய்துபின்
பூக்கிளர் நாணலின் புல்லு மேய்ந்துகீழ்த்
தூக்கிய வேய்களிற் சுவரின் சுற்றுறப்
போக்கிமண் ணெறிந்தவை புனலிற் றீற்றியே. 2189

சஅ வேறிடம் வீரற்கு மிதிலை நாடிக்குங்
கூறிய முறைநெறி குயிற்றிக் குங்குமச்
சேறுகொண் டழுகுறத் திருத்தித் திண்சுவர்
ஆறிடு மணியொடு கனக மப்பியே. 2190

சகூ மயிலுடைப் பீலியின் விதான மேல்வகுத்
தயிலுடைச் சுரிகையா லருகு தூக்கறுத்
தெயிலிளங் கழைகளா லியற்றி யாறிடு
புயலுடைப் பொழின்மலர் பூவுஞ் சிந்தியே. 2191

ருo இன்னண மிளையவ னிழைத்த சாலையிற்
பொன்னிறத் திருவொடுங் குடிபுக் கானரோ
நன்னெடுந் திசைமுக னகத்து நம்மனோர்க்
குன்னரு முயிருளு மொத்து வைகுவான். 2192

ருக *மாய நீங்கிய சிந்தனை மாமறை
தூய பாற்கடல் வைகுந்தஞ் சொல்லலாம்
ஆய சாலை யரும்பெற [3]லன்பினன்
நேய நெஞ்சின் விரும்பி நிரம்பினன். 2193

ருஉ மேவு கான மிதிலையர் கோமகள்
பூவின் மெல்லிய பாதமும் பொங்தன
தாவி லெம்பிகை சாலை சமைத்தன
யாவை யாதுமி லார்க்கிசை யாதவே. 2194

(பிரதி) 1 மேயினன். 2 வரித்துமேல். 3 லன்பினன்.

௫௩ என்று சிந்தித் திளையவற் பார்த்திரு
[1]குன்று போலக் குலவிய தோளினாய்
என்று கற்றனை நீயிது போலெனாத்
துன்று தாமரைக் கண்பனி சோர்கின்றான். 2195

௫௪ அடருஞ் செல்வத்த னெந்தைத னாணையாற்
படரு நல்லறம் பாலித் திரவியிற்
சுடரு மெய்ப்புகழ் சூடின னென்பதென்
இடரு னக்கிழைத் தேனெடு நாளென்றான். 2196

௫௫ அந்த வாய்மொழி யைய னியம்பலும்
நொந்த சிந்தை யிளையவ னோக்கினான்
எந்தை காண்டி யிடரினுக் கங்குரம்
முந்தி வந்து முளைத்ததன் றேவென்றான். 2197

௫௬ ஆக செய்தக்க தில்லை யறத்தினின்
றேக லென்ப தரிதென்று மெண்ணினான்
ஓகை [2]கண்டில னுன்னிடர் நோக்கியென்
சோக பந்தந் தொடர்வரி தாலென்றான். 2198

௫௭ பின்னுந் தம்பியை நோக்கிப் பெரியவன்
மன்னுஞ் [3]செல்வத்திற் குண்டுவ ரம்பிதற்
கென்ன கேடுண்டிவ் வெல்லையி லின்பத்தை
உன்னு மேல்வரு மூதியத் தோடெனா. 2199

௫௮ தேற்றித் தம்பியைத் தேவருங் கைதொழ
நோற்றி ருந்தன னோன்சிலை யோனிப்பால்
[4]ஆற்றன் மாதவ னாணையிற் போனவர்
கூற்றி னுற்றது கூறலுற் றாமரோ. 2200

௯. சித்திரகூடப் படலம் முற்றும்.

(பிரதி) 1 குன்றம். 2 கொண்டவ னுள்ளிடர் நோக்கினான். 3 செல்வத்துக். 4 ஆற்றி.

௰. பள்ளிபடைப் படலம்.

௧ பொருவி றூதுவர் போயினர் பொய்யிலார்
இரவு நன்பக லுங்கடி தேகினார்
பரதன் கோயிலுற் றார்படி காரரெம்
வரவு சொல்லுமின் மன்னவற் [1]கேயென்றார். 2201

௨ தூதர் வந்தன ருந்தைசொல் லோடெனக்
காதல் மூந்திக் களிக்கின்ற சிந்தையான்
போது கென்னெனப் புக்கனர் கைதொழுத்
தீதி லன்கொ றிருமுடி யானென்றான். 2202

௩ வலிய னென்றவர் கூற மகிழ்ந்தனன்
இலைகொள் பூணிளங் கோனெம் பிரானொடும்
உலைவில் செல்வத்த னோவென வுண்டெனத்
தலையி லேந்தினன் றாழ்தடக் கைகளே. 2203

௪ மற்றுஞ் சுற்றத்து ளார்க்கும் வரன்முறை
உற்ற தன்மை வினவி யுவந்தனன்
இற்ற தாகு மெழுதரு மேனியாய்
கொற்ற மன்னன் றிருமுகங் கொள்கென்றார். 2204

௫ என்று கூறலு மேத்தி யிறைஞ்சினான்
பொன்றி ணிந்த பொருவி றடக்கையான்
நின்று வாங்கி யுருகிய நெஞ்சினன்
துன்று தார்மலர்ச் சென்னியிற் சூடினான். 2205

௬ சூடிச் சாதனந் தோலுடைச் சுற்றுமண்
மூடல் தோட்டி முடங்க ணிமிர்த்தனன்
ஈடு நோக்கிவந் தெய்திய தூதர்க்குக்
கோடி மேனிதி யங்கொடுத் தானரோ. 2206

௭ வாணி லாநகை தோன்ற மயிர்ப்புறம்
பூண வானுயர் காதலிற் பொங்கினன்
றாணி லாமலர் தூவினன் றம்முனைக்
காண லாமெனு மாசை கடாவவே. 2207

௮ எழுக சேனையென் றேவின [2]னெய்தினான்
தொழுது கைகயர் கோமகன் சொல்லொடுந்
தழுவு தேரிடைத் தம்பியோ டேறினான்
பொழுது நாளுங் குறித்திலன் [3]போயினான். 2208

(பிரதி) 1 கென்கின்றார். 2 னெய்தினன். 3 போகின்றான்.

௯ ஆனை சுற்றின தேரிரைத் தீண்டின
மான வேந்தர் குழுமினர் வாளுடைத்
தானை சூழ்ந்தன சங்க முரன்றன
மீன வேலையின் விம்மின பேரியே. 2209

௧௦ கொடி நெருங்கின தொங்கல் குழீஇயின
வடிநெ டுங்கண் மடந்தைய ரூர்மடப்
பிடிது வன்றின பூணொளி போர்ந்தன
இடிது டங்கிய மின்னென வெங்குமே. 2210

௧௧ பண்டி யெங்கும் பரந்தன பல்லியங்
கொண்டி யம்பின கொண்டலிற் கோதையில்
வண்டி யம்பின வாளியில் வாவுறுஞ்
செண்டி யங்கு பரியுஞ் செறிந்தவே. 2211

௧௨ துளை [1]முகத்திற் சுருதி விளம்பின
இளைமு கத்தினி தும்பரி னேவிடில்
விளைமு கத்தன வேலையின் மீதுசெல்
வளைமு [2]கத்தனல் வாசியும் வந்தவே. 2212

௧௩ வில்லின் வேதியர் வாள்செறி வித்தகர்
மல்லின் மல்லர் சுரிகையின் வல்லவர்
கொல்லும் வேல்குந்தங் கற்றுயர் கொற்றவர்
தொல்லை வாரணப் பாகருந் துன்னினர். 2213

௧௪ எறிப கட்டின மாடுக ளேற்றினர்
குறிகொள் கோழி சிவல்குறும் பூழ்நெடும்
பொறிம யிர்க்கவு தாரிகள் போற்றறு
நெறியின் மாக்களு முந்தி நெருங்கினர். 2214

௧௫ நிறைந்த மாந்தர் நெருங்கினர் நெஞ்சினிற்
பறந்து போதுங்கொ லென்று பதைக்கின்றார்
பிறந்த தேவ ருணர்ந்து பெயர்ந்துபோய்
உறைந்த வானுறு வார்களை யொக்கின்றார். 2215

௧௬ ஊன [3]ளைந்த வுடற்குயி ராமென
தான ளந்து தழுவின தண்ணுமை
தேன ளந்து செவியுற வார்த்தென
வான ளந்தது மாகதர் பாடலே. 2216

(பிரதி) 1 நுகத்திற் றுருதம் விளக்கின, நுகத்திற்றுருதி விளக்கின.
2 கத்தன. 3 ளந்த.

க௭ ஊறு கொண்ட முரசிமி ழோதையின்
வீறு கொண்டன வேதியர் வாழ்த்தொலி
ஏறு கொண்டெழு மல்ல ரிடிப்பினை
மாறு [1]கொண்டன வந்திக ரேத்தரோ. 2217

க௮ ஆறுங் கானு மகன்மலை யுங்கடந்
தேறி யேழ்பக லீந்திப்பி னெந்திரத்
தூறு பாகு மடையுடைத் தொண்டூளை
நாறு பாய்நெடுங் கோசல நண்ணினான். 2218

க௯ ஏர்து றந்த வயலிள மைந்தர்தோள்
தார்து றந்தன தண்டலை நெல்லினும்
நீர்து றந்தன தாமரை நீத்தெனப்
பார்து றந்தனள் பங்கயச் செல்வியே. 2219

உ0 பிதிர்ந்து சாறு பெருந்துறை மண்டிடச்
சிதர்ந்து சிந்தி யழிந்தன தேங்கனி
முதிர்ந்து கொய்குன ரின்மையின் மூக்கவிழ்ந்
துதிர்ந்து லர்ந்தன வொண்மல ரீட்டமே. 2220

உக ஏய்ந்த கால மிதுவிதற் காமென
வாய்ந்த மள்ள ரரிகுன ரின்மையாற்
பாய்ந்த சூதப் பசுநறுந் தேறலாற்
சாய்ந்தொ சிந்து முளைத்தன சாலியே. 2221

உஉ எட்கு லாமல ரேசிய நாசியர்
புட்கு லாவயற் பூசற் கடைசியர்
கட்கி லார்களை காதற் கொழுநரோ
டுட்க லாமுடை யாரி னுயங்கினார். 2222

உங அலர்ந்த பைங்கூ ழுகன்குளக் கீழ்மடை
மலர்ந்த வாயிற் புனல்வழங் காமையால்
உலர்ந்த வன்க ணுலோபர் கடைத்தலை
புலர்ந்து நிற்கும் பரிசிலர் போலவே. 2223

உச ஓது கின்றில கிள்ளையு மோதியர்
தூது சென்றிலர் வந்திலர் தோழர்பான்
மோது கின்றில பேரி முழாவிழாப்
போது கின்றில பொன்னணி வீதியே. 2224

(பிரதி) 1 கொண்டென.

உரு பாட னீத்தன வண்டொடு பாண்குழல்
ஆட னீத்த வரங்கொ டகன்புனல்
சூட [1]னீத்தன சூடிகை சூளிகை
மாட னீத்தன மங்கல வள்ளையே. 2225

உசு நகையி ழந்தன வாண்முக நாறகிற்
புகையி ழந்தன மாளிகை பொங்கழற்
சிகையி ழந்தன தீவிகை தேமலர்த்
தொகையி ழந்தன தோகைய ரோதியே. 2226

உஎ நாவி [2]னீத்தரு நல்வளந் துன்னிய
பூவி [3]னீத்தன நாடு பொலிவொரீஇத்
தேவு நீத்தன சேணெறி [4]தாவிட
வாவி நீத்த வுடலென லாயதே. 2227

உஅ என்ற நாட்டினை நோக்கி யிடருழந்
தொன்று முற்ற துணர்ந்தில னுன்னுவான்
சென்று கேட்பதொர் தீங்குள வாமென
நின்று நின்று நெடிதுயிர்த் தானரோ. 2228

உகூ மீண்டு மேகியம் மெய்யெனு நல்லணி
பூண்ட வேந்தன் றிருமகன் புந்திதான்
தூண்டு தேரினு முந்துறத் [5]தூண்டுவான்
நீண்ட வாயி னெடுநகர் நோக்கினான். 2229

ஙo அண்ட முற்றுந் திரிந்தயர்ந் தாயமிர்
துண்டு போதியென் றொண்கதிர்ச் செல்வனை
விண்டொ டர்ந்து விலக்குவ போல்வன
கண்டி லன்கொடி யின்னெடுங் கானமே: 2230

ஙக ஈட்டு நன்புகழ்க் கிட்டிய யாவையும்
வேட்ட வேட்டவர் கொண்பின் விரைந்தெனக்
கோட்டி மாக்களைக் கூவுவ போல்வன
கேட்டி லன்முர சின்கிளை ரோதையே. 2231

ஙஉ கள்ளை மாக்கவர் கண்ணியன் கண்டிலன்
பிள்ளை மாக்களி றம்பிடி யீட்டமும்
வள்ளன் மாக்க ணிதியும் வயிரியர்
கொள்ளை மாக்களிற் கொண்டன ரேகவே. 2232

(பிரதி) 1 நீத்தன. 2 நீத்தரு. 3. நீத்தன, 4 தாவிடா,
5 தூங்குவான்,

௩௩ காவன் மன்னவன் கான்முளை கண்டிலன்
ஆவு மாவு மழிகவுள் வேழமும்
மேவு காத [1]னிதியின் வெறுக்கையும்
பூவின் வானவர் கொண்டனர் போகவே. 2233

௩௪ சூழ [2]மைந்த சுரும்பு நரம்புந்தம்
ஏழ மைந்த விசையிசை யாமையால்
மாழை யொண்கண் மயினெடுஞ் சாயலார்
கூழை போன்ற பொருநர் குழாங்களே. 2234

௩௫ தேரு மாவுங் களிறுஞ் சிவிகையும்
ஊரும் பண்டியு மூருந ரின்மையால்
யாரு மின்றி யெழிலழி வீதிகள்
வாரி யின்றிய வாலுக வாற்றினே. 2235

௩௬ அன்ன தன்மை யகனகர் நோக்கித்தன்
பின்னி ளைப்பெரி யோர்க்குப் பெருந்தகை
மன்னன் வைகும் வளநகர் போலுமி
தென்ன தன்மை யிளையவ னேயென்றான். 2236

௩௭ வேற்ற டங்கல ரூரென மெல்விதாற்
சூற்ற டங்கருங் கார்புரை தோற்றத்தான்
சேற்ற டங்கட் டிருவொடு நீங்கிய
பாற்ற டங்கட லொத்தது பாரென்றான். 2237

௩௮ குருமணிப்பூ ணரசிளங் கோளரி
இருகை கூப்பி யிறைஞ்சின னெய்திய
தொருவ னைத்தன் றுறுதுய ரூழிவாழ்
திருந கர்த்திரு தீர்ந்தன ளாமென்றான். 2238

௩௯ அனைய வேலையி லச்சுடைத் தேரணி
மனையி னீணெடு மங்கல வாயிலை
நினையு மாத்திரத் தெய்தலு நேமியான்
றனைய னுந்தந்தை சார்விட மெய்தினான். 2239

௪௦ விருப்பி னெய்தினன் வெந்திறல் வேந்தனை
இருப்பு நல்லிட மெங்கணுங் கண்டிலன்
அருப்ப மன்றிதென் றையுற வெய்தினான்
பொருப்பு நாண வுயர்ந்த பொற்றோளினான். 2240

(பிரதி) 1 னிதியும். 2 மைந்தர்.

௪௧ ஆய காலையி லையனைத் தந்தவத்
தூய தாயைத் தொழுதுறு வான்றனைக்
கூய வன்னை குறுகுதி ரென்றொரு
வேய்கொ டோளி தொழுது விளம்பினாள். 2241

௪௨ வந்து தாயை யடியில் வணங்கலுஞ்
சிந்தை யாரத் தழுவின டிதிலர்
எந்தை யன்னைய ரெங்கைய ரென்றனள்
அந்த மில்குணத் தானும தாமென்றான். 2242

௪௩ *மூண்டெழு காதலான் முளரித் தாடொழ
வேண்டின னெய்தின னுள்ளம் விம்முமால்
ஆண்டகை நெடுமுடி யரசர் கோமகன்
யாண்டையான் பணித்திரென் றிருகை கூப்பினான்.

௪௪ ஆனவ னுரைசெய வழிவில் சிந்தையாள்
தானவர் வலிகெட நிமிர்ந்த தானையத்
தேனமர் தெரியலான் றேவர் கைதொழ
வானக மெய்தினன் வருந்த னீயென்றான். 2244

௪௫ எறிந்தன கடியசொல் செவியி னெய்தலும்
நெறிந்தலர் குஞ்சியா னெடிது வீழ்ந்தனன்
அறிந்தில னுயிர்த்தில னசனி யேற்றினான்
மறிந்துயர் மராமர மண்ணுற் றென்னவே. 2245

௪௬ வாயொளி மழுங்கத்தன் மலர்ந்த தாமரை
ஆய்மலர் நயனங்க ளருவி சோர்தரத்
தீயெரி செவியில்வைத் தனைய தீயசொல்
நீயல துரைசெய நினைப்ப ரோவென்றான். 2246

௪௭ எழுந்தன னேங்கின னிரங்கிப் பின்னரும்
விழுந்தனன் விம்மினன் வெய்து யிர்த்தனன்
அழிந்தன னரற்றின னாற்றி யின்னன
மொழிந்தனன் பின்னரு முருகற் செல்வியான். 2247

௪௮ அறந்தனை வேரறுத் தருளைக் கொன்றயற்
சிறந்தநின் றண்ணளித் திருவைத் தேசழித்
திறந்தனை யாமெனி னிறைவ நீதியை
மறந்தனை யுனக்கிதின் மாசு வேண்டுமோ. 2248

சசு சினக்குறும் பெறிந்தெழு காமத் தீயவித்
தினக்குறும் பியாவையு மெற்றி யாவர்க்கும்
மனக்குறு நெறிசெலும் வள்ளி யோய்மனந்
தனக்குறு நெறிசெலத் தவத்தின் பாலதோ. 2249

ருo முதலவன் முதலிய முந்தை யோர்பழங்
கதையையும் புதுக்கிய தலைவன் கண்ணுடை
நுதலவன் சிலைவலி நோன்மை நூறிய
புதல்வனை யெங்ஙனம் பிரிந்து போயினாய். 2250

ருக செவ்வழி யுருட்டிய திகிரி மன்னவ
எவ்வழி மன்னரு மிரவ லாளரும்
இவ்வழி யுலகினி லினிய நண்பினோர்
அவ்வழி யுலகினு முளர்கொ லோவய்யா. 2251

ருஉ பற்பக னிழற்றுநின் கவிகைப் பானிழல்
நிற்பன பல்லுயி ருணங்க நீநெடுங்
கற்பக நறுநிழல் காத லித்தியோ
மற்பக மலர்ந்ததோண் மன்னர் மன்னனே. 2252

ருங இம்பர்நின் றேகினை யிருக்குஞ் சார்பிழந்
தும்பர்வந் துன்கழ லொதுங்கி னார்களோ
சம்பர னனையவத் தானைத் தானவர்
அம்பரத் தின்னமு முளர்கொ லோவையா. 2253

ருச இயங்கெழு தானைய ரிறுத்த மாத்திறை
உயங்கலின் மறையவர்க் குதவி யும்பரின்
அயங்கெழு வேள்வியோ டமரர்க் காக்கிய
வயங்கெரி வளர்க்கலை வைக வல்லையோ. 2254

ருரு ஏழுயர் மதகளிற் றிறைவ வேகினை
வாழியாய் கரியவன் வறியன் கையெனப்
பாழியம் புயத்துநின் பணியு நீங்கலா
ஆழியை யினியவற் களிக்க வெண்ணியோ. 2255

ருசு பற்றிலை தவத்தினிற் பயந்த மைந்தற்கு
முற்றுல களித்துநீ முறையி [1]னெய்திய
[2]கொற்றவன் முடிமணக் கோலங் காணவும்
பெற்றிலை போலுநின் பெரிய கண்களால். 2256

(பிரதி) 1 னேகிய. 2 கொற்றநன்.

௫௭ [1]ஆற்றில னின்னன பன்னி யாவலித்
தூற்றுறு கண்ணின னுருகு வான்றனைத்
தேற்றின னொருவழி சிறிது தேறிய
கூற்றுறழ் வரிசிலைக் குரிசில் கூறுவான். 2257

௫௮ எந்தையு மாயுமெம் பிரானு மெம்முனும்
அந்தமில் பெருங்குணத் திராம னாதலால்
வந்தனை யவன்கழல் வைத்த போதலாற்
சிந்தைவெங் கடுந்துயர் தீர்க லாதென்றான். 2258

௫௯ அவ்வுரை கேட்டலு மசனி யேறன்ன
வெவ்வுரை வல்லவண் மீட்டுங் கூறுவாள்
தெவ்வடு சிலையினாய் தேவி தம்பியென்
றிவ்வவ ரொடுநெடுங் கானத் [2]தானென்றாள். 2259

௬0 வனத்தின னென்றவ ளிசைத்த மாற்றத்தை
நினைத்தன னிருந்தன னெருப்புண் டானென
வினைத்திற மியாதினி விளைவ தின்னமும்
எனைத்துள கேட்பன துன்பம் யாதென்றான். 2260

௬௧ [3]ஏங்கினன் விம்மலோ டிருந்த வேந்தலப்
பூங்கழற் காவலன் வனத்துப் போயது
தீங்கிழைத் ததனிலோ தெய்வஞ் சீறியோ
ஓங்கிய விதியினோ யாதி னோவென. 2261

௬௨ தீயன விராமனே செய்யு [4]மேலவை
தாய்செய லல்லவோ தலத்து ளோர்க்கெல்லாம்
போயது தாதைவிண் புக்க பின்னரோ
ஆயதன் முன்னரோ வருளு வீரென்றான். 2262

௬௩ குருக்களை யிகழ்தலி னன்று கூறிய
செருக்கினா லன்றொரு தெய்வத் தாலுமன்
றருக்கனே யனையநம் மரசர் கோமகன்
இருக்கவே வனத்தினி னேகினா னென்றாள். 2263

௬௪ குற்றமொன் றில்லையேற் கொதித்து வேறுளோர்
செற்றது மில்லையே றெய்வத் தாலன்றேற்
பெற்றவ னிருக்கவே பிரிந்து கான்புக
உற்றதென் றெரிதர வுரைசெய் வீரென்றான். 2264

(பிரதி) 1 ஆற்றலன். 2 தெய்தினான். 3 ஏங்கின 4 மேலது.

சுரு வாக்கினால் வரந்தரக் கொண்டு மைந்தனைப்
போக்கினேன் வனத்திடைப் போக்கிப் பாருனைக்
காக்கினே னவனது பொறுக்க லாமையால்
நீக்கினான் றன்னுயிர் நேமி வேந்தென்றாள். 2265

சுசு சூடிய மலர்க்கரஞ் சொல்லின் முன்செவி
கூடின புருவங்கள் குனித்துக் கூத்துநின்
றாடின வுயிர்ப்புடை யழற்கொ ழுந்துகள்
ஓடின வுமிழ்ந்தன வுதிரங் கண்களே. 2266

சுஎ துடித்தன கபோலங்கள் சுற்றுந் தீச்சுடர்
பொடித்தன மயிர்த்தொளை புகையும் போர்த்தது
மடித்தது வாய்நெடுந் தடக்கை [1]மண்பக
அடித்தன வொன்றொடொன் றசனி யஞ்சவே. 2267

சுஅ பாதங்கள் பெயர்தொறும் பாரு மேருவும்
பூதங்கொள் கடலெனப் பொருவில் கூம்பொடு
மாதங்கம் வருகல மறுகிக் கால்பொர
ஓதங்கொள் கடலினின் றலைவ போன்றவே 2268

சுகூ [2]அஞ்சினர் வானவ ரவுண ரச்சத்தாற்
றுஞ்சின [3]ரெனைப்பல சொரி மதத்தொளை
எஞ்சின [4]திசைக்கரி யிரவி மீண்டனன்
வெஞ்சினக் கூற்றுந்தன் விழிபு தைத்ததே. 2269

எ0 கொடியவெங் கோபத்தாற் கொதித்த கோளரி
கடியவ டாயெனக் கருது கின்றிலன்
நெடியவன் முனியுமென் றஞ்சி நின்றனன்
இடியுரு மனையவெம் மொழி யியம்புவான். 2270

எக மாண்டன னெந்தையென் றம்முன் மாதவம்
பூண்டன னின்கொடும் புணர்ப்பி னாலென்றாற்
கீண்டிலென் வாயிது கேட்டு நின்றயான்
ஆண்டன னுமன்றோ வரசை யாசையால். 2271

எஉ தீயின மிருந்தனை யானு நின்றனன்
ஏயெனு மாத்திரத் தெற்று கின்றிலன்
ஆயவன் முனியுமென் றஞ்சி னேனலாற்
றாயெனும் பொருளெனைத் தடுக்கப் பாலதோ. 2272

(பிரதி) 1 மண்புக. 2 அஞ்சலின். 3 ரெனைப்பலர். 4 திசைகளி னிரவி மீண்டன.

எ௩ சுழியுடைத் தாயுடைக் கொடிய சூழ்ச்சியால்
வழியுடைத் தாய்வரு மரபை மாய்த்தொரு
பழியுடைத் தாக்கினன் பரதன் பண்டெனும்
மொழியுடைத் தாதலின் முறைமை வேண்டுமோ. 2273

எ௪ மாளவு முளனொரு மன்னன் வன்சொலான்
மீளவு முளனொரு வீரன் வெய்யபார்
ஆளவு முளனொரு பரத னுயினுற்
கோளல தறநெறி குறையுண் டாகுமோ. 2274

எ௫ †எவ்வர விதுவென விருத்திர் கற்பெனும்
அவ்வரம் பழித்துமை யகத்து ளேவைதத
வெவ்வரம் பொருதவே லரசை வேரறுத்
திவ்வரம் கொண்டநீ ரினியென் கொள்திரோ. 2275

எ௬ *நோயீ ரல்லீர் நுங்கண வன்றன் னுயிருண்டீர்
பேயீ ரல்லீ ரின்ன மிருக்கப் பெறுவீரே
மாயீர் மாயா வன்பழி தந்தீர் முலைதந்தீர்
தாயீ ரேநீ ரின்ன மெனக்கென் றருவீரே. 2276

எஎ ஒன்றும் பொய்யா மன்னனை வாயா லுயிரோடுந்
தின்றுந் தீரா வன்பழி கொண்டீர் திருவெய்தி
என்றுந் நீரே வாழ வுகந்தீ ரவனேகக்
கன்றுந் தாயும் போல்வன கண்டுங் கழியீரோ. 2277

எஅ இறந்தான் றந்தை யெந்தை வரத்துக் கிழிவென்னு
அறந்தா னீதென் றன்னவன் மைந்த னரசெல்லாந்
துறந்தான் றுயார் சூழ்ச்சியின் ஞால [1]மவனோடே
பிறந்தா னுண்டா னென்னுமி தென்றுற் பெறலாமால்.

எ௯ மாளு மென்றே தந்தையை யுன்னுன் வதைகொண்டான்
கோளு மென்னு லேயெனல் கொண்டா னதுவன்றேல்
மீளு மின்றே யென்னையு மெய்யே யுலகெல்லாம்
ஆளு மென்றே போயின னன்றோ வரசாள்வான். 2279

அ0 ஓதா நின்ற திண்குண நன்னா லுணர்வப்பால்
ஏதே னுந்தா னாகவெ னக்கே பழிசெய்வான்
தீதாய் நின்ற சிந்தனை செய்தா னவனென்னப்
போதா தோவென் றுயிவள் கொண்ட பொருளம்மா.

(பிரதி) 1 மவரோடே,

அக உய்யா நின்றே னின்னமு மென்முன் னுடன்வந்தோன்
கையார் கல்லைப் புல்லட குண்ணக் கலமேற்றி
ஐயோ நானின் சாலியின் வெண்சோ றமுதென்ன
நெய்யோ டுண்ணா நின்றது நின்றார் நினையாரோ. 2281

அஉ வில்லார் தோளான் மேவினன் வெங்கா னகமென்ன
நல்லா னையன் றுஞ்சின னஞ்சே யனையாளைக்
கொல்லேன் மாயேன் வன்பழி யாலே குறைவற்றேன்
அல்லே னோநா னன்புடை யார்போ லழுகின்றேன்.

அங பாரோர் கொள்ளார் யானுயிர் பேணிப் பழிபூணேன்
தீரா தொன்றோ நின்பழி யூரீற் றிருநில்லாள்
ஆரோ டெண்ணிற் றாருரை கொண்டா யறமெல்லாம்
வேரோ டுங்கே டாக முடித்தென் வினைவித்தாய். 2283

அச கொன்றே னானென் றாதையை மற்றுன் கொலைவாயால்
ஒன்றோ கானத் தண்ணலை யுய்த்தே யுலகாள்வான்
நின்றே னென்றா னின்பிழை யுண்டோ பழியுண்டோ
என்றே னாந்தா னென்பழி மாயு மிடமுண்டோ. 2284

அரு கண்ணா லேயென் செய்வினை யின்னஞ் சிலர்காண்பார்
விண்ணோர்மண்ணோர் கொள்ளலர் வீணேபழிபூண்டாய்
உண்ணா நஞ்சங் கோறல தென்னா முரையுண்டென்
றெண்ணா நின்றே னன்றி [1]யிரேனென் னுயிரோடே.

அகூ ஏன்றுன் பாவிக் கும்பி வயிற்றி னிடைவைகித்
தோன்றுந் தீராப் பாதக முற்றென் றுயர்தீரச்
சான்றுந் தானே நல்லற மாகத் தகைஞாலம்
மூன்றுங் காண மாதவ னானே முயல்கின்றேன். 2286
சிறந்தார்சொல்லுநல்லுரைசொன்னேன்செயலெல்லாம்

அஎ மறந்தாய் செய்தா யாகுதி மாயா வுயிர்தன்னைத்
துறந்தா யாயிற் றாயையு மாயை யுலகத்தே
பிறந்தா யாவை [2]யீதில தில்லைப் பிறிதென்றான். 2287

அஅ *இன்னன பலபல விளம்பி யானுமிப்
பன்னருங் கொடுமனப் பாவி பாலிரேன்
துன்னருந் துயர்கெடத் தூய கோசலை
பொன்னடி தொழுவனென் றெழுந்து போயினான்.

(பிரதி) 1 யிருந்தே. 2 யீதல,

௮௯ ஆண்டகை கோசலை யருகி னெய்தினான்
கீண்டுமண் கிழிதர விழுந்து கேழ்கிளர்
காண்டகு தடக்கையிற் கமலச் சீறடி
பூண்டனன் கிடந்திடை புலம்பி னானரோ. 2289

௯0 எந்தையெவ் வுலகுள னெம்முன் யாண்டையான்
வந்தது தமியனேன் மறுக்கங் காணவோ
சிந்தையி லுறுதுயர் தீர்த்தி ராலெனும்
அந்தரத் தமரரு மழுது சோரவே. 2290

௯௧ அடித்தலங் கண்டிலன் யானென் னையனைப்
படித்தலங் காவலன் பெயரற் பாலனோ
பிடித்திலீர் போலுநீர் பிழைத்தி ராலெனும்
பொடித்தலந் தோளுறப் புரண்டு சோர்கின்றான். 2291

௯௨ கொடியவர் யாவருங் குலங்கள் வேரற
நொடிகிலர் யானது நுவல்வ தெங்ஙனங்
கடியவள் வயிற்றிலே பிறந்த கள்வனேன்
முடிகுவ னருந்துயர் முடிய வென்னுமால். 2292

௯௩ இரதமொன் றூர்ந்துபா ரிருளை நீக்குநம்
வரதனி லொளிபெற மலர்ந்த தொல்குலம்
பரதனென் றொருபழி படைத்த தென்னுமால்
மரகத மலையென மலர்ந்த தோளினான். 2293

௯௪ வாடொடு தானையான் வானின் வைகிடச்
சாடொரு தலைமக னெய்தக் கண்ணிலா
நாடொரு துயரிடை நைய வோவெனுந்
தாடொடு தடக்கையத் தரும மேயனான். 2294

௯௫ புலம்புறு குரிசிறன் புலம்ப நோக்கினாள்
குலம்பொறை கற்பிவை சுமந்த கோசலை
நிலம்பொறை யாற்றல [1]னெஞ்சு தூய்தெனச்
சலம்பிறி துறமனந் தளர்ந்து கூறுவாள். 2295

௯௬ மையறு மனத்தொரு மாசு ளானலள்
செய்யனே யென்பது தேருஞ் சிந்தையாள்
கைகயர் கோமக ளிழைத்த கைதவம்
ஐயநீ யறிந்திலை போலு மாலென்றாள். 2296

கூஎ தாளுறு குரிசிலத் தாய்சொற் கேட்டலுங்
கோளுற்று மடங்கலிற் குமுறி விம்முவான்
நாளுறு நல்லற நடுங்க நாவினாற்
கூளுறு கட்டுரை [2]சொல்லல் மேயினான். 2297

கூஅ அறங்கெட முயன்றவ னருளி னெஞ்சினன்
பிறங்கடை நின்றவன் பிறர்கட் சீறினோன்
மறங்கொடு மன்னுயிர் கொன்று வாழ்பவன்
துறந்தமா தவர்க்கருந் துயரஞ் சூழ்ந்துளோன். 2298

கூகூ குரவரை மகளிரை வாளிற் கொன்றுளோன்
புரவல னொருபொருள் புவியின் வவ்வினோன்
விரவலர் வென்னிடை விழிக்க மீண்டுளோன்
இரவல ரிருநிதி யெறிந்து வவ்வினோன் 2299

க00 தழைத்ததண் டுளதியான் றலைவ னல்லனென்
றழைத்தவ ரருநெறி யந்த ணாளரிற்
பிழைத்தவர் பிழைப்பிலா மறையைப் [3]பின்னிநின்
றிழைத்தவ ருளரெனு மிழுதை நெஞ்சினார். 2300

க0க தாய்பசி யுழன்றுயிர் தளரத் தான்றனிப்
[4]பாய்பெரும் பாழ்வயிற் றளிக்கும் பாவியும்
நாயகன் படநடந் தவனு நண்ணுமத்
தீயெரி நரகத்துக் கடிது செல்கயான். 2301

க0உ தாளடைந் துறைபவர் தம்மைத் தானொரு
கோளுற வருதலிற் கொடுத்த பேதையும்
நாளினு [5]மறமறந் தவனு நண்ணுமம்
மீளரு நரகத்துக் கடிது வீழ்கயான். 2302

க0௩ பொய்க்கரி கூறினன் போரி லஞ்சினன்
கைப்படுத் தடைக்கலங் கரந்து வவ்வினோன்
எய்த்திடத் திட செய்தோ னென்றின் னோர்புகும்
மெய்க்கொடு நரகிடை விரைவில் வீழ்கயான். 2303

க0ச அந்தண ருறையுளை யனலி னூட்டினோன்
மைந்தரைக் கொன்றுளோன் வழக்கிற்பொய்த்துளோன்
நிந்தனை தேவரி கழ்த்தி னோன்புகும்
வெந்துயர் நரகத்து வீழ்க யானுமே. 2304

(பிரதி) 1 னெஞ்ச. 2 சொல்ல. 3 பின்னின். 4 பாய்வரும்.
5 மறைதுறந்.

கoரு கன்றுயி ரோய்ந்துகக் கறந்து பாலுண்டோன்
மன்றிடைப் பிறர்பொருள் மறைத்து வவ்வினேன்
நன்றியை மாய்த்தற மறந்த நாவினேன்
என்றிவ ருறுகதி யென்ன தாகவே. 2305

கoசு ஆறுதன் னுடன்வரு மஞ்சொன் மாதரைக்
[1]ஊறுகொண் டலைக்கத்தா னுயிர்கொண் டோடினேன்
சோறுதன் னயல்சிலர் பதைக்கத் துய்த்துளோர்
ஏறிய கதியிடை யானு மேறவே. 2306

கoஎ எஃகெறி செருமுகத் தேற்ற தெவ்வருக்
கொல்கின னுயிரலைத் துண்ணு மாசையான்
அஃகலி லறநெறி யாக்கி [2]யோன்பொருள்
வெஃகிய மன்னன்வீழ் நரகின் வீழ்கயான். 2307

கoஅ அழிவரு மரசிய லெய்தி யாகுமென்
றிழிவருஞ் சிறுதொழி லியற்றி யாண்டுதன்
வழிவரு தருமத்தை மறந்து மற்றொரு
பழிப்படர் நெறிபடர் பதக னாகயான். 2308

கoகூ கன்னியைக் கட்டழித் தேகி னேன்குரு
பன்னியை நோக்கினேன் பருகி னேனறா
பொன்னிருட் களவிடைப் பொருந்தி னேனெனும்
இன்னவ ருறுகதி யென்ன தாகவே. 2309

ககo தஞ்சென வொதுங்கினோர் தனது பாருளோர்
எஞ்சின மன்னத்தினோ டிரியல் போயுற
வஞ்சிசென் றிறுத்தவன் வாகை மீக்கொள
அஞ்சிய மன்னவ னவனு மாகயான். 2310

ககக மறுவில குலங்களை மாசிட் டேற்றினேன்
சிறுவிலை,யெளியவ ருணவு சிந்தினேன்
நறியவென் றயலவர் நாவி னீர்வர
உறுபத நுங்கிய வொருவ னாகயான். 2311

ககஉ ஊணல வுண்வழி நாயி னுண்டவன்
ஆணலன் பெண்ணல னூர்கொ லாமென
நாணல னரகமுண் டென்னு நல்லுரை
பேணலன் பிறன்பழி பிதற்றி [3]யாகயான். 2312

(பிரதி) 1 கூறை. 2 யோன்பொருள். 3 வாழ்கயான்.

கக௩ வில்லினும் வாளினும் விரிந்த வாண்டொழில்
புல்லிடை யுகுத்தவன் பொய்மை யாக்கையைச்
சில்பக லோம்புவான் செறுனர் சீறிய
இல்லிடை யிடுபத னேற்க வென்கையால் 2313

ககச ஏற்றவற் கொருபொரு ளுள்ள தில்லென
மாற்றல னுதவலன் வரம்பில் பல்பகல்
ஆற்றலி னுழற்றுமோ ராத னெய்துமோர்
கூற்றுள நரகிலோர் கூறு கொள்கயான். 2314

ககரு பிணிக்குறு முடையுடல் பேணிப் பேணலார்த்
துணிக்குறும் வயிரவாட் டடக்கை தூக்கிப்போய்
மணிக்குறு நகையிள மங்கை மார்கண்முன்
றணிக்குறு பகைஞரைத் தாழ்க வென்றலை. 2315

ககசூ கரும்பலர் சென்னலங் கழனிக் கானநாட்
டரும்பகை கவர்ந்துண வாவி பேணினன்
இரும்பலர் நெடுந்தலை யீர்ந்த காலொடும்
விரும்பலர் முகத்தெதிர் விழித்து நிற்கயான். 2316

ககஎ * தூய வாசகஞ் சொன்ன தோன்றலைத்
தீயகானகத் திருவி னீங்கிமுன்
போயி னான்வரக் கண்ட பொம்மலாள்
ஆய காதலா ளழுது புல்லினாள். 2317

ககஅ செம்மை நன்மனத் தண்ணல் செய்கையும்
அம்மை தீய்மையு மறித றேற்றினாள்
கொம்மை வெம்முலை குமுறு பாலுக
விம்மி விம்மிநின் றழுது வீங்கினாள். 2318

ககக முன்னை நின்குல முதலி னோர்கடாம்
பின்னை யாவரே நிகர்க்கு நீர்மையார்
மன்னர் மன்னவ வென்று வாழ்த்தினாள்
உன்ன வுன்னநெஞ் சுருகி நைகுவாள். 2319

கஉ௦ மறுவில் மைந்தனே வள்ள லுந்தையார்
இறுதி யெய்தினா ளேழி றந்தன
சிறுவர் செய்கடன் செய்தி போதியென்
றுறுவல் மேயினா ளுரையின் மேயினாள். 2320

கஉக அன்னை யேவினு ளடியி றைஞ்சினுள்
பொன்னின் வார்சடைப் புனித னேடும்போய்த்
தன்னை நல்கிய தரும நல்கினுன்
பன்னு தொல்லறப் படிவ நோக்கினுன். 2321

கஉஉ மண்ணின் மேல்விழுந் தலறி மாழ்குவான்
அண்ண லாழியா னவனி காவலன்
எண்ணெ யுண்டபொன் னெழில்கொண் மேனியைக்
கண்ணி னீரினுற் கழுவி யாட்டினுன். 2322

கஉங பற்றி யவ்வயிற் பரிவின் வாங்கினுர்
சுற்று நான்மறைத் [1]துறைசொல் கேள்வியார்
கொற்ற மங்கலங் குமுற மன்னனை
மற்றெுர் பொன்னின்மா மான மேற்றினுர்.

கஉச உந்து பொற்றடந் தேர்வ லாெனுடும்
மந்தி ரப்பெருந் தலைவர் மற்றுளோர்
தந்தி ரத்தனித் தலைவர் நண்பினேர்
வந்து சுற்றமுற் றழுது மாழ்கினுர்.

கஉரு கரைசெய் வேலைபோ னகரி கையெடுத்
துரைசெய் பூசலிட் டுயிர்து ளங்குவார்
அரச வேலைசூழ்ந் தழுது கைதொழப்
புரசை யானையிற் கொண்டு போயினுர்.

கஉசு சங்கு பேரிகை தழுவு சின்னமும்
எங்கு மெங்குமின் றிரங்கி யேங்குவ
மங்கு ரேய்நகர் மகளி ராமெனப்
பொங்கு கண்புடைத் தழுவ போன்றவே.

கஉஎ மாவும் யானையும் வயங்கு தேர்களுங்
கோவு நான்மறைக் குழுவு முன்செலத்
தேவி மாரொடுங் கொண்டு தெண்டிரை
தாவு வண்புனல் சரயு எய்தினுர்.

கஉஅ எய்தி நூலுளோர் மொழிந்த யாவையுஞ்
செய்து தீக்கடன் செலுத்திச் செல்வனை
வெய்தி னேற்றினுர் வீர நுந்தைபாற்
பொய்யின் மாக்கடன் கழித்தி போயென்ருர். 2328

(பிரதி) 1 துறைசெய்,

கடுக என்னும் வேலையி [1]லெழுந்த வீரனை
அன்னை தீமையா லரச னின்னையுந்
துன்னு துன்பத்தாற் றுறந்து போயினான்
முன்ன ரேயென முனிவன் கூறினான். 2329

கஙஅ துறந்து போயினா னுந்தை தோன்றனீ
பிறந்து பேறறம் பிழைத்த தென்றபோ
திறந்து போயினா னிருந்த தாண்டது
மறந்து வேறொரு மன்ன னேகொலாம். 2330

கஙக †என்று கொண்டுமா தவனி யம்பலும்
நின்று நின்றுதா னெடிது யிர்த்தலும்
நன்று நன்றெனா நகைமு கிழ்த்தனன்
குன்று குன்றுறக் குலவு தோளினான். 2331

கஙஉ இடிக்கண் வாளரா விடைந்த தாமெனப்
படிக்கண் வீழ்ந்தகம் பதைக்கு நெஞ்சினான்
தடுக்க லாகலாத் துயரந் தன்னுளே
துடிக்க விம்முவா னழுது சொல்லினான். 2332

கஙஙு உரைசெய் மன்னர்மற் றென்னில் யாவரே
இரவி தன்குலத் தெந்தை முந்தையோர்
பிரத பூசனைக் குரிய பேறிலேன்
அரசு செய்யவோ வாவ தாயினேன். 2333

கஙச பூவி னான்முகன் புதல்வ [2]னாதியாத்
தாவின் மன்னர்தந் தரும நீதியார்
தேவ ராயினார் சிறுவ னாகியே
ஆவ நான்பிறந் தவத்த மானவா. 2334

கஙரு துன்னு தாள்வளஞ் சுமந்த தாழையிற்
பன்னு வான்குலைப் பதடி யாயினேன்
என்னை யென்னையே யீன்று காத்தவெம்
அன்னை யாரெனக் கழுது செய்தவா. 2335

கஙசு என்று கூறிநோய் திடரின் மூழ்குமத்
துன்று தாரவற் கிளைய தோன்றலால்
அன்று நேர்கட னமைவ தாக்கினான்
நின்று நான்மறை நெறிசெய் நீர்மையான். 2336

(பிரதி) 1 லெழுந்து, 2 ராதியாய்த்.

௧௩௭ இழையு மாரமு மிடையு மின்னிடக்
குழையு மாமலர்க் கொம்ப னார்கடாந்
தழையு முள்ளியுந் தழுவு கானிடை
நுழையு மஞ்ஞைபோ லெரியின் மூழ்கினார். 2337

௧௩௮ அங்கி நீரினுங் குளிர [1]வம்புயத்
திங்கள் வாண்முகத் திருவி ளங்குழச்
சங்கை தீர்தவந் தழுவு கற்புடை
நங்கை மார்புகு முலக நண்ணினார். 2338

௧௩௯ அனைய செய்கையா லரசர் கோமகற்
கினைய செய்கையா விசைவ செய்துபின்
[2]முனையி னெய்தினான் மரபின் வாழ்வினை
வினையி னெய்துமோர் பிணியின் [3]வேலையான். 2339

௧௪௦ ஐந்து மைந்துநா ளூழி யாமெனை
மைந்தன் வெந்துயர்க் கடலின் வைகினான்
தந்தை தன்மையிற் றருமம் யாவையும்
முந்த நூலுளோர் முறையின் முற்றினான். 2340

௧௪௧ முற்று முற்றவித் துதவி மும்மைநூற்
சுற்றம் யாவையுந் தொடரத் தோன்றினான்
வெற்றி மாதவன் வினைமு டித்தவக்
கொற்ற [4]வனெடுங் குமரற் கூறுவான். 2341

௧௪௨ மன்ன ரின்றியே வைகும் வைகலுன்
றன்மை யன்றெனத் துணிபு நெஞ்சினார்
அன்ன மாநிலத் தறிஞர் தம்மொடும்
முன்னை மந்திரக் கிழவர் முன்னினார். 2342

௰. பள்ளிபடைப் படலம் முற்றும்

---

௧௧. ஆற்றுப் படலம்

௧ *வரன்முறை தெரிந்துணர் மறையின் மாதவத்
தருமறை [5]முனிவனும் யாண்டை யார்களும்
விரைவின்வந் தீண்டினர் விரகி னெய்தினார்
பரதனை வணங்கினார் பரிவு நெஞ்சினார். 2343

(பிரதி) 1 வம்புபாய், வம்புவாய். 2 மனையுளெய்தினான். 3 வெஃகலான், 4 வேனெடுங் 5 முனிவனு மாண்டை,

உ மந்திரக் கிழவரு நகர மாந்தருந்
தந்திரத் தலைவருந் தரணி வாணரும்
அந்தர முனிவரோ டறிஞர் யாவருஞ்
சுந்தரக் குரிசிலை மரபிற் சுற்றினர். 2344

ந சுற்றின ரிருந்துழிச் சுமந்தி ரப்பெயர்ப்
பொற்றடந் தேர்வலான் புலமை யுள்ளத்தான்
கொற்றவக் குரிசிலைக் குறித்துக் கொள்கையான்
முற்றுணர் முனிவனை முகத்து நோக்கினான். 2345

ச நோக்கினான் சுமந்திர னுவல லுற்றதை
வாக்கினா லன்றியே யுணர்ந்த மாதவன்
காக்குதி யுலகினின் கடனி தாமெனக்
கோக்கும ரனுக்கது தெரியக் கூறினான். 2346

ரு வேதிய ரருந்தவர் விருத்தர் வேந்தர்கள்
[1]ஆதியாய் நின்வயி னடைந்த காரியம்
நீதியுந் தருமமு நிறுவி நீயது
கோதறு குணத்தினாய் மனத்திற் கோடியால். 2347

சு தருமமென் றுருபொரு டந்து நாட்டுதல்
அருமையென் பதுபிறி தறிதி யையநீ
இருமையுந் தருவதற் கிவையவ தீண்டது
தெருண்மனத் துனக்கது சோர்வி லாமையால். 2348

எ [2]வள்ளுறை வயிரவா ளரசில் வையகம்
நள்ளுறு கதிரிலாப் பகலு நாடொறுந்
தெள்ளுறு மதியிலா விரவுந் [3]தேர்தரின்
உள்ளுறை யுயிரிலா வுடலு [4]மொக்குமால். 2349

அ தேவர்தம் முலகினுந் தீமை செய்துழல்
மாவலி யவுணர்கள் வைகு நாட்டினும்
ஏவையு முலகமென் றிசைக்கி [5]னல்லவே
காவல்செய் தலைவரை யின்மை காட்டியால். 2350

கூ முறைதெரிந் தொருவகை முடிய நோக்குறின்
மறையவன் வகுத்தன மண்ணில் வானிடை
நிறைபெருந் தன்மையி னிற்ப செல்வன
இறைவனை யில்லன யாவுங் [6]காண்கில. 2351

(பிரதி) 1 ஆதியர். 2 வள்ளுறு. 3 தேர்தர. 4 மொக்குமே.
5 னல்லது. 6 காண்கிலம்.

க0 பூத்தநாண் மலரயன் முதல புண்ணியர்
ஏத்துவா னன்றளை வின்று காறுமுன்
காத்தனர் பின்னொரு களைக ணின்மையால்
நீத்தன ருடைகல நீர தாகுமே. 2352

கக உந்தையு மிறந்தன னும்மு னீத்தனன்
வந்தது மன்னை தன் வரத்தின் மைந்தநீ
அந்தமில் பேரர சளித்தி யன்னது
சிந்தனை யெமக்கெனத் தெரியக் கூறினான். 2353

க௨ தஞ்சமிவ் [1]வுலகநீ தாங்கு வாயெனச்
செஞ்செவே முனிவரன் செப்பக் கேட்டலும்
நஞ்சினை நுகரென நடுங்கு வாரினும்
அஞ்சின னயர்ந்தன னருவிக் கண்ணினான். 2354

க௩ நடுங்கின னாத்தடு மாறி நாட்டமும்
இடுங்கினன் மகளிரி னிரங்கு நெஞ்சினன்
ஒடுங்கிய வுயிரின னுணர்வு கைதரத்
துடங்கின னரசவைக் குள்ளஞ் சொல்லுவான். 2355

க௪ மூன்றுல கினுக்கொரு முதல்வ னாய்முதற்
றோன்றின னிற்கயான் மகுடஞ் சூடுதல்
சான்றவ ருரைசெயத் தருமமாயதே
ஈன்றவள் செய்கையி னிழுக்குண் டாகுமோ. 2356

க௫ அடைவருங் கொடுமையென் னன்னை செய்கையை
நடைவருந் தன்மைநீர் நன்றி தென்றலின்
இடைவரு காலமீண் டிரண்டு நீத்தது
கடைவரு காலத்தின் கலியி னாட்சியோ. 2357

க௬ வேத்தவை யிருந்தநீர் விமல னுந்தியிற்
பூத்தவன் முதலினர் புவியிற் றோன்றினார்
மூத்தவ னிருக்கவே முறைமை யானிலங்
காத்தவ ருளரெனிற் காட்டிர் காண்டிரால். 2358

க௭ நன்னெறி யென்னினு நானின் னானிலம்
மன்னுயிர்ப் பொறைசுமந் திருந்து வாழ்கிலேன்
அன்னவன் றனைக்கொணர்ந் தலங்கன் மாமுடி
சொன்னநன் முறைமையிற் சூட்டல் காண்டிரால். 2359

(பிரதி) 1 வுலகைநீ.

கஅ அன்றெனி லவனொடு மரிய கானிடை
நின்றினி தருந்தவ நெறியி னாற்றுவன்
ஒன்றினி யுரைப்பினென் னுயிரை நீக்குவன்
என்றன னென்றலு மிருந்த பேரவை. 2360

கக ஆன்றபே ரரசனு மிருப்ப வையனும்
ஏன்றன னிருநில மேந்த வேந்தனீ
வான்றொடர் திருவினை மறுத்தி மன்னிளந்
தோன்றல்கள் யாருளர் நின்னிற் றேன்றினர். 2361

உ0 ஆழியை யுருட்டியு மவனி தாங்கியும்
வேள்வியை யியற்றியும் வளர்க்க வேண்டுமோ
ஏழினொ டேழெனு முலக மெஞ்சினும்
வாழியாய் நின்புக ழென்று வாழ்த்தினர். 2362

உக குரிசிலுந் தம்பியைக் கூவிக் கொண்டலின்
முரசறைந் திங்கள் முறைமை வேந்தனைத்
தருதுமீண் டென்பது சாற்றித் தானையை
விரைவினி லெழுகென விளம்பு வாயென்றான். 2363

உஉ நல்லவ னுரைசெய நம்பி கூறலும்
அல்லவி [1]னழுந்திய வளவின் மாநகர்
ஒல்லென வொலித்ததவ் வுயிரில் யாக்கையைச்
சொல்லெனு மமுதினாற் றளிர்த்த தென்னவே. 2364

உங அவித்தவைம் புலத்தவ ராதி யாயுள
புவித்தலை யுயிரெலா மிராமன் பொன்முடி
கவிக்குமென் றுரைக்கவே களித்த தாலது
செவிப்புல னுகர்வதோர் தெய்வத் தேன்கொலாம். 2365

உச படுமுர சறைந்தனர் பரதன் றம்முனைக்
கொடிநகர்த் தருமைற் கொணரச் சேனையும்
முடுகுக வென்றனன் [illegible] மாநகர்
உடுபதி வேலையி னுதயம் போன்றதே. [illegible]

உரு எழுந்தது பெரும்படை யேழு [2]வேலையின்
மொழிந்தபே ரூழியின் முழங்கி முந்தெழ
அழிந்தது கைகயன் மடந்தை யாசைபோற்
கழிந்தது துயர்நெடுங் காத றூண்டவே. 2367

(பிரதி) 1 லழுங்கிய. 2 வேலையும்.

௨௬ பண்ணின பகடுதேர் புரவி பண்டியும்
மண்ணினை மறைத்தன மலிந்த மாக்கொடி
விண்ணினை மறைத்தன விரிந்த மாத்துகள்
கண்ணினை மறைத்தது கமலத் தோனையே. 2368

௨௭ ஈசனிவ் வுலகிழைத் தொழிக்கு நாண்மழை
ஓசையி னிமிர்ந்துள தொல்லென் பேரொலி
[1]காசெயிற் கரியவற் காண மூண்டெழும்
ஆசையி னிமிர்ந்ததவ் வனிக ராசியே. 2369

௨௮ [2]படியொடு திருநகர் துறந்து பன்மரஞ்
[3]செடியொடு தொடர்வன நோக்கிச் சீதையாங்
கொடியொடு நடந்தவக் கொண்ட லாமெனப்
பிடியொடு நடந்தன பெருங்கை வேழமே. 2370

௨௯ [4]சேற்றிள மரைமலர் சிறந்த வாமெனக்
[5]காற்றிளம் பொலிதரு கவினச் சென்றன
[6]ஏற்றிளம் பிடிக்குல மிகலி [7]யின்னடை
தோற்றிள மகளிரைச் சுமப்ப போன்றவே. 2371

௩0 வேதனை வெயிற்கதிர் தணிக்க மென்மழைச்
[8]சீதநீ ரொடுநெடுங் கொடியுஞ் சென்றன
கோதைவெஞ் சிலையவன் கோலங் காண்கிலா
மாதரி னுடங்குவ வரம்பில் கோடியே. 2372

௩௧ வெண்மதி மீச்செல மேக மூர்ந்தென
அண்ணல்வெங் கதிரவ னளவில் மூர்த்தியாய்
மண்ணிடை யிழிந்தொரு வழிக்கொண் டானென
எண்ணரு மன்னவர் களிற்றி னேகினார். 2373

௩௨ தேர்மிசைச் சென்றதோர் பரவை செம்முகக்
கார்மிசைச் சென்றதோ ருவரிக் கார்க்கடல்
ஏர்முகப் பரிமிசை யேற்றெங் கணும்
பார்மிசைச் சென்றது பதாதி வேலையே. 2374

௩௩ தாரையுஞ் சங்கமுந் தாளங் கொம்புகள்
வார்மிசைப் பம்பையுந் துடியு மற்றவும்
பேரியு மியம்பல சென்ற பேதைமை
பூரியர் குழாத்திடை யறிஞர் போலவே. 2375

(பிரதி) 1 காசையில் கரியவாற். 2 படியொடுந். 3 செடியொடுந்.
4 சேற்றின. 5 காற்றின. 6 ஏற்றினம். 7 மென்னடை.
8 சீதநீர் கொடுநெடுங்.

௩௪ தாவரு நாண்முத லணிய லாற்றகை
[1]மேவரு கலன்களை வெறுத்த மேனியர்
தேவரு மருள்செயத் தெரியுங் காட்சியர்
பூவுதிர் கொம்பென மகளிர் போயினார். 2376

௩௫ அதிர்கடல் வையக மனைத்துங் காத்தவன்
விதிவரு மதிக்குடை மீதி லாப்படை
பொதிவரு [2]கவிகைமீன் பூத்த தாயினுங்
கதிர்மதி நீங்கிய கங்குல் போன்றதே. 2377

௩௬ செல்லிய செலவினிற் சிறிய திக்கெனச்
சொல்லிய சேனையைச் சுமந்த தேயெனில்
ஒல்லொலி வேலைநீ ருடுத்த பாரையோர்
மெல்லிய லென்றவர் மெலிய ரேகொலாம். 2378

௩௭ தங்குதண் சாந்தில கலவை சாத்தில
குங்குமங் கொட்டில கோவை முத்தில
பொங்கிளங் கொங்கைகள் புதுமை வேறில
தெங்கிள நீரெனத் தெரிந்த காட்சியே. 2379

௩௮ இன்றுணை யவர்முலை யெழுது சாந்தினும்
மன்றலந் தாரினு மறைந்தி லாமையால்
துன்றிளங் கொடிமுகிற் றூறு நீக்கிய
குன்றெனப் பொலிந்தன குவவுத் தோள்களே. 2380

௩௯ நறையகிற் கோதையர் நாட்செய் கோலத்தின்
துறையற வஞ்சனந் துறந்த நாட்டங்கள்
குறைவற நிகர்த்தன கொற்ற முற்றுவான்
கறையறக் கழுவிய கால வேலினே. 2381

௪௦ விரிமணி மேகலை விரகி னார்த்தில
தெரிவைய ரல்குற்று ரொலியிற் றேரெனப்
பரிபுர மார்க்கில பவளச் சீரடி
அரியின மார்க்கிலாக் கமல மென்னவே. 2382

௪௧ மல்கிய கேகயன் மடந்தை வாசகம்
நல்கிய தரிவையர் நடுவிற் கேகொலாம்
புல்கிய மணிவடம் பூண்கி லாமையால்
ஒல்கிய வொருவகைப் பொறையு யிர்த்தவே. 2383

(பிரதி) 1 மேவருங். 2 கவிகைமீப்.

௪௨ கோமகன் பிரிதலிற் கோல நீத்துள
தாமரைச் செல்வியுந் தவத்தை மேவினாள்
காமனு மருந்துயர்க் கடலின் மூழ்கினான்
ஆமென நிகழ்ந்ததவ் வளவில் சேனையே. 2384

௪௩ மண்ணையும் வானையும் வயங்கு திக்கையும்
உண்ணிய நிமிர்கட லொக்கு மென்பதென்
கண்ணினு முகத்தினுங் கமலத் தண்ணறன்
எண்ணினு நெடிதவ னெழுந்த சேனையே. 2385

௪௪ அலைகட னெடும்புன லறக் குடித்தலால்
நிலைபெற [1]நிலைநெறி நிறுத்த லானெடு
மலைகளை மண்ணுற வழுத்த லாற்றமிழ்த்
தலைவனை நிகர்த்ததத் தயங்கு தானையே. 2386

௪௫ அறிஞருஞ் சிறியரு மாதி [2]யந்தமாச்
செறிபெருந் தானையுந் திருவு நீங்கலால்
குறியவன் புனலெலாம் வயிற்றிற் கொண்டநாள்
மறிகட லொத்ததவ் வயோத்தி மாநகர். 2387

௪௬ பெருந்திரை நதிகளும் வயலும் பெட்புறு
மரங்களு மலைகளு மண்ணுங் கண்ணுறத்
திருந்தலி லயோத்தியாஞ் செல்வ மாநகர்
அருந்தெரு வொத்ததப் படைசெ லாறரோ. 2388

௪௭ தார்கடாங் கோதைதாஞ் சாந்தந் தான்றகை
ஏர்கடாங் கலவைதாங் கமழ்ந்தின் றென்பரால்
கார்கடாங் கடத்தன வனைய கைமலை
வார்கடா மில்லதம் மன்னன் சேனையே. 2389

௪௮ ஆளுலாங் கடலினு மகன்ற வக்கடல்
தோளுலாங் குண்டல முதலை தொல்லணி
சேளுலா மின்னொளி [illegible]
வாளுலா நுதலியர் மருங்கு லன்னதே. 2390

௪௯ மத்தள முதலிய வயங்கு பல்லியம்
ஒத்தன சேறலி னுரையி லாமையிற்
சித்திரச் சுவர்நெடுஞ் சேனை தீட்டிய
பத்தியை நிகர்த்ததப் படையி னீட்டமே. 2391

(பிரதி) 1 நிலைபெற. 2 அந்தமாய்ச்.

௫௦ ஏடுறை கோதையர் விழியி னெய்தகோல்
ஊடுற வுரந்தொளைத் துயிரு ணுவகை
ஆடவர்க் கரும்பெருங் கவச மாயது
காடுறை வாழ்க்கையக் கண்ண னண்ணவே. 2392

௫௧ கனங்குழைக் கேகயன் மகளிற் கண்ணிய
சினங்கிடந் தெரிதலிற் றீர்ந்த வேகொலாம்
அனங்கனங் கடுங்கணை யடரு மாடவர்
மனங்கிடந் துணங்கில மகளிர் கொங்கையே. 2393

௫௨ இன்னண நெடும்படை யேக வேந்தலுந்
தன்னுடை நெடுவரைச் சீரை சாத்தினான்
பின்னிளை யவனொடும் பிறந்த துன்பொடும்
நன்னெடுந் தேர்மிசை நடத்தன் மேயினான். 2394

௫௩ தாயரு மருந்தவத் தவருந் தந்தையின்
ஆயமந் திரியரு மளவில் சுற்றமுந்
தூயவந் தணர்களுந் தொடர்ந்து சூழ்வரப்
போயினன் றிருநகர்ப் புரிசை வாயிலே. 2395

௫௪ மந்தரைக் கூற்றமும் வழிச்செல் வாரொடும்
[1]உந்தினன் போதல்கண் டிளவ லோடிப்போய்
அந்தரத் தெற்றுவா னழன்று பற்றலுஞ்
சுந்தரத் தோளவன் விலக்கிச் செல்லுவான். 2396

௫௫ முன்னையர் முறைகெட முடித்த பாவியை
சின்னபின் னஞ்செய்து சினத்தைத் தீர்வனேல்
என்னையன் றென்னையன் றுறக்கு மென்றலால்
அன்னையென் றுணர்ந்திலெ னையனா னென்றான். 2397

௫௬ ஆதலான் முனியுமென் றைய னந்தமில்
வேதனைக் கூனியை வெகுண்டு மெண்ணினுங்
கோதிலா வருமறைக் குலவு நூல்வலாய்
போதுநா மென்றுகொண் டரிதிற் போயினான். 2398

௫௭ மொய்பெருஞ் சேனையு மூரி ஞாலமும்
கைகலந் தயலொரு கடலிற் சுற்றிட
ஐயனுந் தேவியு மிளைய வாளியும்
வைகின சோலையிற் றானும் வைகினான். 2399

(பிரதி) 1 உய்ந்தன்ன, உய்ந்தனள்.

௫அ அல்லணை நெடுங்கனீ ரருவி யாடினன்
கல்லணை கிழங்கொடு கனியு முண்டிலன்
வில்லணை மருங்கிற்றன் வீரன் வைகிய
புல்லணை மருங்கிற்றான் பொடியின் வைகினான். 2400

௫க ஆண்டுநின் றாண்டகை யடியி னேகினான்
ஈண்டிய நெறியெனத் தானு மேகினான்
தூண்டிய தேர்களுந் துரக வெள்ளமுங்
காண்டகு கரிகளுந் தொடரக் காவினே. 2401

கக. ஆற்றுப் படலம் முற்றும்.

கஉ. கங்கை காண் படலம்.

க பூவிரி பொலன்கழற் பொருவி [1]றாளினான்
காவிரி நாடன்ன கழனி நாடொரீஇத்
தாவர [2]சங்கம மென்னுந் தன்மையாம்
[3]யாவையு மிரங்கிடக் கங்கை யெய்தினான். 2402

உ எண்ணருஞ் சுரும்புதன் னினத்துக் கல்லது
கண்ணகன் பெரும்புனற் கங்கை யெங்கணும்
அண்ணல்வெங் கரிமதத் தருவி பாய்தலால்
உண்ணவுங் குடையவு முரித்தன் றாயதே. 2403

௩ அடிமிசைத் தூளிபுக் கடைந்த தேவர்தம்
முடிமிசைப் பரந்ததோர் முறைமை தேர்ந்துதான்
நெடிதுயிர்த் துண்டவு நீந்தி நின்றவும்
பொடிமிசைப் புரண்டவப் புரவி யீட்டமே. 2404

௪ பாலையேய் நிறத்தொடு பண்டு தான்படர்
ஓலையேய் நெடுங்கட லோடிற் றில்லையான்
மாலையேய் நெடுமுடி வரதன் சேனையாம்
வேலையே மடுத்தது கங்கை வெள்ளமே. 2405

௫ கான்றலை நண்ணிய காளை பின்றொடர்
தோன்றலை யவ்வழி தொடர்ந்து சென்றுழி
ஆன்றவ ருணர்த்திய வக்கு ரோணிகண்
மூன்றுபத் திரட்டியா யிரத்தின் முற்றுமே. 2406

(பிரதி) 1 றாளினான். 2 சங்கமே யென்னுந். 3. யாவரு.

சு அப்படை கங்கையை யடைந்த வாயிடைத்
துப்புடைக் கடலினீர் சுமந்த மேகத்தை
ஒப்புடை யண்ணலோ டுடற்ற வேகொலாம்
இப்படை யெடுத்ததென் றெடுத்த சீற்றத்தான். 2407

எ குகனெனும் பெயரினன் கூற்றி னாற்றலான்
தொகைமுரட் சேனையைத் துகளி னோக்குவான்
நகைமுகக் கண்கடீ நாற நாசியிற்
புகையுகக் குனிக்குறும் புருவக் கோளினான். 2408

அ மையற வுயிரெலா மிறுதி வாங்குவான்
கையுறு கவரயிற் கால னென்னும்பேர்
ஐயுறு மாறுதா னுருவ மாயினான்
மெய்யுறு தானையான் வில்லின் கல்வியான். 2409

கூ கட்டிய [1]சுரிகையன் கடித்த வாயினன்
வெட்டிய மொழியினன் விழிக்குந் தீயினன்
கொட்டிய துடியினன் குறிக்குங் கொம்பினன்
கிட்டிய தமரெனக் கிளருந் தோளினான். 2410

க0 எலியெலா மிப்படை யரவம் யானென
ஒலியுலாஞ் சேனையை யுழையிற் கூவினான்
வலியிலா வுலகினில் வாழும் வள்ளுகிர்ப்
புலியெலா மொருவழி புகுந்த தென்னவே. 2411

கக மருங்குடைத் தென்கரை வந்து தோன்றினான்
ஒருங்குடை நெடும்படை யொல்லெ னார்ப்பினான்
அருங்கடை யுகந்தனி லசனி [2]மாமழை
கருங்கடல் கிளர்ந்தெனக் கலந்து சூழவே. 2412

கஉ தோன்றிய புளினரை நோக்கிச் சூழ்ச்சியின்
ஊன்றிய சேனையை யும்ப ரேற்றுதற்
கேன்றனெ னென்னுயிர்த் துணைவற் கீகுவான்
ஆன்றபே ரரசுநீ ரமைதிர் போர்க்கென்றான். 2413

கங துடியெறி நெறிகளுந் துறையுஞ் சுற்றுற
ஓடியெறி யம்பிகள் யாவு மோட்டலிர்
கடியெறி கங்கையின் கரைவந் தோர்களைப்
பிடியெறி படவெனாப் [3]பெயர்த்துங் கூறுவான். 2414

(பிரதி) 1 சுரிகையான் 2 யாமழை. 3 பெயர்த்துக்.

கச *அஞ்சன வண்ணனென் னாருயிர் நாயக னாளாமே
வஞ்சனை யாலர செய்திய மன்னரும் வந்தாரோ
செஞ்சர மென்பன தீயுமிழ் கின்றன செல்லாவோ
உஞ்சிவர் போயிடி னாயென வென்னையு மோதாரோ

கரு ஆழ நெடுந்திரை யாறு கடந்திவர் போவாரோ
வேழ நெடும்படை கண்டு நடுங்கிடும் வில்லாளோ
தோழமையென் றவர்சொல்லிய சொல்லொருசொல்லன்றோ
ஏழமை வேட னிறந்தில னென்றெனை யேசாரோ.

கசு முன்னவ னென்று நினைந்திலன் மொய்புலி யன்னானோர்
பின்னவ னின்றன னென்றில னன்னது பேசாரோ
என்னிவ னென்னையி கழ்ந்ததிவ் வெல்லைக டந்தன்றோ
மன்னவர் நெஞ்சினில் வேடர்வி டுஞ்சரம் வாயாவோ.

கள பாவமு நின்றபெ ரும்பழி யும்பகை நண்போடும்
ஏவமு மென்பவை மண்ணுல காள்பவ ரெண்ணாரோ
ஆவது போகவென் னாள்வினைத் தோழமை தந்தான்மேற்
போவது சேனையு மாருயி ருங்கொடு போயன்றோ.

கஅ அருந்தவ மென்றுணை யாளவி வன்புவி யாள்வானோ
மருந்தெனி னன்றுயிர் வன்புகழ் கொண்டது மாயேனோ
பொருந்திய கேண்மையு கந்தவர் தம்மொடு போகாதே
இருந்தது நன்றுக ழிக்குவ னென்கட னின்றோடே.

கக தும்பியு மாவுமி டைந்தபெ ரும்படை சூழ்வாரும்
வம்பிய ரூரவர் வாள்வலி கங்கைக டந்தன்றோ
வெம்பிய வேடரு ளீர்துறை யோடம்வி லக்கீரோ
நம்பிமுன் னேயினி நம்முயிர் போவது நன்றன்றோ.

உ0 போன படைத்தலை வீரர்த மக்கிரை போதாவிச்
சேனைகி டக்கிடு தேவர்வ ரிற்சிலை மாமேகஞ்
சோனைப டக்குடர் சூறைப டச்சுடர் வாளோடுந்
தானைப டத்தனி யானைப டக்கடை சாயேனோ. 2421

உக நின்றகொ டைக்கையெ னன்பனு டுக்கநெ டுஞ்சீரை
அன்றுகொ டுத்தவன் மைந்தர்ப லத்தையெ னம்பாலே
கொன்றுகு வித்துநி ணங்கொள்பி ணக்குவை கோண்டோடித்
துன்றுதி ரைக்கடல் கங்கைம டுத்திடை தூராதோ. 2422

௨௨ ஆடுகொ டிப்படை சாடிய றத்தவ ரேயாள
வேடுகொ டுத்தது பாரெனு மிப்புகழ் மேவீரோ
நாடுகொ டுத்தவென் னுயக னுக்கிவர் நாமாளுங்
காடுகொ [1]டுக்கில ராகியெ டுத்தது காணீரோ. 2423

௨௩ மாமுனி வர்க்குற வாகிவ னத்திடை யேவாழுங்
கோமுனி யத்தகு மென்றும னத்திடை கொள்ளேமால்
ஏமுனை யுற்றிடி லேழுக டற்படை யென்றாலும்
ஆமுனை யிற்சிறு கூழென விப்பொழு தாகாதோ, 2424

௨௪ என்பன சொல்லியி ரும்பன மேனிய ரேனோரும்
வன்பனை வில்லினன் மல்லுயர் தோளினன் வாள்வீரற்
கன்பனு நின்றனன் னின்றது கண்டரி யேறனான்
முன்பனின் வந்துமொ ழிந்தனன் மூரிய தேர்வல்லான்.

௨௫ *கங்கையிரு கரையுடையான் கணக்கிறந்த நாவாயான்
உங்கள்குலத் தனிநாதற் குயிர்த்தோழ னுயர்தோளான்
வெங்கரியி னேறனையான் விற்பிடித்த [2]வேலையினான்
கொங்கலருநறுந்தண்டார்க்குகனென் னுங்குறியுடையான்

௨௬ கற்காணுந் திண்மையான் கரைகாணக் காதலான்
அற்காணிற் கண்டனைய வழகமைந்த மேனியான்
மற்காணுந் திருநெடுந்தோண்மழைகாணுமணிநிறத்தாய்
நிற்காணு முள்ளத்தா னெறியெதிர்நின் றனனென்றான்

௨௭ தன்முன்னே யவன்றன்மை தந்தைதுணை முந்துரைத்த
சொன்முன்னே யுவக்கின்ற துரிசில்லாத் திருமனத்தான்
மன்முன்னே தழீஇக்கொண்ட மனக்கினிய துணைவனேல்
என்முன்னேயவற்காண்பன்யானேசென்றெனவெழுந்தான்

௨௮ என்றொழிந்து தம்பியொடு மெழுகின்ற காதலொடுங்
குன்றெழுந்து சென்றதெனக் குளிர்கங்கைக் கரைகுறுகி
நின்றவனை நோக்கினான் றிருமேனி நிலையுணர்ந்தான்
துன்றுகருநறுங்குஞ்சி யெயினர்கோன் றுண்ணென்றான்

௨௯ வற்கலையி னுடையானை மாசடைந்த வுடலானை
நற்கலையின் மதியென்ன நகையிழந்த முகத்தானைக்
கற்கனியக் கனிகின்ற துயரானைக் கண்ணுற்றான்
விற்கையினின் றிடைவீழ விம்முற்று நின்றொழிந்தான்.

(பிரதி) 1 டுக்கில னாகிலெ. 2 வேலையான்.

௩௰ நம்பியுமென் னாயகனை யொக்கின்றா னயலின்றான்
தம்பியையு மொக்கின்றான் றவவேடந் தலைநின்றான்
துன்பமொரு முடிவில்லைத் திசைநோக்கித் தொழுகின்றான்
எம்பெருமான் பின்பிறந்தாரிழைப்பரோ பிழையென்றான்.

௩௧ உண்டிடுக்க ணொன்றுடையா னுலையாத வன்புடையான்
கொண்டதவ வேடமே கொண்டிருந்தான் குறிப்பெல்லாங்
கண்டுணர்ந்து பெயர்கின்றேன் காமின்க ணெறியென்னாத்
தண்டுறையி னாவாயி னொருதனியே தான்வந்தான். 2432

௩௨ வந்தெதிரே தொழுதானை வணங்கினான் மலரிருந்த
அந்தணனுந் தனைவணங்கு மவனுமவ னடிவீழ்ந்தான்
தந்தையினுங் களிகூரத் தழுவினான் றகவுடையோர்
சிந்தையிலுஞ் சென்னியிலும் வீற்றிருக்குஞ் சீர்த்தியான்

௩௩ *தழுவிய புளினர் வேந்தன் றாமரைச் செங்க ணானை
எழுவினு முயர்ந்த தோளா யெய்திய தென்னை யென்ன
முழுதுல களிக்குந் தந்தை முந்தையோர் முறையி னீண்டு
வழுவினன தனைநீக்கி மன்னனைக்கொணர்வா னென்றான்

௩௪ கேட்டனன் கிராதர் வேந்தன் கிளர்ந்தெழு முயிர னாகி
மீட்டுமண் ணதனில்வீழ்ந்தான் விம்மினா னுவகைபொங்கத்
தீட்டரு மேனி மைந்தன் சேவடிக் கமலப் பூமேற்
பூட்டிய கையன் பொய்யி லுள்ளத்தான் புகல லுற்றான்.

௩௫ தாயுரை கொண்டு தாதை யுதவிய தரணி தன்னைத்
தீவினை யென்ன நீத்துச் சிந்தனை [1]முகத்துத் தேக்கிப்
போயினை யென்ற போது புகழினோர் தன்மை கண்டால்
ஆயிர மிராமர் நின்கே ழாவரோ தெரியி னம்மா. 2436

௩௬ என்புகழ் கின்ற தேழை யெயினரோ டிரவி யென்பான்
தன்கதிர்க் கற்றைமற் றையொளிகளைத் த[illegible]ர்க்குமாபோல்
மன்புகழ்பெருமைநுங்கள் மரபினோர் பெருமையெல்லாம்
உன்புக ழாக்கிக்கொண்டா யுயர்குணத் துரவுத்தோளாய்

௩௭ எனவிவை யினிய மாற்ற மிசைவன பலவுங் கூறிப்
புனைகழற் புலவுவேற்கை புளினர்கோன் பொருவில்காதல்
அனையவற் கன்பு செய்தா னரவற் கன்பிலா தார்
நினைவருங் [2]குணங்கொடன்றோ விராமன் மேனிமிர்ந்தகாதல்.

(பிரதி) 1 முகத்துக் கேற்பப். 2 குணங்கடம்மா விராமன்மே.

௩௮ அவ்வழி யவனை நோக்கி யருடரு வாரி யன்ன
செவ்வழி யுள்ளத் தண்ணல் தென்றிசை செங்கை கூப்பி
எவ்வழி யுறைந்ததெம்மு னென்றலு மெயினர் வேந்தன்
இல்வழி வீர யானே காட்டுவ னெழுதி யென்றான். 2439

௩௯ காரெனக் கடிது சென்றான் கல்லிடைப் படுத்த புல்லின்
வார்சிலைத் தடக்கை வள்ளல் வைகிய பள்ளி கண்டான்
பார்மிசைப் பதைத்து வீழ்ந்தான் பருவரற் பரவை புக்கான்
வார்மணிப்புனலால் மண்ணை மண்ணுநீராட்டுங்கண்ணான்.

௪௰ இயன்றதென் பொருட்டினாலே யிடருனக்கென்றபோதும்
அயின்றனை கிழங்குங் காயு மமுதென வரிய புல்லில்
துயின்றனை யெனவு மாவி துறந்திலென் சுடருங் காசுங்
குயின்றுயர் மகுடஞ்சூடுஞ் செல்வமுங் கொள்வன் யானே.

௪௧ தூண்டர நிவந்ததோளான் பின்னருஞ்சொல்லுவானோர்
நீண்டவன் றுயின்ற சூழ[1]லிதுவெனி னிவந்த நேயம்
பூண்டவன் றொடர்ந்து பின்னே போந்தவன் பொழுதுநீத்த
தியாண்டெனவினிதுகேட்டானெயினர்கோனிதனைச்சொன்னான்

௪௨ அல்லையாண் டமைந்த மேனி யழகனு மவளுந் துஞ்ச
வில்லையூன் றியகை யோடும் வெய்துயிர்ப் போடும் வீரன்
கல்லையாண் டுயர்ந்த தோளாய் கண்கணீர் சோரக் கங்குல்
எல்லைகாண் பளவு நின்றா னிமைப்பில னயன மென்றான்

௪௩ என்பத்தைக் கேட்ட மைந்த னிராமனுக் கிளையா ரென்ற
முன்பொத்த தோற்றத் [2]தோமில் யானென்று முடிவிலாத
துன்பத்துக் கேது வானே னவனது துடைத்து நின்றான்
[3]அன்பத்துக் கெல்லையுண்டோ வழகிதென் னடிமையென்றான்

௪௪ அவ்வழி யண்ணறானு மன்றரும் பொடியின் வைகித்
தெவ்விடை யதிரி னார்க்குஞ் செருவிடைப் புளினர் கோவே
இவ்விடைக் கங்கை யாற்றி னேற்றினை [4]யாயி னெம்மை
வெவ்விடர்க் கடனின் றேற்றி வேந்தன்பால் விடுதி யென்றான்

௪௫ நன்றெனப் புளினர் வேந்த னண்ணினன் றமரை நாவாய்
சென்றனர் தருதி ரென்ன வந்தன சிவன்சேர் வெள்ளிக்
குன்றெனக் குணிக்கு மேருக் குழுவெனக் குபேரன் மானம்
ஒன்றென [5]நாணிப் பல்வே றுருவுகொண் டனைய வான.

(பிரதி) 1 விதுவென நிவந்த. 2 தோர்மேல். 3 இன்பத்துக். 4 யாகி வெம்மை. 5 னாணப்.

௪௬ நங்கையர் நடையி லன்ன நாறுறு செலவி னுவாய்
கங்கையு மிடமில் லாமை மிடைவன கலந்த வெங்கும்
அங்கொடிங் கிழித்தி யேற்று மமைதியா லமரர் வையத்
திங்கொடங் கிழித்தி யேற்று மிருவினை யென்ன லான.

௪௭ வந்தன வாம்பினுப் வரிசிலைக் குரிசில் மைந்த
சிந்தனை யாவ தென்று சிருங்கவே ரியர்கோன் செப்பச்
சுந்தர வரிவில் லானுஞ் சுமந்திரன் றன்னை நோக்கி
எந்தையித் தானை தன்னை யேற்றுதி விரைவி னென்றான்.

௪௮ குரிசில தேவ லாலக் குரகதத் தேர்வ லானும்
வரிசையில் வழாமை நோக்கி மரபுளி வகையி னேற்றிக்
கரிபரி யிரதங் காலாள் கணக்கில கரையில் வேலை
எரிமணி திரையின் வீசுங் கங்கையா [1]றேறிற் றன்றே.

௪௯ இடிபடு முழக்க மேங்க வினமழை மகர நிரை
முடிவுற முகப்ப வூழி யிறுதியின் மொய்ப்ப போலக்
கொடியொடு வங்கம் வேலைக் கூம்பொடு படர்வ போல
நெடியகை யெடுத்து நீட்டி நீந்தின நெடுங்கை வேழம்.

௫௦ சங்கமு மகர மீனுந் தரளமு மணியுந் தள்ளி
வங்கநீர்க் கடலும் வந்து தன்வழி படர்வ மானப்
பொங்குவெங் களிறு நூக்கக் கரையொரீஇப் போயிற் றம்மா
கங்கையு மிராமற் காணக் காதலித் தென்ன மாதோ 2451

௫௧ கொடிஞ்சொடு தட்டு மச்சு மாழியுங் கோத்த மொட்டும்
நெடுஞ்சுவர்க் கொடியும் யாவு நெறிவரு முறையி னீக்கி
விடுஞ்சுவர்ப் புரவி யோடும் வேறும்வே றேற்றிச் சென்ற
மடிஞ்சபி னுயிர்கள் கூட்டும் வினையென வயிரத் தேர்கள்.

௫௨ நாலிரண் டாய கோடி நவையில நாவாய் தண்ணீர்ச்
சேல்திரண் டனைய [2]வாய கதியென நிமிரச் சென்ற
பால்திரண் டனைய மெய்ய பயந்திரண் டனைய நெஞ்ச
கால்திரண் டனையகால கடுநடைக் கலினப் பாய்மா. 2453

௫௩ ஊடுறநெருக்கியோடத் தொருவர்முன் னொருவர்கிட்டிச்
சூடகத் தளிர்க்கை மாதர் தழுவினர் துவன்றித் தோன்றப்
மாடிளங் களிமால் யானை யத்தியங் [3]கடையிற் குத்தக்
கோடுகள் மிடைந்ததென்ன மிடைந்தன குவவுக்கொங்கை

(பிரதி) 1 றேறித்தன்றே. 2 வான. 3 குடையிற்.

௫௪ பாங்கினுத் தரிய மான படர்திரை தவழப் பாரின்
வீங்குநீ ரழுவந் தன்னுள் வீழ்மதக் கலுழி வெள்ளத்
தோங்கல்க டலைகடோன்ற வொளித்தவ ணுயர்ந்தகும்பம்
பூங்குழற் கங்கை நங்கை முலையெனப் பொலிந்த மாதோ.

௫௫ பொலங்குழைமகளிர்நாவாய்போக்கினொள்ளென்றுதாக்க
மலங்கின ரிரண்டு பாலு மருங்கினர் வெருவி நோக்க
அலங்குநீர் வெள்ளந் தன்னி லழுந்தலா லங்கு மிங்குங்
கலங்கின வெருவிப் பாயுங் கயற்குல நிகர்த்த கண்கள்.

௫௬ இயல்வுறு செலவி னாவா யிருகையு மெயினர் தூண்டத்
துயல்வன துடுப்பு வீசுந் துவலைகண் மகளிர் மென்றூ
சுயல்வுறு பாவை யல்கு லொளிப்பற வொளிப்ப வுள்ளத்
தயர்வுறு மதுகை மைந்தர்க் கயாவுயிர்ப் பொழிந்த தன்றே

௫௭ இக்கரை யிரைத்த சேனை யெறிகடன் முகந்த வேகி
அக்கரை யடைய வீசி வறியன வணுகு நாவாய்
புக்கலை யாழி நன்னீர் பொறுத்தன போக்கிப் போக்கி
அக்கண முவரி மீளு மகன்மழை நிகர்த்த வம்மா. 2458

௫௮ அகிலிடு தூப மன்ன வாய்மயிற் பீலி யார்த்த
முகிழுடை முரண்மாத் தண்டு கூம்பென முகிலின் வண்ணத்
துகிலொடு கொடுத்த செம்பொற் றட்டிடை தொடுத்தமுத்தம்
நகுகொடி நெடிய பாயி னறுவெனச் சென்ற நாவாய்.

௫௯ ஆனனங் கமல மன்ன மின்னென வமுதச் செவ்வாய்த்
தேனலர் குழலா ரேறு மம்பிகள் சிதறு முத்தம்
மீனென விரிந்த கங்கை விண்ணெனப் பண்ணை முற்றி
வானவர் மகளி ரூரு மானமே நிகர்த்த மாதோ. 2460

௬௦ துளிபடத் துழாவு திண்கோற் றுடுப்பிரு காலிற் றோன்ற
நளிர்புனற் கங்கை யாற்றி னடந்தெனச் செல்லு நாவாய்
களியுடை மஞ்ஞை யன்ன சனங்குழை கயற்கண் மாதர்
ஒளிரடிக் கமலந் தீண்ட வுயிர்படைத் தனவே யொத்த.

௬௧ மய்யறு விசும்பில் மண்ணின் மற்றுமோ ருலகின் முற்றும்
மெய்வினை தவமே யன்றி வேறுமொன் றுளதோ ஈழோர்
செய்வினை நாவா யேறித் தீண்டலர் மனத்திற் செல்லு
மொய்விசும் போடே மாகத் தேவரின் முனிவர் போனார்.

௧௨* அறுபதி னாயிர மக்கு[1] ரோணியென்
[2]றிறுதிசெய் சேனையு மெல்லை தீர்நகர்
மறுவறு மாந்தரு மகளிர் வெள்ளமுஞ்
செறிதிரைக் கங்கையின் கிடக்கச் சென்றதே. 2463

௧௩. சுழித்துநீர் வருந்துறை யாற்றைச் சூழ்படை
கழித்துநீங் கியதெனக் கள்ள வாசையை
அழித்துவே றவனிபண் டாண்ட வேந்தரை
இழித்துமே லேறினான் றானு மேறினான். 2464

* கற்றத்தார் தேவரொடுந் தொழாநின்றகோசலையைத் தொழுதுநோக்கிக்
கொற்றத்தார்குரிசிலிவ ராரென்றுகுகன்வினவவேந்தர்வைகும்
முற்றத்தான் முதற்றேவி மூன்றுலகுமீன்றானை முன்னீன்றானைப்
பெற்றத்தாற்பெருஞ்செல்வம்யான் பிறத்தலாற்றுறந்த பெரியாளென்றான்.

௧௫ என்றலுமே யடியின்மிசை நெடிதுவிழுந் தழுவானை யிவனாரென்று
கன்றுபிரி காராவின் றுயருடைய கொடிவினவக் கழற்கால் மைந்தன்
இன்றுணைவ னிராகவற்கு மிலக்குவற்கு மிளையவற்கு மெனக்கு மூத்தான்
நுன்றனைய திருநெடுந்தோட் குகனென்பா னிந்நின்ற குரிசி லென்றான்.

௧௬ நைவீரல் லீர்மைந்தீ ரினித்துயரா னாடிழந்து காடு நோக்கி
மெய்வீரர் பெயர்ந்ததுவு நலமாயிற் றன்றே விலங்கற் றிண்டோட்
கைவீரக் களிறனைய காளையிவன் றன்னோடுங் கலந்துநீங்கள்
ஐவீரு பொருவீர்போ லகலிடத்தை நெடுங்கால மளித்தி ரென்றாள்.

௧௭ அறந்தானே யென்கின்ற ளயனின்றா டனைநோக்கி யைய வன்பின்
நிறைந்தானை யுரையென்ன நெறிதிறம்பாத் [3]தன்மெய்யை நிற்ப தாக்கி
இறந்தான்றன் பெருந்தேவி யாவர்க்குந் தொழுகுலமா மிராமன் பின்பு
பிறந்தாரு முளரென்னப் பிரியாதான் றனைப்பயந்த பெரியா ளென்றான்.

௧௮ சுடுமயா னத்திடைதன் றுணையேகத் தோன்றறுயர்க் கடவி லேகக்
கடுமையார் கானகத்துக் கருணையார் கவியேகக் கழற்கான் மாயன்
நெடுமையா னன்றளந்த வுலகெலாந் தன்வசமாய் நினைந்து [4]செய்யுங்
கொடுமையா ளெங்காளை யாரிவரென் றுரைசெய்யக் குரிசில் கூறும்.

படரெலாம்படைத்தானைப்பழிவளர்க்குஞ்செவிலியைத்தன்பாழ்த்தபாவிக்
௧௯] குடரிலே நெடுங்காலங் கிடந்தேற்கு முயிர்ப்பாரங் குறைந்து தேய
உடலெலா முயிரிழந்த வெனத்தோன்று முலகத்தே யொருத்தி யன்றே
இடரிலா முகத்தானை யுணர்ந்திலையோ விந்நின்றா னென்னை யீன்றாள்.

(பிரதி) 1 ரோணியின். 2 இறுதிசெய். 3 தன்மை யுண்மை.
4 செய்க.

எ0 *என்னக் கேட்டவி ரக்கமில் லாளையும்
தன்னற் கையின்வ ணங்கினன் றாயென
அன்னப் பேடுசி றையில [1]தாய்க்கரை
துன்னிற் றென்னவும் சென்றது தோணியே. 2471

எக இழிந்த தாயர்சி விகையி னேகத்தான்
பொழிந்த கண்ணிற்பு துப்புனற் போயினான்
ஒழிந்தி லான்குக னுமுட னேகினான்
கழிந்த நண்பகற் காவதங் காவினே. 2472

எஉ பரத்தி [2]னீங்கும்ப ரத்துவ னென்னும்பேர்
வரத்தின் மிக்குயர் மாதவன் வைகிடம்
அருத்தி கூரவ னாகினா னண்டவன்
விருத்தி வேதிய ரோடுடன் மேவினான். 2473

கஉ. கங்கை காண் படலம் முற்றும்

கங. திருவடி சூட்டு படலம்

க வந்த மாதவத் தோனையம் மைந்தனுந்
தந்தை யாமெனத் தாழ்ந்துவ ணங்கினான்
இந்து மோலிய னானுமி ரங்கினான்
அந்த மில்நலத் தாசிகள் கூறினான். 2474

உ எடுத்த மாமுடி சூடிநின் பாலியைங்
தடுத்த பேரர சாண்டிலை யையநீ
முடித்த வார்சடைக் கற்றையை மூசுதூ
சுடுத்து நண்ணுதற் [3]குற்றுள யாவதோ. 2475

ங சினக்க [4]டுப்பினச் சீற்றவெந் தீயினான்
மனக்க டுப்பினன் மாதவத் தோங்கலை
எனக்க டுப்பது செய்திலை யென்றசொல்
உனக்க டுப்பதன் றாலுர வோயென்றான். 2476

ச மறையின் கேள்வற்கு மன்னிளந் தோன்றல்பின்
முறையி னீங்கி முழுநிலங் கொள்கிலேன்
இறைவன் *கொள்கில னாமெனி லாண்டெலாம்
உறைவன் கானத்தொ ருங்குட னேயென்றான். 2477

(பிரதி) 1 வாய்க்கரை. 2 னிற்கும். 3 குற்றுளதி. 4 டுப்பின்.

௫ உரைத்த வாசகங் கேட்டலு முள்ளெழுந்
திரைத்த காதலி ருந்தவத் தோர்க்கெலாங்
குரைத்த மேனியொ டுள்ளங்கு ளிர்ந்தவால்
அரைத்த சாந்துகொண் டப்பிய தென்னவே. 2478

௬ ஆய காலையி லையனைக் கொண்டுதன்
றூய சாலு றையிடந் துன்னினன்
நேய செல்வக மைப்பொடு விருந்தெனாத்
நியதி னுருதி செங்கையி னேர்ச்சினன். 2479

௭ துறந்த செல்வ [1]னிணையத் துறக்கந்தான்
பறந்து வந்து படிந்தது பல்சனம்
பிறந்து வே றொரு லகுபெற் றாரென
மறந்து வைகினர் முன்னர்த்தம் வாழ்வெலாம். 2480

௮ நந்த லில்லற நந்தின ராமென
அந்த ரத்தின ரம்பைய ரன்பினர்
வந்து வந்தெதி ரேத்தினர் மைந்தரை
இந்து விற்சுடர் கோயில்கொண் டேகினர். 2481

௯ நான நன்குரைத் தார்நளிர் வானிடை
ஆன கங்கைய கன்புன லாட்டினர்
கான மாமணிக் கற்பகந் தாங்கிய
ஊன மின்மல ராடை யுடுத்தினர். 2482

௧௦ கொம்பி னின்றறு டங்குறு கொள்கையார்
செம்பொ னின்கல ராசி திருத்தினர்
அம்ப ரத்தின ரம்பைய ரன்னவர்
உம்பர் கோனுக ரின்னமு தூட்டினர். 2483

௧௧ அஞ்ச டுத்தவ மளிய லத்தகப்
பஞ்ச டுத்தப ரிபுரப் பல்லவ
நஞ்ச டுத்தந யனியர் நவ்வியிற்
றுஞ்ச வத்தணை மைந்தருந் துஞ்சினர். 2484

௧௨ ஏந்து செல்வத்தி மையவ ராமெனக்
கூந்த [2]றெய்வம களிர்கொண் டாடினர்
வேந்த [3]ராதிசி வினையின் வீங்குதோண்
மாந்தர் [4]காறும்வ ரிசைவ ழாமலே. 2485

(பிரதி) 1 னிணைப. 2 லேழை. 3 ராதியர். 4 காறு மவரின்.

கங நந்த நந்த வனங்களி னுண்மலர்க்
கந்த முந்திய கற்பகக் காவினின்
றந்தர் வந்தென் வந்திதன் கைதர
மந்த மந்த நடந்தது வாடையே. 2486

கச மான்ற ளிக்குல மாமதம் வந்துணத்
தேன்ற ளிர்த்தக வளமுஞ் செந்தளிர்
கான்ற நெற்றமைக் கற்றையுங் கற்பகம்
ஈன்ற ளிக்கநு கர்ந்தன யானையே. 2487

கரு [1]நரக தர்க்கற நல்கு நலத்திவிர்
கரக தக்கரி கானிமிர்ந் துண்டன
மரக தத்திரை கொழுந்தென வார்ந்தபுல்
குரக தத்தின்கு மாங்களுங் கொண்டவே. 2488

கசா மாதர் யாவரும் வானவர் தேவியர்
கோதில் செல்வத்து வைகினர் கொவ்வைவாய்த்
தீதில் செல்வம டந்தையர் சேடியர்
தாதி மாரெனத் தம்பணி கேட்பவே. 2489

கஎ இன்ன ரின்னணம் யாவருமிந்திரன்
துன்னு போகங்க டுய்த்தனர் தோன்றருன்
அன்ன காயுங்கி ழங்குமுண் டப்பகற்
பொன்னின் மேனிபொ டியுறப் போக்கினன். 2490

கஅ நீல நல்லிரு ளீங்கலு நீங்குறும்
மூல மில்கன விற்றிரு [2]முற்றுற
ஏல நல்வினை துய்ப்பவர்க் கீறுசெல்
கால மென்னக் கதிரவன் றோன்றினன். 2491

ககூ ஆறி நின்றற மாற்றலர் வாழ்வெனப்
பாறி வீய்ந்தது செல்வம் பார்ந்திலர்
தேறி முந்தைத்தஞ் சிந்தைய ராயினு
மாறி வந்து பிறந்தன்ன மாட்சியார். 2492

உ0 *காலையென் றெழுந்தது கண்ட வானவர்
வேலையன் றனிகமே யென்று விம்முறச்
சோலையுங் கிரிகளுஞ் சுண்ண மாயெழப்
பாலைசென் றடைந்தது பரதன் சேனையே. 2493

(பிரதி) 1 நரகதற்கற. 2 முந்துற.

உக எழுந்தவத் துகளதி னெரியும் வெய்யவன்
அழுந்தின னவிப்பரும் வெம்மை யாறினுன்
பொழிந்தன கரிமதம் பொடிவெங் கானகம்
இழிந்தன வழிநடந் தேரு ணுமையே. 2494

உஉ வடியுடை யயிற்படை மன்னர் வெண்குடை
செடியுடை நெடுநிழல் செய்த தீப்பொறி
படியுடைப் பரலுடைப் பாலே மேலுயர்
கொடியுடைப் பந்தரிற் குளிர்ந்த தெங்குமே. 2495

உ௩ பெருகிய செல்வநீ பிடியென் ருள்வயிற்
றிருகிய சீற்றத்தாற் செம்மை யாணிறங்
கருகிய வண்ணலைக் கண்டு காதலின்
உருகிய தளிர்த்தன வுலவை யிட்டமே. 2496

உ௪ வன்றெறு பாலேயை மருத மாமெனச்
செல [illegible] சித்திர கூடஞ் சேர்ந்தது
ஒன்றுரைத் துயிரினு மொழுக்க நன்றெனப்
பொன்றிய புரவலன் பொருவில் சேனையே. 2497

உ௫ தூளியின் படலேயுந் துரகத் தோதையும்
மூளிருஞ் சினக்காி முழங்கு மோதையும்
ஆளியின் குழுவினே ராா வாரமுங்
கோளிரும் படையிதென் றுணரக் கூறவே. 2498

உ௬ எழுந்தன னிளேயவ னேறினு னிலங்
கொழுந்துயர்ந் தனையதோர் நெடிய குன்றின்மேற்
செழுந்திரைப் பரவையைச் சிறுமை செய்தவக்
கழுந்துடை வரிசிலைக் கடலே நோக்கினுன். 2499

உ௭ பரதனிப் படைகொடு பார்கொண் [1]டாண்மறங்
கருதியுட் கிடந்ததோர் கறுவு காந்தலால்
விரதமுற் றிருந்தவன் மேல்வந் தானிது
சரதமற் றிலதெனத் தழங்கு சீற்றத்தான். 2500

உ௮ குதித்தனன் பாரிடைக் குவடு நீறெழ
மிதித்தன னிராமனை விரைவி னெய்தினுன்
மதித்திலன் பரதனின் மேல்வந் தான்மதிட்
பதிப்பெருஞ் சேனையும் பரபபி னுனெ. 2501

(பிரதி) 1 டான்மறங்.

உக கட்டினன் சுரிகையுங் கழலும் பல்கணைப்
புட்டிலும் பொறுத்தனன் கவசம் பூட்டமைத்
திட்டன னெடுத்தனன் வரிவி லேந்தலைத்
தொட்டடி வணங்கினின் றினைய சொல்லினன். 2502

கூ0 இருமையு மிகழ்ந்தவப் பரத னேந்துதோட்
பருமையு மன்னவன் படைத்த சேனையின்
பெருமையு [1]நின்னொரு பின்பு வந்தவென்
ஒருமையுங் கண்டினி துவத்தி யுள்ளநீ 2503

கூக படரெலாம் படிபடப் பரும யானையின்
திடரெலா முருட்டின தேரு மீர்த்தன
குடரெலாந் திரைத்தன குருதி யாறுகள்
கடலெலா நிறைப்பன பலவுங் காண்டியால். 2504

கூஉ கருவியுங் கைகளுங் கவச [2]மார்பமும்
உருவின வுயிரினோ டுதிரந் தோய்வில
தெரிவன சுடாக்கணை திசைக்கை யானைகள்
வெருவரச் செல்வன காண்டி வீரநீ. 2505

கூகூ கோடகத் தேர்படு குதிரை தாவிய
ஆடகத் தட்டிடை யலகை யற்றுகு
கேடகத் தடக்கைகள் கவ்விக் கீதத்தின்
நாடக நடிப்பன காண்டி நாதநீ. 2506

கூச பண்முது களிற்றொடு பரந்த சேனையின்
எண்முத லறுத்துநா னிமைப்பி னீக்கலால்
விண்முது குளுக்கவும் வேலை யாடையாள்
மண்முது காற்றவுங் காண்டி வள்ளனீ. 2507

கூரு நிவந்தவான் குருதிக ணீந்தி நீந்தமேற்
சிவந்தசா தகரொடு சிறுகட் கூளியுங்
கவந்தமு முலகுநின் கைய தாயதென்
றுவந்தன குனிப்பன காண்டி யும்பர்போல். 2508

கூசு சூழிவெங் கடகரி துரக ராசிகள்
பாழிவன் புயத்திகல் வயவர் பட்டற
வாழிவெங் குருதியா லழுந்த வேலையவ்
வேழுமொன் றுகநின் றிரைப்பக் காண்டியால். 2509

(பிரதி) 1 முன்னொரு. 2 மாரமும்.

௩௭ தழைத்தவான் சிறையன தளையுங் கவ்வின
அழைத்தவான் பறவைக ளலங்கு பொன்வடிம்
பிழைத்தவான் பகழிபுக் கிரு மார்பிடைப்
புழைத்தவான் பெருவழி போவ காண்டியால். 2510

௩௮ ஆளற வலங்குதே ரழிய வாடவர்
வாளற வரிசிலை துணிய மாக்கரி
தாளறத் தலையறப் புரவி தாரொடுந்
தோளற வடிக்கணை தொடுப்பக் காண்டியால். 2511

௩௯ [1]ஒருமகள் காதலிவ் வுலகை நோய்செய்த
பெருமக னேவலிற் பரதன் முன்பெறும்
இருநில மாள்கைவிட் டின்றென் னேவலால்
அருநர காள்வது காண்டி யாழியாய். 2512

௪௦ வையகந் துறந்துவந் தடவி வைகுதல்
எய்திய துனக்கென நின்னை யீன்றவள்
நைதல் கண்டுவந்தவ ணவையி னோங்கிய
கைகயன் மகள்விழுந் தரற்றக் காண்டியால். 2513

௪௧ அரஞ்சுட வழனிமி ரலங்கல் வேலினாய்
விரைஞ்சொரு நொடியினிவ் வனிக வேலையை
உரஞ்சுடு வடிக்கணை யொன்றில் வென்றுமுப்
புரஞ்சுடு மொருவனிற் பொலிவன் யானென. 2514

௪௨ இலக்குவ வுலகமோ ரேழோ டேழுநீ
கலக்குவ னென்பது கருதி னலது
விலக்குவ தருமையாம் விளம்ப வேண்டுமோ
புலக்குரித் தொருபொருள் புகலக் கேட்டியால். 2515

௪௩ நங்குலத் துதித்தவர் நவைக ளீங்கினார்
எங்குலப் புறுவர்க ளெண்ணில் யாவரே
தங்குலத் தொருவருந் தரும நீங்கினார்
பொங்குலத் திரளொடும் பொருத தோளினாய். 2516

௪௪ எனைத்துள மறையவை யியம்பற் பாலவோ
பனைத்திரள் கரக்கரிப் பரதன் செய்கையே
அனைத்திற மல்லன வய்ய வன்னது
நினைக்கிலை யென்வயி னேய நெஞ்சினால். 2517

(பிரதி) 1 ஒருமகன்.

சரு பெருமக னேவலிற் பிறந்த காதலின்
வருமென நினைகையு மண்ணை யென்வயிற்
றருமென நினைகையுந் தவிர்த்துத் தானையாற்
பொருமென நினைகையும் புலமைப் பாலதோ. 2518

சசு பொன்றொடும் பொருகழற் பரதன் போந்துதான்
நன்னெடும் பெரும்படை நல்க வின்றியே
என்றொடும் பொருமென் வியம்பற் பாலதோ
மின்றொடும் பொருவுற விளங்கும் வேலினாய். 2519

சஎ சேனையர் தருமத்தி னறிவைச் செம்மையின்
ஆணியை யன்னது நினைக்க லாகுமோ
பூணியல் மொய்ம்பினாய் போந்த தீண்டெனைக்
காணிய நீயது பின்னுங் காண்டியால். 2620

சஅ என்றன னிளவலை நோக்கி யேந்தலும்
நின்றனன் பரதனு நிமிர்ந்த தானையைப்
பின்றரு கென்றுதன் பிரிவில் காதலிற்
றன்றுணைத் தம்பியுந் தானு முந்தினான். 2521

சகூ தொழுதுயர் கையினன் றுவண்ட மேனியன்
அழுதழி கண்ணின னவல மீதென
எழுதிய படிவமொத் தெய்து வான்றனை
முழுதுணர் சிந்தையான் முடிய நோக்கினான். 2522

ருo கார்ப்பெரு மேனியக் கண்ணன் காட்டினான்
ஆர்ப்புறு வரிசிலை யிளைய வையனைத்
தேர்ப்பெருந் தானையப் பரதன் சிறிய
போர்ப்பெருங்கோலத்தைப் பொருந்த நோக்கென்றான்.

ருக எல்லொடுங் கியமுகத் திளவ னின்றனன்
மல்லொடுங் கியபுயத் தவனை வைதெழுஞ்
சொல்லொடுஞ் சினத்தொடு முணர்வு சோர்தர
வில்லொடுங் கண்ணினீர் நிலத்து வீழவே. 2524

ருஉ கோதறத் தவஞ்செய்து குறிப்பி னெய்திய
நாதனைப் பிரிந்துத னலத்தி னீங்கினாள்
வேதனைத் திருமகள் மெலிகின் றாள்விடு
தூதெனப் பரதனுந் தொழுது முன்சென்றான். 2525

௫௩ அறந்தனை நினைந்திலை யருளு நீத்தனை
துறந்தனை முறைமையு மென்னுஞ் சொல்லினுன்
மறந்தனன் மலரடி வந்து வீழ்ந்தனன்
இறந்ததன் முதையை யெதிர்கண் டென்னவே. 2526

௫௪ உண்டுகொ லுயிரென வொடுங்கி னுனுருக்
கண்டன னின்றனன் கண்ணன் கண்ணெணும்
புண்டரீ கம்பொழி புனலவன் சடா
மண்டல நிறைந்துபோய் வழிந்து சோரவே. 2527

௫௫ அயாவுயிர்த் தழுகணீ ரருவி மார்பிடை
உயாவுறத் திருமன முருகப் புல்லினுன்
நியாயமத் தனைக்குமோர் நிலைய மாயினுன்
தயாமுத லறத்தினைத் தழீஇய தென்னவே. 2528

௫௬ புல்லின னின்றவன் புனைந்த வேடத்தைப்
பல்முறை நோக்கினுன் பலவு முன்னினுன்
அல்லவி னழுங்கினை யைய வாளுடை
மல்லுயர் தோளவன் வலிய னேவென்றுன். 2529

௫௭ அரியவ னுரைசெயப் பரத னையநின்
பிரிவெனும் பிணியினு லென்னைப் பெற்றவக்
கரியவன் வரமெனுங் கால னுற்றனக்
குரியமெய் நிறுவிப்போ யும்ப ரானென்றுன். 2530

௫௮ விண்ணிடை யடைந்தன னென்ற வெய்யசொற்
புண்ணுழை யயிலெனச் செவிபு காமுனங்
கண்ணொடு மனஞ்சுழல் கறங்கு போலவன்
மண்ணிடை விழுந்தனன் வானி னும்பரான். 2531

௫௯ இருநிலஞ் சேர்ந்தன னிறையு யிர்த்திலன்
உருமினை யரவென வுணர்வு நீங்கினுன்
அருமையி னுயிர்வர வயர்வு யிர்த்தகம்
பொருமினன் பன்முறை புலம்பி னனரோ. 2532

௬௦ *நந்தா விளக்கனைய நாயகனே நானிலத்தோர்
தந்தாய் தனியறத்தின் றயே தயாநிலையே
எந்தா யிகல்வேந்த ரேறே யிறந்தனையோ
அந்தோ வினிவாய்மைக் காருளரோ மெய்யுற்றுர். 2533

௬௧ சொற்பெற்ற நோன்பிற் றுறையோ னருள்வேண்டி
நற்பெற்ற வேள்வி [1]நவைநீங்க நீயியற்றி
எற்பெற்ற நீபெற்ற தின்னுயிர்போய் நீங்கவோ
கொற்பெற்ற வெற்றிக் கொலைபெற்ற கூர்வேலோய்.

௬௨ மன்னுயிர்க்கு நல்குரிமை மண்பார நான்சுமக்கப்
பொன்னுயிர்க்குந்தாரோய் பொறையுயிர்த்தவா றிதுவோ
உன்னுயிர்க்குக் கூற்றா யரசாள வுற்றேனே
[2]மின்னுயிர்க்குத் தீவாய் வெயி லுயிர்க்கும் வெள்வேலோய்.

௬௩ எம்பரத்த தாக்கி யரசுரிமை யிந்தியங்கள்
தம்பரத்த தாக்கித் தவமிழைத்த வாறிதுவோ
சம்பரப்பேர்த் தானவனைத் தள்ளிச் சதமகற்கன்
றம்பரத்தி னீங்கா [3]வரசீந்த வாழியாய். 2536

௬௪ வேண்டு திறத்தாரும் வேண்டா வரசாட்சி
பூண்டிவ் வுலகுக் கிடர்கொடுத்த புல்லனேன்
மாண்டு முடிவதல்லால் மாயா வுடம்பிதுகொண்
டாண்டு வருவதினி யார்முகத்தே நோக்கவோ. 2537

௬௫ தேனடைந்த சோலைத் திருநாடு கைவிட்டுக்
கானடைந்தே னென்னத் தரியாது காவலநீ
வானடைந்தா யின்ன மிருந்தேனான் வாழ்வுவந்தே
ஊனடைந்த தெவ்வ ருயிரடைந்த வொள்வேலோய். 2538

௬௬ வண்மையு மானமும் வானவர்க்கும் பேர்க்ககலாத்
திண்மையுஞ் செங்கோ னெறியுந் திறம்பாத
உண்மையு மெல்லா முடனேகொண் டேகினையோ
தண்மை தகைமதிக்கு [4]மீந்த தனிக்குடையோய். 2539

௬௭ என்றெடுத்துப் பற்பலவும் பன்னி யிடருழக்குங்
குன்றெடுத்த போலுங் குவவுத்தோட் கோளரியை
வன்றடக்கைத் தம்பியரும் வந்தடைந்த மன்னவருஞ்
சென்றெடுத்துத் தாங்கினார் மாவசிட்டன் றேற்றினான்.

௬௮ பன்னரிய நோன்பிற் பரத்துவனே யாதியாம்
பின்னுசடை யோரும் பேருலக மோரேழின்
மன்னவரு மந்திரிய ரெல்லோரும் வந்தடைந்தார்
தன்னுரிமைச் சேனைத் தலைவோரும் வந்தடைந்தார். 2541

(பிரதி) 1 நவையறநின் கண்ணியற்றி. 2 மின்னுயிர்த்துத்.
3 வரசெய்ந்த. 4 மீய்ந்த தனிக்கொடையோய்.

சூசு மற்றும் வரற்பால ரெல்லாரும் வந்தடைந்து
சுற்று மிருக்கு மமைதியினிற் றுன்புழக்குங்
கொற்றக் குரிசின் முகநோக்கிக் கோமலரோன்
பெற்ற பெருமைத் தவமுனிவன் பேசுவான். 2542

எ0 *துறத்தலு நல்லறத் தொழிலு மல்லது
புறத்தொரு பொருளிலை பொருந்து மன்னுயிர்
இறத்தலும் பிறத்தலு மியற்கை யென்பதை
மறத்தியோ மறைகளின் வரம்பு கண்டநீ. 2543

எக உண்மையில் பிறவிக ளுலப்பில் கோடிகள்
தண்மையில் வெம்மையிற் றழுவி னுரெனும்
வண்மையை நோக்கிய வலிய கூற்றின்பாற்
[1]கண்மையு முண்டெனக் கருதற் பாலதோ. 2544

எஉ பெறுவதன் முன்னுயிர் பிரிதல் காண்டியால்
மறுவறு சிறப்பினில் வையம் யாவையும்
அறுபதி னுயிர மாண்டு மாண்டவன்
இறுவது கண்டதற் கிரங்க வொண்ணுமோ. 2545

எங சீலமுந் தருமமுஞ் சிதைவில் செய்கையுஞ்
சூலமுந் திகிரியுஞ் சொல்லுந் தாங்கினர்
மூலம்வந் துதவிய மூவர்க் காயினுங்
காலமென் றொருவலை கடக்க லாகுமோ. 2546

எச கண்முதற் காட்சிய கரையி லாதன
உண்முதற் பொருட்கெலா மூற்ற மாயின
மண்முதற் பூதமு மாயு மென்றபோ
தெண்முத லுயிர்க்கெலா மியம்ப வேண்டுமோ. 2547

எரு புண்ணிய நறுநெயிற் பொருவில் காலமாந்
திண்ணிய திரியினில் விதிதன் றீயினில்
எண்ணிய விளக்கவை யிரண்டு மெஞ்சினுல்
அண்ணலே வீவதற் கழிவுண் டாகுமோ. 2548

எசு இவ்வுல கத்தினு மிடரு ளேகிடந்
தவ்வுல கத்தரு நரகி லாழ்ந்துதம்
வெவ்வினை துய்ப்பன விரிந்த யோனிகள்
எவ்வுல கிற்செல வென்ன லாகுமோ. 2549

(பிரதி) 1 கண்மைய. 2 சிறப்பினிவ்

எஎ உண்டுகொ லிதுவல துதவி நீசெய்வ
[1]தெண்டரு குணத்தினுய் தாதை யென்றலாற்
புண்டரீ கத்தனி முதற்கும் போக்கரும்
விண்டுவி னுலகிடை விளங்கி னனரோ. 2550

எஅ ஐயநீ யாதொன்று மவலிப் பாயலை
உய்திற மவர்க்கினி யிதனின் வேறுண்டோ
செய்வன வரன்முறை திருத்திச் சேர்ந்தபின்
கைகளா லோம்புதி கடனை லாமென்றான். 2551

எகூ விண்ணுநீர் மொக்குளின் விளியு மாக்கையை
எண்ணினீ [2]யழுங்குத லிழுதைப் பாலதாற்
கண்ணினீ ருகுத்தலிற் கண்ட தில்லையான்
மண்ணுநீ ருகுத்திநீ மலர்க்கை யாலென்றான். 2552

அ0 என்றபி னேந்தலை யேந்தி வேந்தரும்
பொன்றிணிந் தனசடைப் புனித னேடும்போய்ச்
சென்றனர் செறிதிரைப் புனலிற் செய்கென
நின்றன னிராமனு நெறியை நோக்கினான். 2553

அக புக்கனன் புனலிடை முழுகிப் போந்தனன்
தக்கவன் மறையவன் சடங்கு காட்டத்தான்
முக்கைநீர் விதியது முறையி னீந்தனன்
ஒக்கநின் றுயிர்தொறு முணவை நல்குவான். 2554

அஉ ஆனவன் செய்கடன் பிறவு மாற்றிப்பின்
மானவன் [3]மந்திரித் தலைவர் மன்னவர்
ஏனையர் பிறர்களுஞ் சுற்ற வேனெனன்
சானகி யிருந்தநற் சாலை யெய்தினான். 2555

அங எய்திய வேலையிற் றமிய ளெய்திய
தையலை நோக்கியச் சாலை நோ கினான்
கைகளிற் கண்மலர் புடைத்துக் கான்மிசை
ஐயனப் பரதன்வீழ்ந் தரற்றி னனரோ. 2556

அச வெந்துயர் தொடர்ந்தெழ விம்ம விம்மிநீர்
உந்தின நிரந்தர மூற்று மாறில
[4]சிந்திய குருதியைச் செம்மல் [5]சேந்தகண்
இந்தியங் களிலெறி கடலுண் டன்னவே. 2557

(பிரதி) 1 தெண்டருக். 2 ரழுந்துத. 3 மந்திரத். 4 சிந்தையை.
5 சேர்ந்தகண்.

௮௫ அந்நெடுந் துயருறு மரிய வீரனைத்
தன்னெடுந் தடக்கையிலி ராமன் முங்கினன்
நன்னெடுங் கூந்தலை நோக்கி நாயகன்
என்னெடும் பிரிவினுற் றுஞ்சி னனென்முன். 2558

௮௬ துண்ணெனு நெஞ்சின டுளங்கி னடுணைக்
கண்ணெனு நெடுங்கடல் கலுழி கான்றிட
[1]மண்ணெடுஞ் செல்விமேல் வைத்தகையினள்
பண்ணெனுங் கிளவியாற் பன்னி யேங்கினள். 2559

௮௭ கன்னகு திரள்புயக் கண்ணன் பின்செல
நன்னக ரொரீத்தது நடந்த கானமும்
மன்னவன் [2]றுஞ்சின னென்ற மாற்றத்தால்
அன்னமுந் துயர்க்கடற் கடிவைத் தாளரோ. 2560

௮௮ ஆயவ டன்னைநேர்ந் தங்கை யேந்தினர்
தாயரின் முனிவர்தந் தருமப் பன்னியர்
தூயநீ ராட்டினர் துயர நீக்கினர்
நாயகற் சேர்த்தினர் நவையி னீங்கினர். 2561

௮௯ [3]தேன்றருந் தெரியலச் செம்ம னல்வரை
ஈன்றவர் மூவரோ டிருமை நோக்குறுஞ்
சான்றவர் குழாத்தொடு தரும நோக்குறுந்
தோன்றல்பால் சுமந்திரன் றொழுது தோன்றினன்.

௯௰ *எந்தை யாண்டையா னியம்பு வீரென
வந்த தாயர்தம் வயங்கு சேவடிச்
சிந்த நின்றனன் சேந்த கண்ணினீர்
முந்தை நான்முகத் தவற்கு முந்தையான். 2563

௯௧ தாய ருந்தலைப் பெய்து தாந்தழீஇ
ஓய்வி றன்பின லுலறி யேங்கினர்
ஆய சேனையு மணங்க ளுங்களுந்
தீயில் வீழ்ந்தன மெழுகிற் றேம்பினர். 2564

௯௨ பின்னர் வீரரைப் பெற்ற பெற்றியப்
பொன்ன னர்களுஞ் சனகன் பூவையைத்
துன்னி மார்புறத் தொடர்ந்து புல்லினர்
இன்னல் வேலைபுக் கிடைந்த முங்குவார். 2565

(பிரதி) 1 மண்ணெனுஞ் செல்விமேல். 2 துஞ்சின 3 தேன்றகு.

௯௩ சேனை வீரருந் திருநன் மாநகர்
மான மாந்தரு மற்று ளோர்களும்
ஏனை வேந்தரும் பிறரும் யாவருங்
கோனை யெய்தினார் குறையுஞ் சிந்தையார் 2566

௯௪ படஞ்செய் நாகணைப் பள்ளி நீங்கினான்
இடஞ்செய் தங்குலத் திறைவ னாதலாற்
றடஞ்செய் தேரினான் றானு நீரினாற்
கடஞ்செய் வானெனக் கடலின் மூழ்கினான். 2567

௯௫ அன்று தீர்ந்தபின் னரச வேலையுந்
துன்று செஞ்சடைத் தவருஞ் சுற்றமுந்
தன்று ணைத்திருத் தம்பி மாரொடுஞ்
சென்று சூழவாண் டிருந்த செம்மறான். 2568

௯௬ வரதன் றுஞ்சினான் வைய மாணையாற்
சரத மின்னதே மகுடந் தாங்கலாய்
விரத வேடநீ யென்கொல் வேண்டுவான்
பரத கூறெனாப் பரிந்து கூறினான். 2569

௯௭ என்ற லும்பதைத் தெழுந்து கைதொழா
நின்று தோன்றலை நெடிது நோக்கிநீ
அன்றி யாவரே யறத்து ளோரதிற்
பின்று வாய்கொலா மென்னப் பேசுவான். 2570

௯௮ மனைக்கொன் றாதவள் வரத்தி னின்னையும்
நினக்கொன் றாநிலை நிறுவி நேமியான்
தனைக்கொன் றாடருந் தனைய னாதலால்
எனக்கொன் றாதவ மடுப்ப தெண்ணினால். 2571

௯௯ நோவ தாகவிவ் வுலகை நோய்செய்த
பாவ காரியிற் பிறந்த பாவியான்
சாவ தோர்கிலன் றவஞ்செய் வேனலேன்
யாவ னாகவிப் பழிநின் றேறுவேன். 2572

௧௦௦ நிறையி னீங்கிய மகளிர் நீர்மையும்
பொறையி னீங்கிய தவமும் பொங்கருட்
டுறையி னீங்கிய வரமுந் தொல்லையோர்
முறையி னீங்கிய வரசு முந்துமோ. 2573

க௦க பிறந்து நீயுடைப் பிரிவி றொல்லறந்
துறந்த மாதவந் தொடங்கு வாயென்றான்
மறந்து நீதியிற் [1]றிறம்பி வாளிற்கொன்
றறந்தின் றானென யான தாள்வனோ. 2574

க௦உ தொகையி லன்பினா விறைவன் றுஞ்சநீ
புகையும் வெஞ்சுரம் புகுதப் புந்தியால்
வகையில் வஞ்சனா யரசு வென்றுயான்
பகைவ னேகொலா மிறவு பார்க்கின்றேன். 2575

க௦ங உந்தை தீமையு முலகு றாதநோய்
தந்த தீவினைத் தாய்செய் தீமையும்
எந்தை நீங்கமீண் டரசு செய்கெனாச்
சிந்தை யாவதுந் தெரியக் கூறினான். 2576

க௦ச சொற்ற வாசகத் துணிவு ணர்ந்தபின்
இற்ற தோவிவன் மனமென் றெண்ணுவான்
வெற்றி வீரநான் விளம்பக் கேளென
முற்ற நோக்கினான் மொழிதன் மேயினான். 2577

க௦ரு முறையும் வாய்மையு முயலு நீதியும்
அறையு மேன்மையோ டறமு மாதியாந்
துறையுள் யாவையுஞ் சுருதி நூல்விடா
இறைவ ரேவலா வியைவ காண்டியால். 2578

க௦சு பரவு கேள்வியும் பழுதில் ஞானமும்
விரவு சீலமும் வினையின் மேன்மையும்
உரவி லோய்தொழற் குரிய தேவருங்
குரவ ரேயெனப் பெரிது கோடியால். 2579

க௦எ அந்த மில்பெருங் குரவ ராரெனச்
சிந்தை தேவுறத் தெரிய நோக்கினால்
தந்தை தாயரென் றிவர்க டாமலால்
எந்தை கூறவே றெவரு மில்லையால். 2580

க௦அ தாய்வ ரங்கொளத் தந்தை யேவலான்
மேய வெங்குலத் தரும மெய்தினேன்
நீவ ரங்கொளத் தீர்த னீர்மையோ
ஆய்வ ரும்புலத் தறிவு மேவினாய். 2581

(பிரதி) 1 திறம்புவானிற்கொன்.

௧௦௯ தனைய ராயினோர் தாதை தாயரை
வினையி னல்லசொ லிசையை [1]வேய்தலோ
நினைத லோவிடா நெடிய வன்பழி
புனைத லோவையா புதல்வ ராதரூன். 2582

௧௧௦ இம்மை பொய்யுரைத் திவறி யெந்தையார்
அம்மை வெம்மைசேர் நரக மாளயான்
கொம்மை வெம்முலைக் குவையில் வைகிவாழ்
செம்மை சேர்நிலத் தரசு செய்வனோ. 2583

௧௧௧ வரனி லுந்தைசொல வரத்தி னாலுடைத்
தரணி நின்னதென் றியைந்த தன்மையால்
உரனி னிற்பின்வந் துரிமை யாதலால்
அரசு நின்னதே யாள்தி யையநீ. 2584

௧௧௨ முன்னர் வந்துதித் துலகு மூன்றிலும்
நின்னை யொப்பிலா நீபி றந்தபார்
என்ன தாகில்யா னுனக்கின் றீய்ந்தனன்
மன்ன போந்துநீ மகுடஞ் சூடென்றான். 2585

௧௧௩ மலங்க வையகம் வருந்தி [2]வைகநீ
உலங்கொ டோளுனக் குறுவ செய்தியோ
கலங்கு றுவணங் காத்தி போந்தெனப்
பொலங்கு லாவுதாள் பூண்டு வேண்டினான். 2586

௧௧௪ பசைந்த சிந்தைநீ பரிவில் வையமென்
வசஞ்செய் தாலது முறைமை யேவசைக்
கசந்த வெந்தையா ரருள வன்றுநான்
இசைந்த வாண்டெலா [3]மன்றொ டொன்றுமோ. 2587

௧௧௫ வாய்மை யென்னுமீ தன்றி வையகந்
தூய்மை வேறுமோ ருண்மை சொல்லுமோ
தீமை தானதிற் றீர்த லன்றியே
ஆமெய் யாகவே றெண்ணு லாகுமோ. 2588

௧௧௬ எந்தை யேயவாண் டேழொ டேழனு
வந்த காலநான் வனத்து வைகநீ
தந்த பாரகந் தாங்க மேன்மையால்
அந்த நாளெலா மாளென் றாணையால். 2589

(பிரதி) 1 வெய்தலோ. 2 வைகனீ. 3 மின்றொ

ககஎ *மன்னவ னிருக்க வேசு மணியணி மகுடஞ் சூடு
கென்னயா னியைந்த தன்று னேயது மறுக்க வஞ்சி
அன்னது நினைந்து நீயென் றுணையை மறுக்க லாமோ
சொன்னது செய்தி யைய துயருழந் தயர லென்றான்.

ககஅ ஒள்ளியோ னினையவெல்லா முரைத்தலு முரைக்கலுற்ற
பள்ளநீர் வெள்ள மன்ன பரதனை விலக்கிப் பண்டு.
தெள்ளிய குலத்தோர் செய்கை சிக்குறச் சிந்தைநோக்கி
வள்ளியோய் கேட்டி யென்று வசிட்டமா முனிவன் கூறும்

ககக *இளரகன் புனலினின் றரியொர் கேழலாய்
இளையெனுந் திருவினை யெய்தி னனரோ
உளைவரும் பெருமையோ ரெயிற்றின் னுட்புரை
வளரிளம் பிறையிடை மறுவிற் றோன்றவே. 2592

கஉ0 ஆதியி னவதியி னமைதி யைம்பெரும்
பூதமும் வெளியொழித் தெவையும் புக்கபின்
நாதனிவ் வகன்புன னண்ணி நண்ணருஞ்
சோதியாந் தன்மையிற் [1] றுயில மேயினான். 2593

கஉக ஏற்றவித் தன்மையா லமரர்க் கின்னமு
தூற்றுடைக் கமலவ னுந்தி யுந்திய
நூற்றிதழ்க் கமலத்தி னெய்தின் யாவையுந்
தோற்றுவித் துதவிட முதல்வன் றோன்றினான். 2594

கஉஉ அன்றவ னுலகினை யளிக்க வாகிய
உன்றனிக் குலமுத லுள்ள வேந்தர்கள்
இன்றுள வினுமுறை யிகந்து ளாரிலை
ஒன்றுள துறையின [2] முணர்த்தல் கேட்டியால். 2595

கஉங இதவிய லியற்றிய குரவர் யாரினும்
[3] மதவியல் களிற்றினாய் மறுவில் விஞ்சைகள்
பதவிய விருமையும் பயக்கப் பண்பினால்
உதவிய வொருவனே யுயரு மென்பரால். 2596

கஉச என்றலால் யானுனை யெடுத்த விஞ்சைகள்
ஒன்றலா தனபல வுதவிற் றுண்மையால்
அன்றெலா மின்றெனா தாணை யையநீ
நன்றுபோந் தருளுனக் குரிய நாடென்றான். 2597

கஉரு கூறிய முனிவனைக் குவிந்த தாமரை
சீறிய கைகளாற் றொழுது செங்கணான்
ஆறிய சிந்தனை யறிஞ வொன்றுரை
கூறுவ துளதெனக் கூறன் மேயினான் 2598

(பிரதி) 1 துயிறல். 2 முணர்த்தக். 3 மதவிய.

௧௨௬ சான்றவ ராகநுங் குரவ ராகதாய்
போன்றவ ராகியாய்ப் புலைய ராகுறான்
றென்றரு மலருளான் சிறுவ செய்வனென்
றேன்றபி னவ்வுரை மறுக்கு மீட்டதோ. 2599

௧௨௭ தாய்பணித் துவந்தது தந்தை செய்கென
ஏயவப் பொருள்களு மிறைஞ்சி மேற்கொளாத்
தீயவப் புலையிற் செய்கை தேர்கிலா
நாயெனத் திரிபவை நல்ல வல்லவோ. 2600

௧௨௮ முன்னுறப் பணித்தவர் மொழியை யானது
சென்னியிற் கொண்டனன் செய்வ னென்றபின்
பின்னுறப் பணித்தனை பெருமை யோயெனக்
கென்னினிச் செய்வதென் றுரைசெ யீங்கென்றான்.

௧௨௯ முனிவனு முரைப்பதோர் முறைமை கண்டிலன்
இனியென விருந்தன னிளைய மைந்தனும்
அனையதே வானடவ ராள்க நாடு நான்
பனிபடர் காடுடன் படர்தன் மெய்யென்றான். 2602

௧௩௦ அவ்வழி யிடையவ ரறிந்து கூறினர்
இவ்வழி யிராமனை யிவன்கொண் டேகுமேற்
செவ்வழித் தனதுநஞ் செயலென் றெண்ணினர்
கவ்வையர் விசும்பிடைக் கழறி னரரோ. 2603

௧௩௧ ஏத்தரும் பெருங்குணத் திராம னிவ்வழி
போத்தருந் தாதைசொற் புரக்கும் பூட்சியான்
ஆத்தவாண் டேழினோ டேழு மந்நிலங்
காத்தலுன் கடனிது கடமை யென்றனர். 2604

௧௩௨ வானவ ருரைத்தலு மறுக்கற் பாலதன்
றியானுனை யிரந்தன னீயென் னாணையால்
ஆனதோ ரவதியி னளித்தி பாரெனாத்
தானவ னறுமலர்த் தடக்கை பற்றினான். 2605

௧௩௩ ஆமெனி லேழிரண் டாண்டி லையநீ
நாமநீர் நெடுநகர் நண்ணி நானிலங்
கோமுறை புரிகிலை யென்னிற் கூரெரி
சாமது சரதமின் னாணை சாற்றினேன். 2606

௧௩௪ என்பது சொல்லிய பரதன் யாதுமோர்
துன்பில னன்னது துணிவை நோக்கினான்
அன்பினி னுருகின னன்ன தாகென்றான்
தன்புகழ் தன்னினும் பெரிய தன்மையான். 2607

௧௩௫ விம்மினன் பரதனும் வேறுசெய்வ தொன்
றின்மையி னரிதென வெண்ணி யேங்குவான்
செம்மைநின் றிருவடித் தலந்தந் தீகென
எம்மையுந் தவிர்ப்பன விரண்டு நல்கினான். 2608

௧௩௬ அடித்தல மிரண்டையு மழுத கண்ணினன்
முடித்தல மிவையென முறையிற் சூடினான்
படித்தலத் திறைஞ்சினன் பரதன் போயினான்
பொடித்தல மிலங்குறப் பொலங்கொண் மேனியான்.

௧௩௭ ஈன்றவர் முதலிய வெண்ணில் சுற்றமுஞ்
சான்றவர் குழுவொடு தவத்து ளோர்களும்
வான்றரு சேனையு மற்றுஞ் சுற்றற
மூன்றுநூல் கிடந்ததோண் முனியும் போயினான். 2610

௧௩௮ பண்டைநூ றெரிபரத் துவனும் போயினான்
மண்டுநீர் நெடுநகர் மாந்தர் போயினர்
எண்டிசை வாணரு மிரங்கிப் போயினர்
கொண்டல தானையாற் குகனும் போயினான். 2611

௧௩௯ பாதுகந் தலைக்கொடு பரதன் பைம்புனல்
மோதுகங் கையின்கரை கடந்து முந்தினான்
போதுகுங் கடிபொழி லயோத்தி புக்கிலன்
ஓதுகங் குலினெடி துறக்க நீங்கினான். 2612

௧௪௦ நந்தியம் பதியிடை நாதன் பாதுகஞ்
செந்தனிக் கோன்முறை செலுத்து சிந்தையான்
இந்தியங் களையவித் திருத்தன் மேயினான்
அந்தியும் பகலுநீ ரழுத கண்ணினான். 2613

௧௪௧ குன்றினி லிருந்தன னென்னுங் கொள்கையால்
நின்றவர் நலிவரா னேசத் தாரெனத்
தன்றுணைத் தம்பியுந் தானுந் தையலுந்
தென்றிசை யிராமனுஞ் சேறன் மேயினான். 2614

திருவடி சூட்டு படலம் முற்றும்.

திரு வயோத்தியா காண்டம் முற்றும்.